நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 181 செப். 30 – ஒக். 13 1999 விலை ரூபா 10. 00.



## பேரினவாதத்தின் புதிய குறியீடு!



## புலிகள் சொல்ல வேண்டிய பதில்!

## கனடா: தற்கொலைக் கொலையாளி



காடழிக்கும் படையினர்

நன்றி - நூலகத்திட்டம்

விமானக் குண்டுடிலிருந்து தம்மைப் பாதுகாக்க

# வன்னி மக்களுக்கு சாம் - 7 கொடுப்பீர்களா?

அம்பாறை மாவட்டக் கிராமங்களில் வசிக்கும் சிங்களக் குடிமக்களுக்குத் தீவிர ஆயுதப் பயிற்சி அளித்து, நவீன ஆயுதங்களும் வழங்கும் நடவடிக்கையில் ஜனநாயகத்தின் காவலரான சந்திரிகா அரசாங்கம் இறங்கியுள்ளது. இவர்களுக்கு ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகள் வழங்கப்படுவதுடன் விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமாதானத்தை நிலைநாட்டியே தீருவேன் என்று வானளாவக் கோஷம் போட்டுக் கொள்ளும் அரசின் இந்தச் செயற்பாடானது அது எத்தகைய சமாதானத்தை நிலைநாட்டக் கங்கணம் கட்டுகிறது என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

வீட்டுக்கொரு வீரர் விரைவதும், எல்லா மக்களும் ஆயுதபாணிகளாக இருப்பதும் ராஜா ராணிக் கதைகளுக்குப் பொருந்தலாம். அது நடைமுறைக்கு எத்தகைய தீங்கானது என்பதை எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பழம்பெருமை என்ற கற்பனை கலந்த போதையில் மயங்கிக் கிடக்கும் அரசியல்வாதிகளின் முடிவுகள், நாட்டை மிக மோசமான சீரழிவுக்கு இட்டுச் செல்லுமேயன்றி நன்மையெதையும் தரப் போவதில்லை.

சமாதானத்தில் இதயபூர்வமான நாட்டமுள்ள எவரும் படைகளின் பெருக்கத்தைக் கூட விரும்ப மாட்டார்கள். படைகளின் பெருக்கமும், அவற்றின் வல்லாதிக்கமும் எவ்வளவு தூரம் தீங்கானது என்பதற்கு உதாரணம் தேடி எங்கேயும் போக வேண்டியதில்லை. இலங்கை படும் பாடே போதும். நாட்டில் நடக்கும் கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்கும், பாதாள உலகக் குழுக்களின் திறமையான செயற்பாடுகளுக்கும் படைகளிலிருந்து தப்பியோடுபவர்களும், அவர்களது ஆயுதங்களுமே பிரதான காரணம் என அரச அறிக்கைகளே கூறுகின்றன. அதேபோல் வடக்கு கிழக்கில் ஆயுதபாணிகளான இளைஞர்கள் ஒருவரையொருவர் அழிப்பதும், ஆயுதப் பயிற்சியின் பிரதிபலிப்பே என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கட்டுக்கோப்பாகச் செயற்படுவதாக அரசு தம்பட்டமடித்துக் கொள்ளும் படைகளின் போக்கே இப்போது சரியில்லையென்ற அபிப்பிராயம் தான் சாதாரண சிங்கள, மக்களிடம் கூட காணப்படுகிறது. நாளையே இந்த யுத்தம் முடிவடைந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் எத்தனை படைவீரர்கள் தற்போது அனுபவித்து வரும் சொகுசையும், அதிகாரத்தையும் இழக்கத் தயாராக உள்ளனர் என்பதும் பெரிய கேள்வி தான்.

இராணுவத்துக்கு அதிகாரங்களை மெல்ல மெல்ல வழங்கிய நாடுகள் பல, இறுதியில் அரசையே இராணுவத்திடம் தாரை வார்த்து விட்டுத் தவிக்கும் நிலை உலக அரங்கில் சாதாரண நிகழ்வு தான்.

முகாம்களுக்குள் வைத்து பேணப்படும் கட்டுக்கோப்பான படைகளே தாம் பெற்ற ஆயுதப் பயிற்சியைத் தவறாகப் பயன்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் கல்வி அறிவோ, உலக அறிவோ போதுமான அறிவு இல்லாத மக்களுக்கெல்லாம் ஆயுதப் பயிற்சியும் கொடுத்து ஆயுதங்களையும் கையளித்தால் அதன் விளைவுகள் மிக மோசமானதாக இருக்கும் என்பது சொல்லத் தெரிய வேண்டியதில்லை.

பக்குவமற்றோர் கையிலிருக்கும் ஆயுதங்கள் பாதகச் செயல்களுக்கே துணை போகும். அரைக்காசு பெறாத சச்சரவுகள் கூட உயிர் குடிக்கும் நிலைக்கு வளர்க்கப்பட்டு விடும். ஆசைக்கு இணங்க மறுத்த பெண்ணைப் பழிவாங்க, காதலுக்குத் தடை போட்ட காதலியின் குடும்பத்தாருக்குப் பாடம் புகட்ட, வயலுக்குத் தண்ணீர் விட மறுத்த பக்கத்து வீட்டுக்காரனைத் தீர்த்துக் கட்ட என்று ஆயுதங்கள் கிராமத்திலேயே தாராளமாகப் பயன்படுத்தப்படும். இப்போதுள்ள ஊர்காவல் படை வீரர்களது ஆயுதங்கள் பல இப்படியான சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதை மறந்து விடுவதற்கில்லை.

தங்களுக்குள்ளேயே கொடூரமாக நடந்து கொள்ளும் ஆயுததாரிகள் அக்கம் பக்கத்துக் கிராமத் தமிழ் முஸ்லிம் மக்களுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை விளக்க வேண்டியதில்லை. இனப் பதற்றம் அதிகரித்து இனங்களிடையே பிளவு ஏற்படுவதற்கும் மோதல்கள் உருவாகி உயிர்கள் அழிவதற்கும் படையினரின் ஆயுதங்களை விட இத்தகைய ஆயுதங்களே அதிகமாக வழிவகுக்கின்றன.

இவ்வாறு பதற்றத்தை உருவாக்கும் வழிவகைகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டு சமாதானத்தை எவ்வாறு அரசு கொண்டு வரும் என்பது தான் பிரதான கேள்வி. இந்த ஊக்குவிப்புகள் சமாதானத்தைச் சிதறடிக்குமே தவிர இன உறவை வளர்க்க மாட்டாது என்பதை அரசு உணராமல் இருப்பது தான் வேடிக்கை.

மனிதப் படுகொலை எந்த வடிவத்தில் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவை கண்டிக்கப்பட வேண்டியவை. விடுதலைப் புலிகள் கிராம மக்களைக் கொலை செய்ததை சரியென்று யாரும் சொல்லி விட முடியாது. ஆனால், ஏன் செய்தார்கள்? இனிமேல் அவ்வாறு நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அரசு அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டுமேயொழிய அரசியல் இலாபத்துக்காக மேலும் சிங்கள மக்களைக் கொலைக் களம் நோக்கி வழிநடத்தக் கூடாது.

புண்ணுக்குப் புனுகு தடவுவது போல இனப்பிரச்சினையைத் தீர்த்து இனங்களிடையே பயமற்ற உறவை வளர்ப்பதற்குப் பதிலாக சிங்கள மக்களுக்கு ஆயுதங்களை வழங்கி ஏனைய இனமக்களிடையே பய உணர்வைத் தோற்றுவிக்க முயல்வது "விடுதலைப் புலிகளால் தான் எங்களைக் காப்பாற்ற முடியும். அரசை நம்பிப் பயனில்லை" என்ற மனோபாவத்தைத் தமிழ் மக்களிடையே வளர்த்து அவர்கள் பக்கம் சார வைக்கும் முயற்சியாகி விடும். அதன் பிறகு "விடுதலைப் புலிகளுக்கு உதவாதீர்கள். உங்கள் பிள்ளைகளை நல்ல பிரஜைகளாக வாழ வையுங்கள்" என்று துண்டுப் பிரசுரம் வெளியிடுவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அரசும் அரசைச் சார்ந்தவர்களும் தங்கள் வயிற்றை வளர்த்துக் கொள்வதற்காக நாட்டு மக்களைப் பலிக்கடாக்களாக்கும் முயற்சியை இனிமேலாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். இராணுவ முகாம்களையே நிர்மூலமாக்கி ஆயுதங்களை அபகரித்துச் செல்லும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை சில வாரங்கள் பயிற்சி பெற்ற கிராமத்து இளைஞர்கள் தடுத்து நிறுத்தி விடுவார்கள் என்று அரசு நம்புவது ஒரு பகற்கனவே. இந்த இளைஞர் வசம் இருக்கும் ஆயுதங்கள் கூட அவர்கள் தாக்கப்படுவதற்குக் காரணமாகலாம் என்பதை அரசு மறந்து விடக் கூடாது.

எவ்வித குற்றமும் இழைக்காத சாதாரண சிங்களக் குடிமக்கள் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முறியடிக்க அவர்களுக்கு ஏ.கே.47 கொடுத்து ஆயுதப் பயிற்சி வழங்குவது நியாயம் என்றால், எவ்வித குற்றமும் இழைக்காத சாதாரண வன்னித் தமிழ் மக்களுக்கும் தம்மேல் அரச விமானங்கள் குண்டு பொழிவதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள சாம் -7 ஏவுகணை வழங்குவது தானே நியாயம்? அரசு கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நல்லது.

- திரிபுரன்

திருமலை:

# சமாதானம் வேண்டுமா? வளைந்து கொடு!

செப்டெம்பர் 14 ல் சமாதான நகரப் பிரகடனம் திருகோணமலையில் தடல்புடலாக நடந்தேறியது. யாருக்குச் சமாதானமும், நிம்மதியான வாழ்வும் தேவையோ அவர்கள் எவரும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதபடி பலமான காவல் போட்டு விட்டு, அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சமாதானத்தைப் பற்றி வாய் கிழியப் பேசியிருக்கிறார்கள்.

நகரத்தின் திறவுகோல் (?) சம்பிரதாயபூர்வமாக நகராட்சி மன்றச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. அவரும் வாங்கி வைத்துக் கொண்டார்.

சமாதானத்தில் நம்பிக்கையுள்ள இந்த மகாத்மாக்கள் ஊர் மக்களை அன்று நம்பவே இல்லை. பல வீதிகளில் பொதுமக்கள் நடமாட அனுமதிக்கப்படவில்லை. விழா நடைபெறுமிடம் பாதுகாப்பு வலயமாகத் தற்காலிகப் பிரகடனம் செய்யப்பட்டதோ என்னவோ அந்த வீதிப் பக்கம் பொதுமக்களைக் காணவேயில்லை. அந்தளவு இராணுவக் கெடுபிடி. இராணுவத்தையும், பொலிசாரையும் அவர்கள் கொண்டிருக்கும் ஆயுதங்களையும் நம்பியே சமாதானப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது, அரசு வன்னியில் சமாதானத்தை வாழ வைக்கக் கொண்டிருக்கும் எத்தனங்களுக்குச் சற்றும் முரண்படாத செயல்முறையாகவே காணப்படுகிறது.

இது பற்றி முதியவர் ஒருவர் பெருமூச்சு விட்டபடி கூறினார். "தம்பி சீப்பை ஒளித்து விட்டால் கல்யாணம் நின்று விடாது என்று கூறுவார்கள். ஆனால், இவர்களோ மணமக்களையே ஒளித்து வைத்து விட்டு வெறும் சீப்புக்கள் கூடி கலியாணம் நடத்துகிறார்கள். பணம் செலவழித்து, உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவி உண்மையைக் கொன்று புதைத்து நடக்கும் பொம்மைக் கலியாணம் இது".

சமாதானப் பிரகடனத்தின் முதல் நாள் அதிகாலையில் மூதூர் சாபி நகர் பொலிஸ் அரண் புலிகளால் வெற்றிகரமாக நிர்மூலமாக்கப்பட்டது. இரு பொலிசார் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். ஆயுதங்கள் அபகரித்துச் செல்லப்பட்டன. புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டாம் நாள் இரவு - புதன்கிழமை 9.30 மணியளவில் கடலிலிருந்து சரமாரியாகக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சம்பூர் கிராமத்தை உலுக்கிய இந்தத் தாக்குதலால் பல வீடுகள் உடைந்தன. கனகரத்தினம் (60) என்பவரும் அவர் மனைவி விமலேஸ்வரி (48) என்பவரும் காயமடைந்தனர். உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. கடலில் இருந்தபடியே இரவு வேளையில் சம்பூர் கிராமத்தைக் கடற்படையினர் தாக்கியதற்கு எவ்வித காரணமும் இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் நடமாட்டம் சம்பூரில் இருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையிலேயே மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்த நாள் கிண்ணியாவில் இரு பொலிசார் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர். வழக்கம் போல சீனக்குடா பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டரும், மூன்று பொலிசாரும் ஒரு ஊர்காவற்படை வீரரும் ஜீப்பில் பொலிஸ் காவலரண்களைக் கண்காணித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரவு நேரம். தூரத்தே இரண்டு மாட்டு வண்டிகள் நின்றிருக்கின்றன. சட்டவிரோதமான காரியங்களில் யாரும் ஈடுபடுகிறார்களோ என்ற ஐயத்தில் இரு பொலிஸ்காரரை அனுப்பி என்னவென்று அறிய முற்பட்டிருக்கிறார் இன்ஸ்பெக்டர். போனவர்கள் சுடப்பட்ட போது தான் விஷயம் வேறு என்பது புரிந்தது.

இன்ஸ்பெக்டரும் ஒரு பொலிஸ்காரரும் ஊர்காவற் படைவீரரும் பின்வாங்கி விட்டனர். இரவு சுமார் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. காலையில் வந்துபார்த்தபோது இரு பொலிசாரின் சடலங்களும் ஜீப்புடன் எரியூட்டப்பட்டுக் கிடந்தன. இறந்தவர் ஒருவர் கிண்ணியாவைச் சேர்ந்தவர். ஒருவர் புத்தளத்தைச் சேர்ந்தவர். இரு சாராரினாலும் எதிர்பார்க்கப்படாத சம்பவமே இது என்கின்றனர் கிண்ணியா மக்கள்.

இவ்வாறிருக்க, மீண்டும் பாதுகாப்புத் தரப்பார் குடியிருப்பாளர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றனர். முந்தைய பதிவுகளின் போது குடியிருப்பாளர்கள் தரும் விபரங்கள் சரியானவை என விழிப்புக் குழுத் தலைவராலும் கிராம சேவகராலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இப்போது மேற்கொள்ளும் பதிவுகளில் இந்த நடைமுறைகள் கைவிடப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட படிவங்கள் மூன்று பிரதிகளில் கேட்கப்பட்ட விபரங்கள் தரப்பட்டு நேரடியாக குடும்பத் தலைவர் அந்தந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் நிலைகளுக்கு அழைக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரிவுகளில் தற்போது தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன. நிலாவெளிப் பகுதியில் இராணுவத்தால் அடையாள அட்டைகள் புதுப்பிக்கும் வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

வீதியில் சென்றால் என்ன வீட்டில் இருந்தாலென்ன, பாதுகாப்புத் தரப்பாரின் முகபாவங்களுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்ப வளைந்து கொடுத்து வாழ்வது திருகோணமலை மக்களைப் பொறுத்த மட்டில் சமாதானத்துக்கான ஒரே வழியாகப் போய் விட்டது.

விவேகி

# ஆக்கிரமிப்பின் தந்தை டி. எஸ். சேனாநாயக்க!

சரிநிகர் இதழ் 179ல் இறக்காமம் றவூப், டீ. எஸ். சேனாநாயக்க காலக் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் பற்றிப் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார். டீ. எஸ். அவர்கள் சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டே செய்தார் என்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. வேறுபட்ட கருத்து இருப்பின் அது கல்லோயாக் குடியேற்றத் திட்டம் குறித்த சூழ்ச்சியை உணர முடியாத வரலாற்றுப் பார்வைக் குறைபாடாகும்.

ராஜினியின் "முறிந்த பனை" தமிழர் வாழ்வியலில் கலந்துபோன பல முறிவுகளைத் துணிவோடு சுட்டிக் காட்டினாலும், "முறிந்த பனை" ஆசிரியர்களின் அதிமேதாவித்தனம் காரணமாகவோ அன்றி நடுநிலைப் போக்குடையோர் எனத் தம்மைச் சர்வ வாசகர்களும் நினைக்க வேண்டுமென்பதற்காகவோ என்னவோ தமது சமுதாயத்தின் மீதான திட்டமிட்ட சிதைப்பினையும், சிங்களக் குடியாதிக்கத்தையும் மேற்கொண்டவர்களைத் தக்க முறையில் இனங்காணாது சரி செய்யப்படாத சமரசத்திற்கு "முறிந்த பனை" சென்றது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியதே !

இலங்கைத் தீவினைச் சிங்கள மயமாக்கும் திட்டங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைமுறைப்படுத்தியதில் பங்கு கொண்ட ஆட்சியாளர்களில், இலங்கையின் சுதந்திரத்தின் பின்னான வரலாற்றுப் பகுதியின் முற்பகுதியைத் தனதாக்கிக் கொண்ட ஆட்சியாளர் டீ. எஸ். அவர்களே. தமிழரின் தாயகப் பிராந்தியங்கள் மீது பரவிப் பாயும் முறையிலான குடியேற்றத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியதில் டீ. எஸ். அவர்களின் பங்கு சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட நிரூபணமான விடயம்.

இறக்காமம் றவூப் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் திட்டமிடப்பட்ட முறையில் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகப் பகுதியில் நிலப் பறிப்புக்கும், அந்தப் பகுதியில் சிங்களக் குடிசன மேலாட்சிக்கும், சிங்களப் பேரினவாதம் செயற்பட்ட விதத்தை விளக்கியிருந்தார். கல்லோயாச் சிங்களக் குடியேற்றத் திட்டம் என்பதை நிரூபணப்படுத்தும் தகவல்கள் சிலவற்றை நானும் கீழே குறிப்பிடுகிறேன்.

கல்லோயாக் குடியேற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் அந்தத் திட்டம் குறித்த அரச வெளியீடுகள், பதாதைகளில் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் - சிங்களவர் (Colonisation Scheme of Gal Oya -"Sinhalese") என எழுதப்பட்டிருந்தது. இதனை அவதானித்த அப்போதைய கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கம் பாராளுமன்றத்தில் டீ. எஸ். அவர்களை நோக்கிக் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் "Sinhalese" என எழுதப்பட்டிருக்கின்றதே, இதன் அர்த்தம் என்ன? சிங்களவர்களுக்கு மட்டுமா இந்தக் குடியேற்றத் திட்டம் எனக் கேள்வி எழுப்பியபோது, டீ. எஸ். அவர்கள் அதனை மறுத்து Ceylonese (இலங்கையர்) என்பது Sinhalese எனத் தவறுதலாக எழுதப்பட்டிருப்பதாக விளக்கமளித்தார். உடனே வன்னியசிங்கம் அவர்கள் கேட்ட கேள்வி டீ. எஸ்ஸை வாயடைக்க வைத்தது. Foreigners ஐயும் குடியேற்றும் திட்டமிருக்கின்றதா? என்பதே வன்னியசிங்கத்தின் கேள்வி. இவ்வாறு மழுப்பல் அரசியல் மூலம் ஈழத் தமிழர்களின்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



வன்னியில் வெட்டிச் சரிக்கப்படும் பெரு மரங்கள்:

# ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி கண்ணே!

இலங்கையின் சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பற்றி பெரிதாகப் பேசுகின்ற இலங்கை அரசாங்கம், வன்னிப்பகுதியில் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் 'உனக்கில்லையடி கண்ணே, உபதேசம் ஊருக்குத் தானடி" என்ற வகையிலேயே நடந்து கொண்டிருக்கின்றது.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்டுள்ள, வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையிலான வவுனியா - கிளிநொச்சி பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள அனைத்து மரங்களும் வெட்டித் தள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக, வீதியில் இருந்து 300 மீற்றர் துாரப் பிரதேசத்தை இரு மருங்கிலும் வெட்டவெளியாக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதன் படியே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக வீதியின் இருபக்கங்களையும், வெளியாக வைத்திருப்பதற்கு அங்குள்ள மரங்கள் அப்படியே இருக்கக் கூடியதாக அவற்றிடையே உள்ள பற்றைகள் செடிகளை வெட்டித் துப்புரவு செய்வதுடன் நிறுத்தி இருக்கலாம். இதன் மூலம், 25 மணித்தியாலங்களும். கண்ணும் கருத்துமாகப் படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

ஆனால், இராணுவ முகாம்கள் நிலைகள் அமைந்துள்ள இடங்களைச் சுற்றி, வெட்டவெளியாக்கிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போலவே, இந்த் வீதியோரங்கள் வெட்டவெளியாக்கப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதியில் இருந்த இயற்கையின் செல்வமாகிய பெறுமதிமிக்க காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இது மட்டுமல்லாமல், பாதுகாப்புக்கென எல்லையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 300 மீற்றர் துாரத்தையும் கடந்து, 500 மீற்றர் வரையிலான பிரதேசத்தில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டப்பட்டுள்ளன. இதனால், வவுனியாவில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள மாங்குளம் நகரப்பகுதி வரையில் சோலையாக இருந்த பிரதேசம் இப்போது வெட்ட வெளியாக வனாந்தரமாகக் காட்சியளிக்கின்றது. இயற்கைச் செல்வமாகிய பல வருடங்கள் பழைமையான மரங்கள் யாவும் அழிக்கப்பட்டு, இராணுவத்தின் காவலரணகளுக்குள் அரணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.



வவுனியா கிளிசொந்சி வீதியில் வெட்டப்பட்ட மரங்கள்

எஞ்சிய மரங்கள் விறகுத் தேவைக்காக லொறிகளிலும் வேன்களிலும் ஏற்றப்பட்டு நாட்டின் தென்பகுதியை நோக்கி நாளாந்தம் அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்தத் தேவைக்காக பல ஒப்பந்தக்—காரர்கள் இப்பகுதிகளில் செயற்பட்டு வருகின்றார்கள். சுமார் நூறு குடும்—பங்கள் வரையில் கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் தற்காலிகமாக மரங்களைத் தறிக்கும் வேலைக்காகவே கொண்டு சென்று குடியேற்றப்—பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்—பிடத்தக்கது.

பாலை, முதிரை, வீரை போன்ற மரங்கள் மட்டுமல்லாமல், பண்ணைகளில் வளர்க்கப்பட்ட ஆயிரக்கணக்கான தேக்கு மரங்களும் இரக்கமின்றி வெட்டிச் சரிக்கப்பட்டு விட்டன. மரங்கள் வெட்டப்பட்டது மட்டுமல்லாமல், வீதியோரத்தில் இருந்த அனைத்து வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. வேலிகள் இருந்த இடமும் காணிகளில் இருந்த கிணறுகள் இருந்த அடையாளங்களும் இல்லாமல் சிதைக்கப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதிகளில் முன்னர் மக்கள் குடியிருந்தமைக்கான அடையாளங்களே இல்லாமல் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

பரம்பரை பரம்பரையாக மக்கள் குடியிருந்த வாழ்ந்து வந்த பல கிராமங்கள் இன்று அடையாளங்கள் இல்லாமல் வனாந்தரமாக மாறியுள்ளன. அங்கிருந்த இயற்கைச் செல்வமான மரங்கள் அழிக்கப்பட்டதனால், இப்பகுதியில் மழை இல்லாமல் இயற்கையின் சுழற்சிப் பருவ நிலை பாதிக்கப்படுதவற்கும் வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கிச் செல்கின்ற நெடுஞ்சாலையை எடிபல இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றி, அந்த வீதியின் இருபக்கங்களிலும் இருந்த மரங்கள் காணிகள் கழனிகள் அழிக்கப்பட்டது போலவே, வவுனியா - மாங்குளம் வீதியின் இருபக்கங்களும் இப்போது பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக இராணுவத்திற்கும். விடுதலைப் புலிகளுக்கும். பெரும் சண்டைகள் மூண்டபோது, அவற்றில் இருந்து உயிர் தப்புவதற்காக, அப்பகுதியில் வசித்த மக்கள் தமது சொத்துக்கள் அனைத்தையும் கைவிட்டுச் சென்றபோதிலும், அசையாத சொத்துக்களாக இருந்த மரங்கள், காணிகள் என்பனவும் இப்போது அடையாளங்களின்றி அழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன.



வெட்டப்பட்ட மரங்கள் லொறியில் ஏற்றப்படுகின்றன.

உள்நாட்டில் நடைபெறுகின்ற ஒரு யுத்தத்தைப் போலல்லாமல், பரம வைரியாகிய வேற்று நாட்டு எதிரிகளின் நாட்டுடன் நடைபெறுகின்ற ஒரு யுத்த நிலைமையை நினைவில் கொண்டு வரும் வகையிலேயே, இந்தக் காரியங்களை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கு இலங்கை அரசாங்கமானது முழு அளவில் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது.

இந்த நிலையில். ஒரு நாட்டில் சாதாரணமாக இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற அரசியல் முரண்பாடுகளின் அடிப்படையில் எழுந்த - பேச்சுவார்த்தைகளின் மூலம், அரசியல் ரீதியாக தீர்த்துக் கொள்ள முடியாத ஒரு பிரச்சினையைக் கையாள்வதைப் போலல்லாமல், பரம்பரை பரம்பரையாகப் பகைமை நிலவிய ஓரினத்துடன் போரிடுவது போலவும், அவர்களை அழித்து ஒழித்துக் கட்டுவது போலவும் தான் இலங்கை அரசாங்கமும், அதனுடைய படைகளும் நட கொள்கின்றன என்று கருதுவதில் என்ன தவறிருக்க முடியும்? இவ்வாறான பகைமை அறிகுறிகளுடன் செயற்படுகின்ற ஓர் அரசும், அதனுடைய க டுப்பாட்டில் உள்ள இராணுவமு பாதிக்கப்பட்டுள்ள இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை ஏற்படுத்தித் தருவார்கள் என்று எவ்வாறு நம்ப முடியும்?

**– தவம்**

## ஜனாதிபதி, அமைச்சர்கள், அவர்களுடைய புலுடாக்கள்!

செப். 15ம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பலதும் பத்தும் அலசப்பட்டன. அவற்றில் ஜனாதிபதியின் முக்கிய கவனிப்புக்குள்ளாகியிருந்த விஷயம் சமவாய்ப்புச் சட்டமூலமாகும்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. அரசு ஆட்சிக்கு வந்து ஐந்தாண்டுகள் ஆகியும். ஜனாதிபதி சிறுபான்மை இனத்தவர்களுக்குக் கொடுத்த வாக்கின்படி அவர்களைத் திருப்தி செய்வதற்கான எவையும் நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலும், நெருங்கி வந்து கொண்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்துமுகமாகத் தான் எதையாவது முன்வைக்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் வேட்கை. இதை அவர் அந்தக் கூட்டத்தில் பகிரங்கமாகவே சொல்லியுள்ளார்.

இத்தகைய ஒரு நிலையில் அவரைக் காப்பாற்றக் கைகொடுக்கும் ஒன்றாக இருக்கப் போவது இந்தச் சமவாய்ப்புச் சட்டமூலம் தான் என்பதை அவர் அமைச்சரவையில் கூறினார். "எனக்குச் சென்ற தேர்தலின் போது வாக்களித்த சிறுபான்மை இனத்தவர்களுக்கு, அவர்கள் திருப்திப்படக் கூடிய விதத்தில் சமவாய்ப்புச் சட்டமூலத்தையாவது பயன்படுத்த வேண்டும்" என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள மாணவர்களுக்குத் தமிழையும், தமிழ் மாணவர்களுக்குச் சிங்களத்தையும் படிப்பிக்கும் பிரச்சினை சபையில் எழுப்பப்பட்டது.

இந்தவேளை அமைச்சர் அஷ்ரஃப், "இதைச் செய்வதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை" என்று கூறினார்.

உட்னே ஜனாதிபதி, "இல்லை நான் 200 தமிழ் ஆசிரியர்களை இதற்காக நியமிக்கும்படி கட்டளையிட்டேன். ஆனால், கல்வி அமைச்சுதான் இதை நிறைவேற்றாது விட்டிருக்கின்றது" என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன சீறி எழுந்தார்.

"இந்த மாதிரிப் பொய்க் குற்றச்சாட்டுகளை என்மேல் சுமத்த வேண்டாம். நான் ஒரு இனவாதியல்ல. உண்மையில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க முடியாமல் போனதற்குக் காரணம் திறைசேரியில் நிதிப் பற்றாக்குறையே" என்று பெரிதாகக் கல்வி அமைச்சர் சத்தமிட்டார்.

இந்தச் சத்தத்தைக் கேட்டுக் கோபமுற்ற ஜனாதிபதி தானும் பதிலுக்குக் கத்தினார்.

"இந்த மாதிரிக் கத்த வேண்டாம். என்னாலும் இப்படிக் கத்த முடியும்" என்று ஜனாதிபதி கூறினாரோ இல்லையோ, கல்வி அமைச்சரை உறுத்திக் கொண்டிருந்த உள்ளக் கிடக்கை வெளியே வந்தது.

"என்னை யாரும் பலிக்கடாவாக்க முயல வேண்டாம். நான் எவற்றையும் விட என்னுடைய இனத்தையும், மதத்தையும் மேலாக மதிப்பவன். ஆகவே எனக்குத் தெரியும் என்ன செய்ய வேண்டும்"

-19

நன்றி - நூலகத்திட்டம்



# கங்கொடவில சோமஹிமி: பேரினவாதத்தின் புதிய குறியீடு!

கங்கொடவில சோம ஹிமி எனும் பிக்கு பற்றி இன்று தமிழ் பேசுவோருக்கு கூட தெரியும். மிகவும் சொற்ப காலத்தில் ஊடகங்களால் ஊதிப்பெருப்பிக்கப்பட்டு இலங்கையிலேயே பிரபலமான ஒருவராக ஆகிவிட்டிருப்பவர் அவர்.

ஏறத்தாழ ஒரு வருடத்திற்குட்பட்ட காலமாக அவரது "தர்ம தேசனா" (போதனை உரை) வானொலி/தொலைக்காட்சிகளில் ஒலி/-ஒளிபரப்பட்டு வருகின்றன. வரலாற்றில் எந்த ஒரு பிக்குவும் இத்தனை குறுகிய காலத்தில் இந்தளவு பிரபலமானதாக, இந்தளவு சர்ச்சைக்குள்ளானதாக இல்லை.

## TNL: பேரினவாதத்தின் ஊதுகுழல்

இவரை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தியது டீ.என்.எல். தொலைக்காட்சி சேவை. அது ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரரின் தொலைக்காட்சி நிறுவனம். டீ.என்.எல் தொடக்கப்பட்ட 1994 காலப்பகுதி தேர்தற் காலமாகையால் அரசியல் தலைவர்களுக்கிடையில் முதற்தடவையாக அரசியல் விவாதங்களை நடத்திக் காட்டி புகழ் பெற்றது. அதே காலத்தில் தான் அதே சேவையில் இனவாதிகள் என அழைக்கப்பட்ட பலருக்கு இனவாதம் பற்றிக் கடுமையாகப் பேச இது வாய்ப்பும் அளித்தது.

தொடர்ச்சியாக சிங்கள வீரவிதானவின் பேரணிகள், கூட்டங்கள் மற்றும் பல நிகழ்ச்சிக-ளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு மணித்தியாலக் கணக்கில் விளம்பரங்களின்றி தமது நிகழ்ச்சியாக ஒளிபரப்பியும் வந்திருக்கிறது டீ.என்.எல்.

ஒவ்வொரு பௌர்ணமி போயா தினங்களி-லும் சகல தொலைக்காட்சி சேவைகளிலும் பிக்குமாரைக் கொண்டு "தர்ம தேஷனா" மற்றும் பௌத்த கருத்துரைகள், கலந்துரையாடல்கள், விசேட விவரண நிகழ்ச்சிகளும் இதனால் ஒளிபரப்பப்படுவதுண்டு.

ஒ்வ்வொரு தொலைக்காட்சி சேவையும் போட்டிபோட்டு பிரபல-மான பிக்குவைக் கொண்டு "தர்ம-தேஷனா" நடத்த முனைப்பு காட்-டுவது வழக்கம். இந்த நிலையில் தான் அவுஸ்திரேலியாவில் ஒரு விகாரையில் சில காலம் பணிபுரிந்து விட்டு இலங்கை வந்த கங்கொ-டவில சோம ஹிமி தற்செயலாக டீ.என்.எல் நிகழ்ச்சியில் ஒரு கலந்துரையாடலில் அறிமுகமாகி-யதும் கவர்ச்சிகரமான அவரது உரையைக் கேட்டதில் அவர் புகழ்பெற்றதும், அதனைத் தொடர்ந்து அவருக்கு தொலைக்காட்சி சேவைகள் அனைத்துமே போட்டிபோட்டு கருத்துரை வழங்கக் கோரியதும் நடந்தது.

## பௌர்ணமிப் பிரமுகராக:

சோம ஹிமி சகல தொலைக்காட்சி சேவைக-ளையும் பௌர்ணமி நாட்களில் ஆக்கிரமித்ததுடன் நிற்கவில்லை. ஏனைய பத்திரிகை, வானொலி போன்ற ஊடகங்களிலும் இவரது கட்டுரைகள், பேட்டிகள், இவரைப் பற்றிய சர்ச்சைகள் என தொடர்ந்தது.

பௌத்த கருத்துரையைப் பொறுத்தவரை இவரின் அணுகு முறை ஏனையோரின் அணுகுமு-றைகளை விட வித்தியாசமாக இருந்தது. குறிப்பாக பல்வேறு மூட நம்பிக்கைகள், மூட கருத்துக்களுக்கு சாட்டையடி கொடுத்தார். பௌத்த புராணங்களையும், சூத்திரங்களைப் பற்றியும் விரல்நுனியில் தகவல்களைக் கொண்டிருந்த இவர் பௌத்தத்தின் பெயரால் நாட்டில் நடக்கும் பல்வேறு மூடக் கருத்துக்கள், செய்கைகளை கண்டித்து. அவ்வாறான செய்கை-களை செய்யும் பிக்குமாரை சவாலிட்டார். பௌத்ததில் எங்கு இவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவியுங்கள் என்று.

விஜயன் என்பவனின் வழித்தோன்றல் என்றும் விஜயன் வழிவந்தவர்கள் சிங்களவர்கள் என்றும், அவனிடம் புத்தர் தமது மதத்தை பரப்பும் பணியினை ஒப்படைத்திருந்தார் என்றும் கூறப்பட்டதைக் கண்டித்து அது பொய்யென்றும் விஜயன் என்பவனின் அட்டுழியங்கள் தாங்காது அந்நாட்டு மக்களாலேயே விரட்டப்பட்டு வந்து சேர்ந்தவன் அந்தக் காலத்தில் உலகின் பெரிய பயங்கரவாதியாக இருந்திருக்க வேண்டுமென்றும் அப்படியொருவரிடம் பௌத்தத்தை பரப்பும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்க முடியாது என்றும் இவ்வாறான புனைவுகளை கூறிவரும் பிக்குமாரை வம்புக்கிழுத்தார்.

## துய பௌத்தம் பற்றி:

பௌத்த விகாரைகளில் பௌத்தத்தின் பெயரால் பில்லி, சூனியங்கள் செய்யப்படுவ-தையும், அதுவும் அவற்றை பிக்குமார் செய்வ-தையும் கண்டித்து பௌத்தத்தில் எங்கு அவ்வாறு செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது எனக் கேள்வி எழுப்பினார். நாட்டிலுள்ள பௌத்த விகாரை-களில் பெருமளவானவை "தேவாலய" (அதாவது இந்துக் கடவுள்களையும் கொண்ட விகாரைகள்) ங்களாக இருப்பதாகவும் அந்த இந்து மதக் கோட்பாடுகளுக்கும், பௌத்தத்துக்கும் அடிப்-படையில் எந்த ஒற்றுமையும் இல்லை என்பது குறித்தும் கூட பல உரைகள் செய்திருக்கிறார். முதலில் அவை இரண்டையும் வேறுபடுத்த வேண்டுமென்றார். குறிப்பாக "தூய பௌத்தம்" இது தான் என்று கூறினார்.

பலர் இவரது வளர்ச்சி குறித்து பலவாறாக பேசிக்கொண்டார்கள். ஒரு சாரார் இனவாதி என்றனர். ஒரு சாரார் நல்ல பௌத்த பகுத்தறிவாளர் என்றனர். இன்னும் சிலர் நடுநிலையானவர் என்றனர். சிங்கள வீரவிதானவின் தலைமறைவு பிக்குமாரில் ஒருவர் தான் இவர் என்கின்ற கதையும் உலவியது.



சிங்கள பேரினவாதமயப்பட்ட சூழலில் இவரை அணுகிய பல ஊடகங்களும், பிரமுகர்களும் புகழ்பெற்ற இவரின் ஊடாக இனப்பிரச்சினை குறித்தும் சிங்கள இனம் குறித்தும், தமிழினவாதம் குறித்தும் பேசவைத்தனர். புகழ் உச்சியில் இருந்த சோம ஹிமியும் இந்த பெருங்கதையா-டலுக்குள் சிக்கிக்கொண்டார். சிங்களப் பேரினவாதமயப்பட்ட சூழலை திருப்திப்-படுத்த இவரும் பேரினவாதத்தை படிப்படியாகக் கக்கத் தொடங்கினார்.

## அஷ்ரப் – சோமே சண்டை

அப்படிக் கூறப்பட்ட பேரினவாதக் கருத்துக்களில் முக்கியமானது சமீபத்தில் குறிப்பாக கடந்த ஒகஸ்ட் 30ஆம் திகதி டீ.என்.எல். (அவரை அறிமுகப்படுத்திய- ஊதிப்பெருப்பித்த- சிங்கள வீரவிதா-னவின் ஊதுகுழலாக ஆகிவிட்டிருக்கிற தொலைக்-காட்சி சேவை) தொலைக்காட்சி சேவையில் தீகவாபி விகாரைக்குச் சொந்தமான காணியை அஷ்ரஃப் புல்டோசர் போட்டு மட்டப்படுத்தி, முஸ்லிம்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தார் என்கிற சர்ச்சை பற்றிய. விவாதம் அமைச்சர் அஷ்ரஃப்புக்கும், சோம ஹிமிக்கும் இடையில் நடந்தது. (இந்த விவாதம் பற்றி விவாதம் பின் வந்த நாட்களில் பத்திரிகைகளில் தொடர்ந்து கட்டுரை-கள் வெளியாகின.) அவ்விவாதத்தில் அமைச்சர் அஷ்ரஃப்பின் அணுகுமுறை குறித்து பொதுவாக சிங்கள மக்கள் மத்தியில் கூட பாராட்டு உண்டு.

அமைச்சர் அஷ்ரஃப் அவ்விவாதத்துக்கு மிகுந்த தயாரிப்புடனும், குறிப்பாக காணியின் வரைபடம், அக்காணி வழங்கப்பட்டதாகக் கூறப்படும் கல்வெட்டு குறித்த நூல், அக்காணி குறித்த புதைபொருள் திணைக்கள ஆவணங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என சகலவற்றையும் கொண்டு வந்திருந்தார். அவ்வளவையும் காட்டி சோம ஹிமியின் வாயை அடைத்தார். அவ் ஆவணங்களை கையில் எடுத்து வந்திருந்த அமைச்சர் "காலான சூத்திர" எனும் பௌத்த சூத்திரத்தை மாத்திரம் தனது சட்டைப் பையில் இருந்து எடுத்தார். (அதற்கு எத்தனை மரியாதை கொடுத்து கவனமாக கொண்டு வந்திருக்கிறார் என பின்னர் பரவலாக பேசப்பட்டதை கேட்க முடிந்தது. அது அஷ்ரஃப்பின் வெற்றி) அதில் உள்ள ஒரு பகுதியை சுட்டிக்காட்டி -எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிது எனும் குரளை ஒத்தது அது- உங்களுக்கு இந்த சூத்திரம் நன்றாகப் பாடம் இருக்கும். எவர் என்ன கூறினாலும் நீங்கள் அதனை நன்றாக ஆராயமல் வந்து விட்டீர்களே என்று ஒரு போடு போட்டார் அஷ்ரஃப். சோம ஹிமி அந்த விவாதத்தில் ஆத்திரம் கொண்டு இனவாதத்தைக் கக்கி அவர் யார் என்பதையும் அப்பட்டமாக இனங்காட்டினார்.

## யார் வென்றது?

இதனைத் தொடர்ந்து பல சிங்களப் பத்திரிகைகளில் சோம ஹிமி பற்றியும் அஷ்ரஃப் பற்றியும் கட்டுரைகள் பல வெளியாகின. பெரும்-பாலும் அஷ்ரப்பை தாக்கியும் அவர் கூறியவை அனைத்தும் பொய் என்கிற கட்டுரைகள் தான் அதிகம். குறிப்பிட்ட தொலைக்காட்சி விவாதத்தில் "அஷ்ரஃப் தான் வென்றார்" என்று புத்திஜீவிகள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது.

இந்த விவாதங்கள் மேலும் சோம ஹிமியை பிரபல்யப்படுத்தின. இவ்விவாதத்தில் சோம ஹிமி இனவாதியாக அம்பலப்பட்டதால் அரச ஊடக-ங்களில் அவருக்கு இடம் தரக்கூடாது என்று சில முயற்சிகள் நடந்திருக்கின்றன. அதனைத் தொடர்ந்து அரச தொலைக்காட்சி சேவையான சுயாதீன தொலக்காட்சி சேவை (ITN) இல் சோம ஹிமிக்கு இடம் தருவதில்லையென தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

டீ.என்.எல். அஷ்ரஃப்பை மடக்குவதற்-கென்றே ஒழுங்கு செய்திருந்த அந்த விவாதத்தில் சோம ஹிமி வாங்கிக் கட்டிக்கொண்டார் என்பதை ஜீரணிக்க முடியாத டீ.என்.எல். சேவை செப்டம்-பர் 27 ஆம் திகதி ஒரு தொலைக்காட்சி விவாதத்தை ஒழுங்கு செய்திருந்தது. இதில் கங்கொடவில சோம ஹிமி உள்ளிட்ட மூன்று பிக்குமாறும், ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாரத்னவும், சிங்கள இனவாதப் பத்திரிகைகளைச் சேர்ந்த ஒரு சில பத்திரிகையாளர்களும், புதைபொருள் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்ளச் செய்யப்பட்டிருந்தனர்.

அதில் சகலருமாக அமைச்சர் அஷ்ரஃப்பை தாக்கு தாக்கென்று தாக்கினர். அஷ்ரஃப் கூறியவை அனைத்தும் பொய்யென்று நிறுவ பல முனைகளில் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இவ்விவாதம் இரவு 9.05க்கு ஆரம்பாகி இரவு 12க்கு பத்து நிமிடம் இருக்கையில் முடிந்தது இங்கு கவனிக்-கத்தக்கது. இவ்விவாதத்தின் இறுதியில் உரை-யாற்றிய சோம ஹிமி "அஷ்ரஃப் எதையெல்லாம் காட்டி மழுப்பினாரோ அவையெல்லாம் பொய்யென்று நிரூபணமாகி விட்டன. கடைசியில் நான் அன்று கூறியவை தான் சரியென இப்போது உறுதியாகியிருக்கின்றன. இது சிங்கள நாடு சிங்கள மக்களுக்கு என்று இருப்பது இந்த ஒரு நாடு தான். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் வேறு நாடுகள் இருக்கின்றன. சிறுபான்-மையோரை நாங்கள் இங்கு வாழ வேண்டாம் என்று கூறவில்லை. அவர்கள் வாழும் வரை பெரும்பான்மையினரை அனுசரித்து வாழச் சொல்லித் தான் கேட்கிறோம். பெரும்பான்மையினரின் உரிமைகளுக்கு இடங்கொடுத்து வாழ அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றும்படி யுத்தத்துக்கு யுத்தத்தால் தான் பதில் சொல்ல முடியும்." என்ற போர்ப் பிரகடனத்துடன் முடித்தார்.

## பாசிசத்தின் அடையாளங்கள்:

இன்று சோம ஹிமி தன்னை முழுமையாக இன்னார் தான் என வெளிக்காட்டியுள்ளார். இது வெறுமனே அவருக்குள் இருந்து வந்த பேரின-வாதம் அல்ல. அவரைச் சூழ இயங்குகின்ற பேரினவாதமயப்படுத்தப்பட்ட சூழலால் கவனமாக கட்டமைக்கப்பட்டவர் அவர். எனவே இந்த சூழலில் பல்வேறு சக்திகளும் பல்வேறு நலன்களும் ஒன்று சேர்ந்து ஒருவர் எப்படி தயாராக்கப்படுகிறார், எப்படி நிலைநிறுத்-தப்படுகிறார் என்பதற்கு இவர் ஒரு நல்ல உதாரணம்.

அஷ்ரஃப்புக்கும் சோம ஹிமிக்குமிடையிலான விவாதத்தின் போது சோம ஹிமி இன்னுமொரு முக்கிய பிரச்சினையை கிளப்பியிருந்தார். அது சிங்கள மக்களின் சனத்தொகை குறைகிறது என்றும், முஸ்லிம்கள், தமிழர்கள் போன்றோரின் சனத்தொகை அதிகரிக்கின்றது என்பதுமாகும். திட்டமிட்டு சிங்கள சனத்தொகை குறைக்கப்படுவதாகவும், எனவே சிங்களப் பெண்களை அதிக குழந்தைகள் பெறுமாறும் அவர் அதில் கூறியிருந்தார். இதே பிரச்சினையை அவர் 27ஆம் திகதி நடந்த டீ.என்.எல். கலந்துரை-யாடலிலும் கூறினார்.

வெறுமனே சோம ஹிமி விவகாரம் என்றல்ல பொது-வாக சிங்களப் பேரினவாதம் எடுத்துவரும் நவீன வடிவங்க-ளையும், அது தன்னை நிலை-நாட்ட எடுத்து வரும் முயற்சி-களையும், அதன் திட்டமிட்ட சாமர்த்தியமான அணுகுமு-றைகளையும் சரியாகக் கணித்தால் அதன் முக்கிய பண்பொன்று புலப்படும். கடந்த கால பாசிசத்தின் வடிவம், திசைவழி, பண்பு என்பவற்றை ஒரு மறுவாசிப்பு செய்தால், இங்கு அதன் வெளிப்-பாடுகளை இனங்காணலாம். இனி பேரினவாதம், பேரினவாதிகள் என்கிற பதங்களுக்கு விடைகொடுத்து விட்டு இனி பாசிசம், பாசிஸ்டுகள் என்கிற பதப்பிரயோகங்களை பயன்படுத்த வேண்டிவரப்போகும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று மட்டும் தற்போதைக்கு சொல்லி வைக்கலாம்.

**-ஜென்னி**

## 'சிங்களவர்களே விழித்தெழுங்கள்!'

சோம ஹிமி கலந்துரையாடிய அதே செப்டம்பர் 27 திங்களன்று லங்காதீப பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியாகியிருந்தது. "சிங்களவர்களே விழித்தெழுங்கள்!" எனும் தலைப்பில் முழுப்பக்க விளம்பரமாக வெளியாகியிருந்தது அதில்:




"அமெரிக்காவில் செவ்வியந்தியர்களும், அவுஸ்திரேலியாவில் அபோர்ஜின்களும், நியூசிலாந்தில் மயோரி இனத்தவர்களும் வதைபுரியப்பட்டதைப்போல இன்று சிங்களவர்களும் மோசமான கேவலமான சக்திகளால் வதை புரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்கள இனமானது உலகில் மலட்டுத்தனத்துக்கு உள்ளாகி வரும் இனங்களில் ஒன்றென ஐக்கிய நாடுகள் சபையும் அறிவித்திருக்கிறது. இந்த கொடுரம் 1971இல் ஆரம்பித்து இன்று வரை நிலவுகிறது. தற்போது இருபது லட்ச சிங்களவர்கள் மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகிறது. இவ்வாறு மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பவர்கள் பெண்கள் அல்ல ஆண்கள் என்பதும் சுயவிருப்பத்தின் பேரில் மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதில் அடங்காது என்பதையும் கருத்திற் கொள்க. இவ்வாறு மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுபெற்றுத்தருவதற்கும், அவர்களுக்கு மீளவும் பிள்ளை பெறக்கூடிய ஆற்றலை பெற்றுத்தர தேவையான வழிகளை ஏற்படுத்துவதற்கும் எமது அமைப்பு தீர்மானித்துள்ளது. எனவே கீழ்வரும் தகவல்களை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு தங்களிடம் கேட்டுக்கொள்கிறோம். மேலும் 1971இன் பின் திருமணமாகி இது வரை ஒரு பிள்ளையோ இரு பிள்ளையோ தான் பெற முடிந்தது என்கிறவரோ அல்லது பிள்ளையே பெறாமல் போனவர்கள் மாத்திரம் இத்தகவல்களை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

...............

சிங்கள இனத்தை பாதுகாக்கும் இயக்கம்

பிரதான அமைப்பாளர், ................"

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகள் சொல்ல வேண்டிய பதில்!



நவாலிப் படுகொலைகள்

ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறிய விரும்புபவர்கள், உலக வலாற்றின் விடுதலைப் போராட்ட வரலாறுகளைத் தேடிப் படிப்பர். ஒடுக்கப்படுகிற மக்களின் வீரம் செறிந்த விடுதலைப் போராட்ட வரலாறுகள் பல, இவ்வாறு நாமும் படிப்பதற்காக விரவிக் கிடக்கின்றன. போராடும் மக்களின் தியாகம், வீரம் செறிந்த அவர்களது பேராட்டம், தமது தனிப்பட்ட, சொந்த வாழ்வை முற்றுமுழுதாகத் தமது தேசத்திற்காக, வர்க்கத்திற்காக, நாட்டிற்காக அர்ப்பணித்த வரலாறுகள், தமது சொந்த விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொருவருக்கும் ஆதர்சமாக, வழிகாட்டியாக, உந்துசக்தியாக இருந்து வருவதை யாரும் அறிவர்.

எண்பதுகளில் தேசிய விடுதலைக்கான எழுச்சியால் உந்தப்பட்டுத் தமது பாடசாலைப் படிப்புக்களை, பல்கலைக்கழகப் பட்டங்களை, உத்தியோகங்களை எல்லாம் உதறிவிட்டுப் போராட்டத்தில் குதித்த பல இளம் சந்ததியினருக்கு, எமது தேசிய விடுதலைப் போராட்ட விடுதலை இயக்கத் தலைமைகள் ஆரம்பத்தில் இந்தியாவுக்குப் படகேற வழிகாட்டிக் கொண்டிருந்தபோதும், விரைவிலேயே அறிவுப் பசியுடன் விடுதலை பற்றிய தேடலில் தீவிரமாகவும், அக்கறையுடனும், ஈடுபடும் ஒரு பிரிவும் அதனுள் உருவாகவே செய்தது. முன்னெப்போதும் இல்லாத விதத்தில் தமிழில் நிறையவே சஞ்சிகைகளும் புத்தகங்களும் படிக்கப்படத் தொடங்கின.

விடுதலைப் போராட்டத்திற்காக, இராணுவப் பயிற்சிக்காக இந்தியாவிற்குச் சென்றவர்கள் போக, நாட்டில் நின்றவர்கள், 'அரசியல் வேலை'யில் ஈடுபட்டவர்கள் மத்தியில் இந்தப் புத்தகப் படிப்பு மிகவும் அபரிதமாக இருந்தது என்றே சொல்ல வேண்டும். பாலஸ்தீன விடுதலை இயக்க வரலாறு முதல் சீனப் புரட்சி வரை எல்லாமே படிக்கப்படவும், விவாதிக்கப்படவும் தொடங்கின. நாட்டில் 'அரசியல் வேலை'யில் ஈடுபடுவோர், தமது புதிய 'தொடர்பு'களுக்கு அரசியல் அறிவூட்டும் நோக்குடன் சஞ்சிகைகளையும், புத்தகங்களையும் படிக்கக் கொடுத்து வழிகாட்டினர். நீண்டகாலமாக யாரது கவனத்தையும் ஈர்க்காதிருந்த ரஷ்ஷியச், சீனப் படைப்புகள் தேடித் தேடிப் படிக்கப்பட்டன. இந்தியப் புரட்சிக் கதைகள், வீரப் போராட்ட வரலாறுகள் எல்லாம் படிக்கப்பட்டன. மக்சிம் கோர்க்கியின் "தாய்" முதல் நிரஞ்சனாவின் "நினைவுகள் அழிவதில்லை" வரை நிறைய வாசிக்கப்பட்டன.

இவையெல்லாம் விடுதலைப் போராட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்த அவசியமான



அம்பாறைப் படுகொலைகள்

அறிவைப் பெருக்கிக் கொள்ளும் ஆர்வத்துடன் அன்றைய இளஞ்சந்ததியினரால் படிக்கப்பட்டன.

ஆம், எமது விடுதலைப் போராட்டம் எப்படி அமைய வேண்டும் என்ற கேள்விக்கு விடை அளிப்பவையாக அன்று படிக்கப்பட்ட விடுதலைப் போராட்ட நூல்கள் அமைந்தன.

ஆனால், அந்த நூல்களில் எவற்றிலும் காணப்படாத விதமாக எமது விடுதலைப் போராட்டம் சென்று கொண்டிருந்தது. ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டம் எப்படி நடக்கக் கூடாது என்பதற்கான உதாரணங்களையும், சம்பவங்களையுமே அதிகளவில் கொண்டதாக அது இயங்கிக் கொண்டிருந்தது.

இராணுவம், பொலிஸ் மற்றும் அரச அடக்குமுறைக் கருவிகளை எதிர்த்த வன்முறைப் போராட்டமாகத் தோற்றம் கொண்ட ஈழப் போராட்டத்தின் வன்முறை, சக விடுதலை இயக்கங்கள் மீதான வன்முறையாக, பெரும்பான்மை இன மக்கள் மீதான இனவெறி சார்ந்த வன்முறையாக, சக ஒடுக்கப்படும் இனம் மீதான வன்முறையாக, சொந்த மக்கள் மீதான வன்முறையாக எல்லாம் மாற்றம் பெற்றது.

தமது சொந்த விடுதலைக்காகப் போராடுகின்ற ஒவ்வொருவரும், மற்றவரது சுதந்திரத்தை மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மற்றவர் சுதந்திரம் பற்றி அக்கறைப்படாத ஒருவருக்குத் தனது சுதந்திரத்தைப் பற்றிப் பேச அருகதை கிடையாது என்றெல்லாம், விடுதலைக்கும், புரட்சிக்குமான அரிச்சுவடிகளைப் படித்தபடியே மக்களது ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டன. அராஜகம் தலைவிரித்தாடியது. மாடு திருடியவனுக்கும் மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு விடுதலைப் போராளிகளின் அரசியல் வன்முறை திசைமாறிப் போயிற்று.

தேசிய விடுதலை என்ற சொற்றொடர் வெறும் அர்த்தமிழந்த சொற்றொடராக உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்க, இனவெறி, அதிகார வெறி போன்ற பல்வேறு வெறிகளும் விடுதலைப் போராட்ட இயக்கங்களினை வழிநடாத்தும் தத்துவங்களாக மாறிப் போயின.

ஈழப் போராட்ட வரலாறு வீரம் செறிந்த மக்களின் போராட்ட வரலாறாக மிளிர்வதற்குப் பதில் இரத்தக் கறைபடிந்த, ஜனநாயகத்தினதும், விடுதலையினதும் புதை குழியின் மேல் எழுதப்பட்ட ஒரு வரலாறாக எழுதப்பட்டு வருகின்றது.

யுத்த முனையில் கிடைக்கும் வெற்றிகளும், சாதனைகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை - மக்களின் வெற்றியை உறுதிப்படுத்துபவை அல்ல. அவையெல்லாம் எவ்வாறு அடையப்படுகின்றன என்பதையும் சேர்த்துதான், மக்களின் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது.

தேசிய விடுதலைக்கான போராட்டம், ஒடுக்கப்படும் ஒரு தேசத்தின் தவிர்க்க முடியாத தெரிவு. தனது விடுதல்லக்காக அது ஆயுதமேந்திப் போராட வேண்டி அமைவது. அதன் மீது திணிக்கப்பட்ட ஒரு வேண்டாத சுமை. விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடுபவர்கள், குட்டிமணியின் வார்த்தையில் சொன்னால், 'வன்முறை மீது காதல் கொண்ட மன நோயாளிகள் அல்லர்'. ஆனால், அந்த வன்முறை நோக்கத்தை மறந்து செய்யப்படும் போது, செய்பவர்கள் விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ மனநோயாளிகளாகவே செயற்படுகின்றனர்.

1985 மே மாதம் அனுராதபுரத்தில் அன்று சிங்கள மக்களை வெட்டியது முதல், அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் கோணாகலை. கிராமத்தில் நடாத்தி முடிக்கப்பட்ட கொலை வெறியாட்டம் வரையான ஏறக்குறைய அனைத்து இயக்கங்களாலும் செய்ப்பட்ட இந்த மாதியான வெறியாட்டங்களை எந்த விடுதலைப் போராட்டத்துடனும் இணைந்த வன்முறையாகக் கொள்ள முடியாது. இது இனவெறியும், மூர்க்கமும் படைத்த இலங்கை இராணுவத்தினரால் செய்யப்படுகின்ற, மனோவிகாரச் செயற்பாடுகளில் இருந்து சற்றும் வேறு படுத்திப் பார்க்க முடியாத ஒன்று தான் இது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களால் செய்யப்படுகின்றது என்ற ஒரே காரணத்திற்காக இவை ஒரு போதும் புனிதமான செயல்களாகி விடப்போவதில்லை. ஒரு குமுதினிப் படகுப் படுகொலைக்கோ அல்லது கொக்கட்டிச்சோலைப் படுகொலைக்கோ இது எந்த விதத்திலும் குறைவானது அல்ல.

இனப் படுகொலைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் சக்திகளிடையே விடுதலை வேட்கையை, அதற்கான தியாகத்தை, அர்ப்பணிப்பை வளர்ப்பதற்குப் பதில் அதற்கு நேரெதிரான பலனையே தருகின்றது. மனோ விகாரத்தையும், சுய திருப்தியையும் வழங்கும் இது முழுப் போராட்ட உணர்வையுமே கீழ்மைப்படுத்தி நாசமாக்கிவிடும் ஆபத்தான தன்மையைக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடுவதாகவும், அந்த மக்களின் நலனுக்காகத் தியாகம் செய்வதாகவும் நம்புகின்ற ஒவ்வொருவர் முகத்திலும் பதினாயிரம் மடங்கு வேகமாக அடித்து, இல்லை ! இல்லை ! என்று உரத்துச் சொல்கின்றன இப்படியான சம்பவங்கள்.

எதிரியை வழிக்குக் கொண்டுவரவும், அச்சமூட்டவும் எதிரியின் அணிக்குள்ளேயே குழப்பங்களை ஏற்படுத்தவும், யுத்த காலங்களில் நடைமுறைப் படுத்தவெனச் சில நடைமுறைகள் இருக்கின்றன தான். எதிரியின் கிராமங்களை அழித்தல், பயிர் பச்சைகளை நாசமாக்கல், மந்தைகளைக் கவர்தல், பெண்களைச் சிறைப் பிடித்தல், கலாசாரச் சின்னங்களை, பண்பாட்டு நிறைவிடங்களைத் தகர்த்தல் என்பன எல்லாம் இத்தகைய நடைமுறைகளில் சிலவாகப் பண்டைய எதேச்சாதிகார, மன்னராட்சிக் காலங்களில் செய்யப்பட்டன. இன்னும் கூட, இலங்கை அரசு போன்ற அடக்குமுறை அரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகார வெறியும், மக்கள் விரோதப் போக்கும் கொண்ட அவற்றின் இருப்புக்கான ஆதாரம் எல்லாம் அவற்றின் அச்சமூட்டும் (Coercive Power) அதிகாரத்திலேயே தங்கியிருப்பவை. ஆகவே அவர்களுக்கு இவற்றைச் செய்வது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆனால், ஒரு விடுதலை இயக்கத்தின் இருப்பு என்பது, அதன் மக்களது அன்பு, பங்களிப்பு, அவர்களது விடுதலை வேட்கை என்பவற்றையே ஆதாரமாகக் கொண்டது. ஒரு விடுதலை இயக்கம், இதனால் தான் தனது போராட்டத்திற்குத் தனக்கென வேறு வழிமுறையைக் கொண்டதாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அது தனது இந்த நிலையை மறந்து, அதிகார வர்க்கத்தினதும், எதேச்சாதிகாரர்களதும் நடைமுறையைத் தானும் பின்பற்றத் தொடங்கினால், அது முதலாவதாகத் தனது விடுதலை இலட்சியத்தினின்றும் விலகிவிடுகிறது. இரண்டாவதாக, இதன் காரணமாகத் தனது மக்களிடமிருந்து அந்நியமாகிப் போயிவிடுகின்றது. மூன்றாவதாக, அவர்களுக்கே எதிரான ஒரு அணியாகச் சிறுமைப்பட்டும் போகின்றது.

திட்டமிட்ட குடியேற்றம் என்பது இலங்கைப் பௌத்த பேரினவாத அரசின் தமிழ், முஸ்லிம் மக்களை அவர்களது அரசியல், பொருளாதார இருப்பை அழித்தொழிக்கும் மேலாதிக்க நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம் என்பது புதிய விடயம் அல்ல. ஆனால், இந்தத் திட்டத்திற்குக் கருவிகளாகவும், பலிக்கடாக்களாகவும் ஆக்கப்பட்டவர்கள் அப்பாவிகளும், ஏழைகளுமான சிங்கள, விவசாய மக்கள். தமிழர்களதும், முஸ்லிம்களதும் பாரம்பரிய பிரதேசங்களைச் சிங்கள, இனவாதிகளது ஆதிக்கம் கொண்ட கோட்டைகளாக மாற்றுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட பகடைக்காய்கள் அவர்கள்.

அவர்களது வறுமை, வாழ்வுக்கு ஆதாரமில்லாத நிலைமை என்பன இவ்வாறான ஒரு பகடைகளாகப் பயன்படுத்தப்படும் நிலைமையை அவர்களுக்கு உருவாக்கின.

குடியேற்றத்திட்டங்களை எதிர்ப்பது, குடியேற்ற நடைமுறையை எதிர்ப்பது என்பதுவும், குடியேறியவர்களைக் கொல்வதன் மூலம் அதைச் சாதிக்க நினைப்பதுவும் ஒன்றல்ல. முதலாவது, தமது அரசியல் எதிர்காலம் குறித்த நியாயமான அச்சம் காரணமான ஒரு போராட்டம் என்றால் இரண்டாவது, எதிரியின் நோக்கத்தைப் பலவீனமடையச் செய்வதற்குப் பதில் அதைப் பலமூட்டுகின்ற கும்பல்ச் செயற்பாட்டின் ஒரு வடிவமாகும்.

பாசிச அரசுகளும், கொள்ளைக்காரர்களும் மட்டும் தெரிவு செய்யக்கூடிய ஒரு வழிமுறை தான் இது.

குடியேற்றத்திட்டங்கள் அரசியல் ரீதியாக எதிர்கொள்ளப்பட் வேண்டியவை. அவற்றில் மனித உயிர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், அவர்களின் வாழ்வு சம்பந்தப்பட்டிருப்பதால் நிதானமாகக் கையாளப்பட வேண்டியவை. அதன் மூலம் அரசின் நோக்கம் குலைந்து போகும் விதத்தில் செயலாக்கப்பட வேண்டியவை. மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியின் போது கையாளப்பட வேண்டியவை - அரசியல் ரீதியில் கையாளப்பட வேண்டியவை.

இலங்கை அரசாங்கத்தின் இனவெறிப் படைகள் புதுக்குடியிருப்பில் குண்டு போட்டுப் பொது மக்களைக் கொன்றால், அது ஆச்சரியமோ, அதிர்ச்சியோ ஊட்டும் விடயம் அல்ல. ஆத்திரத்தையும், தீவிர எதிர்ப்புணர்வையும் அது ஊட்டுகின்ற போதும், இயலாமையின் வெளிப்பாடாக அரச படைகள் இப்படிச் செய்வதையிட்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால், அது அவர்களது நோக்கத்துடன், கடமையுடன் இணைந்த ஒரு செயற்பாடு தான். சர்வதேச அபிப்பிராயத்திற்கும், எதிர்ப்புக்கும் பயந்து அவர்கள் அதைத் தொடர்ந்து செய்யாவிட்டாலும், அது அவர்கள் கோட்பாட்டின் வழிப்பட்ட ஒரு நடைமுறை தான்.

ஆனால், இவ்வாறான ஒரு செயற்பாடு விடுதலை, சுதந்திரம் பற்றிப் பேசுபவர்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமற்ற ஒரு நடைமுறை. அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தருகின்ற செயற்பாடு. விடுதலை மீதான அவநம்பிக்கையையும், மன விரக்தியையும் ஏற்படுத்தும் செயற்பாடு.

ஆயினும், புலிகள் அதனைச் செய்துள்ளார்கள்.

இப்படிச் செய்யமாட்டோம் எனப் பலமுறை மறுத்திருந்தபோதும் கூட இதனைச் செய்திருக்கின்றார்கள்.

புலிகள் இப்படிச் செய்வதில் ஆச்சரியப்பட என்ன இருக்கின்றது? என்று கூறுகின்றார்கள் அரசாங்கத் தரப்பினர். எல்லைப் புற மக்களுக்கு இயந்திரத் துப்பாக்கி வழங்குபடி அவர்கள் கோருகின்றார்கள்.

அவர்கள் சொல்வது உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டியது தானா ? புலிகளுக்கும், அடக்கு முறை அரசுக்கும் வேறுபாடு இல்லை என்று கொள்ள வேண்டியது தானா ? புலிகள், விடுதலை பற்றிப் பேசுவதெல்லாம் பொய்யே என்று கொள்ள வேண்டியது தானா ?

புலிகள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்தப் பத்தியில் எழுப்பப்பட்ட கேள்விக்காக அல்ல, இந்தக் கேள்விகளைத் தமது மனதுள் போட்டுக் குழப்பிக் குழப்பி, அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்காக,

தமிழ், முஸ்லிம் மக்களுக்காக !

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# பாகிஸ்தானில் அல்லாஹ்வின் இராணுவம்! இந்தியாவில் இந்துத்துவப் படை! இலங்கையில் பௌத்த சிங்கங்கள்!

தீஸ்தா தேசல்வாத்

**உபகண்டத்தில்,** வரலாற்றைக் கற்பித்தல் என்பதன் பேரால் நடக்கும் புனைவு உருவாக்கங்கள் மற்றும் வெறுப்பைப் போதித்தல் என்பவற்றை விரட்டும் நோக்குடன், எமது கடந்த கால சிக்கல்களை விடுவிக்கும் முயற்சியாக தென்னாசியாவின் முக்கிய வரலாற்றாசிரியர்களின் சந்திப்பு ஒன்று நிகழ்ந்தது. ஜனவரி 26 — 28ம் திகதிகளில் நடைபெற்ற, KHOJ என அழைக்கப்படும், இந்தியாவுக்குள் மதச்சார்பற்ற கல்வித்திட்ட அமைப்—பினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்று நாள் தென்னாசியக் கருத்தரங்கு இதுவாகும். தென்னாசியாவில் வரலாற்றைக் கற்றல், ஆராய்தல், கற்பித்தல் என்பன தொடர்பான அம்சங்களைப் பற்றி கலந்துரை—யாடப்பட்ட இந் நிகழ்வில் வரலாற்—றாசிரியர்கள், கல்வியியலாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் செயற்—பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற வரலாற்றாசிரியரும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரி—யருமான றோமிலா தப்பர், நவீன வரலாற்றின் முக்கிய வரலாற்—றாசிரியரான கே.என். பணிக்கர், பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தரும் இலங்கையில் முன்னணி வரலாற்றாசிரியரும் தொல்பொருளாய்வாளருமான லெஸ்லி குணவர்தன, மற்றும் பாகிஸ்தானிய முன்னணி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட வரலாற்றாசிரியரான முபாரக் அலி போன்றோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக 'Communalism Combat' என்ற இதழில் வெளியான கட்டுரையின் சுருக்கமான மொழிபெயர்ப்பு இது. தீஸ்தா தேசல்வாத் என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை இப்பத்திரிகையின் ஏப்ரல் இதழில் அட்டைப்படக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகை இணையத்திலும் கிடைக்கிறது.

தெற்காசியாவில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை என்று சுதந்திர அரசுகளை உருவாக்கு-வதற்காக வரையப்பட்ட தேசிய எல்லைகள், இந்த புதிய இனத்துவ அரசுகளால் உருவாக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளே வரலாற்றையும் கூறுபோடுவதில் போய் முடிந்துள்ளன. கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகால்மாக இந்த நாடுகளில் நடைபெற்று வரும் வரலாற்றுக் கற்பித்தலும் கற்றலும், பல நூற்றாண்டுகாலமாக பொதுவான தொடர்புகளையும் போக்குகளையும் கொண்டிருந்த ஒரு பிரதேசத்தின் பரந்த யதார்த்தத்தை வெளிக் கொணர்-வதற்கான விசாரணைகளையோ, ஆய்வுகளையோ மேற்கொள்வதற்கு எந்தப் பங்களிப்பையும் ஆற்றவில்லை என்றே சொல்ல வேண்டும். இந்நாடு-களிடையே நிலவிய நூற்றாண்டுத் தொடர்புகளும், பகிர்ந்து கொள்ளப்-பட்ட அனுபவங்களும் திடீரென்று ஆனால் உறுதியாக பிடுங்கி எறியப்-பட்டன. இந்த நாடுகளின் அரசுகள் வரலாற்றைக் கற்றலில், குறிப்பாக பாடப் புத்தகங்களையும், பாட விதானங்களையும் தீர்மானிப்பதில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியவுடன் இது நடந்தது.

இலங்கையின் வரலாற்றில் 17ம் 19ம் நூற்றாண்டுகட்கிடைப்பட்ட காலத்திய கண்டியன் காலகட்டம், ஆளும் சாதிகளைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட சாதிய அடிப்படை-யிலான தேசிய எல்லைகளைத் தாண்டிய பிராந்தியப் பிணைப்புகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை மிகவும் கவர்ச்சிகரமாக வெளிப்-படுத்துகிறது. சிங்களப் பிரபுக்களின் ஆட்சி இந்தக் காலகட்டத்தில், பௌத்த மதகுருமாரின் ஆலோசனையின் கீழ் தென்னிந்திய மன்னர் பரம்பரையை சேர்ந்த குறிப்பாக நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த அந்நிய ஆட்சியாளர்களை அழைத்து மன்னராக்கிய பல உதாரணங்களைக் காணலாம். இந்தக் காலகட்டத்தில் இனத்துவ தொடர்பு-களை விட சாதீய தொடர்புகள் வெறும் -முந்நூறு ஆண்டுகட்டு முன்- மிகவும் முக்கியமானதாக இருந்ததே இதற்கான காரணமாகும்.

முதலாவது நாயக்க மன்னன், பௌத்த மதகுருக்களிடையே மிகவும் வணக்கத்துக்குரியவராக கருதப்பட்ட நாவத்த விகாரையின் பிரதான குருவான சாம்க்க சங்க ராஜவினால் சிம்மாசனமேற்றப்பட்டான். இந்தக் குறிப்பிட்ட இராஜ வம்சம் இவ்வாறு அழைக்கப்பட்ட பின் நான்கு பரம்பரை காலமாக அதிகாரத்தில் இருந்ததுடன் இலங்கை பிரபுக் குலத்துடன் நெருக்கமான தொடர்புகளையும் உருவாக்கிக் கொண்டது.

கடந்த நூற்றாண்டு காலமாக நடந்துவரும் வரலாற்று உருவாக்கம், வரலாறு கற்றல் மற்றும் அதன் பரம்பல் எல்லாம் சில குழுக்களை 'பெரும்-பான்மையினர்' என்று பெயரிட்டு சட்டபூர்வமாக்குவ்தில் போய் முடிவுற்றிருப்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். இந்தச் செயற்-போக்கில் 'ஏனையோர்' வெளியொ-துக்கப்பட்டுள்ளனர். இந்த 'சிறு-பான்மை,' 'பெரும்பான்மை' பிரித்தல் செயற்பாடானது மக்களின் அடையா-ளங்களை, அவர்களது வரலாற்று நடைமுறை' யதார்த்தங்களோடொட்-டிய பன்முகப் பாங்கான அடையா-ளங்களைப் புறக்கணித்து, வெறும் மத ரீதியான அடையாளப்படுத்தலையே அர்த்தப்படுத்துகிறது. இந்தச் சட்டபூர்வமாக்கல் மற்றும் வெளியொதுக்கல்களின் பின்னால், சில தனித்துவமான அம்சங்கள் இருந்து வந்திருக்கின்றன. அவை இந்த இனத்துவ அரசுகளின் எழுச்சியுடன் மிகவும் முக்கிய தொடர்பினைக் கொண்டவையாக மட்டுமல்லாமல், இந்த இனத்துவ அரசுகள் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துபவையாகவும் அமைந்துள்ளன. அதாவது இந்தப் பிராந்தியத்திலுள்ள இனத்துவ அரசுகள் மீது அவற்றின் உள்ளார்ந்த உருவாக்கத்திற்கான கூறுகள் மற்றும் கடப்பாடுகள் அனைத்தின் மீதும் நேரடித் தாக்கத்தைச் செலுத்துவனவாய் இருந்தன.

## ii

இனத்துவ அரசுகள் உருவாக்கப்-படுவதற்கு முன்பும் பின்பும் தெற்காசியப் பிராந்திய மக்களிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்ற கருத்து பொதுவாக எல்லோ-ராலும் தெரிவிக்கப்பட்டது. இத் தொடர்புகள் வெறும் மதசார்பான உறவாக மட்டுமல்லாமல், வர்த்தகம், கலாசாரம் போன்ற துறைகளிலும் சூழலியல் சம்பந்தப்பட்ட விடயங்-களிலும் நிலவி வந்தது. இவை-யெல்லாம் செயற்கையாக, மிகவும் கொடுமையான முறையில் சிதைக்கப்-பட்டோ அல்லது கறைப்படுத்தப்பட்டோ விட்டன.

காந்தியின் அடையாள உப்புச் சத்தியாக்கிரகம்- அடக்குமுறை தன்மை கொண்ட உப்புச் சட்டத்தை எதிர்த்து ஒரு தம்பிடி உப்பை உட்கொள்வதன் மூலமாக நடாத்தப்-பட்ட இச் சத்தியாக்கிரகத்தின் மூலம் இச்சட்டம் மீறப்பட்டது- தண்டியில் நடாத்தப்பட்ட போது பிரித்தானி-யருக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கத்திற்கு பெரும் உத்வேகத்தைத் தந்தது. 1980 ஏப்பிரல் 30ம் திகதியன்று, ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட 'குடாங் கிட்மாட்கார்' என்று அழைக்கப்பட்ட (கடவுளின் சேவகர்கள்) இயக்கத்தினர் கான் அப்துல் அபார்கானின் தலைமையின் கீழ் தமது தயாரிப்பான துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு அஹிம்சை முறையிலான போராட்டத்தில் ஈடுபடப் போவதாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்-டனர். உலகிலேயே மிக மோசமான பிரித்தானியாவின் அடக்குமுறையை அஹிம்சை முறையில் அவர்கள் எதிர்கொண்டனர். எல்லைப்புற காந்தி என அழைக்கப்பட்ட இவரும் இவரது முழு வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்-படுத்திய சேனையும் பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்து நின்றனர். ஆயினும் அந்தப் பிரிவினை நடந்தது, அது நடந்து ஓராண்டுக்குள், அதாவது 1948 ஏப்ரல் 30ம் திகதி காந்தி ஒரு இந்து வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேவேளை எல்லைப்புறக் காந்தியான கான் அப்துல் அபார்கான் பாகிஸ்தானிய இஸ்லாமிய அரசாங்கத்தால் ஒரு 'இந்து மத சார்பாளன்' என்று காரணம் காட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தக் கலந்துரையாடல் பட்ட-றையில் கலந்து கொண்டவர்கள், எமது கற்றல், கற்பித்தல் நடைமுறையை தென்னாசிய பிராந்தியத்தின் யதார்த்த நிலைமைகளுக்கேற்ப மீளுருவாக்கம் செய்வதற்கான சாத்தியப்பாடுகளை ஆராயத் தொடங்க ஒப்புக் கொண்ட-னர். இத்தகைய ஒரு அணுகுமுறைக்கு எதிராக வரக் கூடிய நெருக்கடி-களையும் கூட விரிவாக ஆராய்வதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.



இந்த உபகண்டத்தினை மத-ரீதியான அடிப்படையில் பிரித்துப் பார்க்கும் போக்கின் பின்னாலுள்ள விசித்திரமான நிலைமை, ஒரு செயற்கையான ஒன்றாகவும், ஒரு விதத்தில் இப்பிராந்தியத்திலுள்ள ஒன்றின் மீது இன்னொன்று மத அடையாளங்களை மேலே திணிப்ப-தாகவும் ஆன நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது. இது தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில், வரலாற்றை அந்த நாடுகளுக்குள் விளக்குதல், கற்றல் கற்பித்தல் என்பவற்றில் விசித்திரமான பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. மதத்தன்மையற்ற, பிரத்தியேகமான எழுந்து வரும் போக்குகள், மதத்தை-யும் மத அடையாளங்களையும் தவறாகப் பயன்படுத்துவதன் காரணமாக, முழுத் தென்னாசியாவின் அரசுகளையும் நாகரீகத்தையும் இனமதவாதமயமாக்கி விட்டுள்ளன. இதிலுள்ள முரண்நகையான அம்சம் என்னவென்றால், இந்தப் பிராந்தியம் இயற்கையாகவே உள்ளக இணைப்புகளைக் கொண்டதாக இருப்பது போல, இப்பிராந்தியத்தின் பல்வேறு வகையான இனவாதங்களும் கூட தவிர்க்க முடியாத உள்ளக இணைப்புகளைக் கொண்டவையாக இருப்பது தான்! அவை ஒன்றை ஒன்று வளமூட்டிப் பேணிப் பாதுகாத்து வருகின்றன.

## iii

1947 பிரிவினை, எழுந்-துவந்த இனத்துவ அரசுகள், அவற்றின் பெரும்பான்-மையினரது கருத்துக்களாலும் பக்கச்சார்புகளாலும் கட்டுப்-படுத்தப்பட்ட மேலாதிக்க கருத்துப் போக்குகள் தொடர்-பான கலந்துரையாடல்களின் போது மீண்டும் வந்தது. இந்தக் கலந்துரையாடலின் போது எழுந்த கவர்ச்சிகரமான கோட்பாடு "பிரிவினை ஒரு தோல்வி" (இந்திய விவகாரத்தில்), பிரிவினை ஒரு சாதனை (பாகிஸ்தானிய விவகாரத்-தில்), இன்றைய இந்துக்களின் அரசியல் நடத்தைகளை நியாயப்படுத்தும் ஒரு குறியீடாக பிரிவினை (இந்து தத்துவத்தின் பேரினவாதப் போக்கு விவகாரத்தில்) என்பன பற்றிய ஆராய்வு பற்றியதாக அமைந்தது.

பிரிவினை தொடர்பான கற்பித்-தலினை, இரண்டு சமூகங்களிலும் நடைபெற்ற இனவாதமயமாக்கல் செயல்முறைப் போக்கின் உயரிய ஓர் செயற்பாடாக கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார் பணிக்கர். R.S.S, ஹிந்து மகா சபா போன்ற அமைப்-புக்களின் செயற்பாடுகள் குறித்து மிகச் சொற்பமான அளவு கவனமே குவிக்-கப்பட்டுள்ளது என்றும், பிரிவினைக்கு முந்திய அவர்களது பிரிவினைவாத செயற்பாடுகள் குறித்து எந்தத் தடயங்களும் கண்டறியப்படவில்லை என்றும் பணிக்கர் மேலும் தெரிவித்தார். வரலாற்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இந்தச் சம்பவத்-தைச் சுற்றியுள்ள தகவல்கள் குறித்து அறிந்து கொள்ள வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் ஒழிய நாட்டின் உடைவு ஒரு குறிப்பிட்ட தெரிவு செய்யப்பட்ட கருத்துக்களின் அடிப்-படையிலேயே ஆராயப்படும் என்றும் அது பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தவே செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அமர்வு, பாடசாலைகளில், கல்லூரிகளில் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் பிரிவினையை எவ்வாறு போதிப்பது என்பது பற்றிய பல்வேறு அம்சங்களைப் பற்றியும் நீண்ட கலந்துரையாடலுக்கு இட்டுச் சென்ற-துடன் இந்த பட்டறையில் கலந்து-கொண்ட ஆசிரியர்களுக்கு மிகவும் உற்சாகம் தரும் ஒன்றாக அமைந்தி-ருந்தது. எல்லைகள் எவ்வாறு உண்-மையில் விடுக்கப்பட்டன? எல்லைக் கோடு வரையப்பட்ட பிரதேசங்களை இந்த வகுப்பு எவ்வாறு பாதித்தது? பெண்கள், தலித்துக்கள், சிறைக்-கைதிகள், மனவமைதி கோரி நின்ற நபர்கள் போன்ற ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு இது எவ்வாறு அர்த்தப்-பட்டது? போன்ற இத்துயரச் சம்பவத்தின் மனித பரிமாணங்கள் வரலாற்றைப் போதிப்பதில் மிகமிக அரிதாகவே ஆராயப்பட்டுள்ளன.

பிரிவினையின் தொடர்ச்சியாக எல்லைப்புறப் பிரதேசங்களில் என்ன நடந்தது? பங்களாதேஷ் இந்தியா எல்லைக்கோட்டில் வாழும் ஐந்து லட்சம் அளவான பலமிக்க இந்து சனத்தொகை தொடர்பாக இன்றைக்-காவது நாம் எல்லோரும் அறிவோமா? இந்தப் பகுதிக்கு சித்மகால் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இவற்றில் பலரது வீடுகள் பங்களாதேஷ் கிராமங்களால் சூழப்பட்டிருக்கின்றன! சிந்து, குக் பாலைவனங்களைச் சேர்ந்த எல்லைப்புற மக்களின் நிலை என்ன?

பிரிவினை நடைமுறைக்கு வந்த-போது அதைப் பிரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொறிமுறை என்ன? அந்த நிகழ்வின் மனிதப் பரிமாணம் என்ன? இராணுவம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமாக பெரும்பாலும் இனவாத அடிப்படையில் பிரிக்கப்பட்டது. சிறைச்சாலைகளில் இருந்த சிறைக்கைதிகள், உளநல அடைக்கலம் வழங்கப்பட்டிருந்த நபர்கள் எல்லோரும் கூட அவர்களது மத அடையாள அடிப்படையில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அகற்றப்பட்டனர். ஏன், அலிகள் கூட தமது பிரதேசத்தைத் தெரிவு செய்யு-மாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் இன்னமும் இப்புறத்திலோ அல்லது அப்புறத்திலோ ஒரு வருடத்திற்கு ஒரு முறை சந்தோசமாக சந்தித்துக் கொள்கிறார்கள். இவர்-களுக்கான விசாக்களை வழங்கும் இந்திய பாகிஸ்தானிய உயர்ஸ்தானி-கர்களை இதன் மூலம் வெட்கப்பட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான சிறுவர்கள் அகதி முகாம்களில் காணாமல் போனார்கள். சிந்து மாகாணம் அத்தியாவசிய சேவைகள் நடாத்தல் சட்டம் என்ற ஒரு சட்டத்தை, பிரிவினையைத் தொடர்ந்து அமுலுக்குக் கொண்டு வந்தது. இச்சட்டம் அந்த மாகாணத்தின் நகர் சுத்திகரிப்பு வேலைகள் அனைத்தும் ஸ்தம்பித்து விடும் என்ற காரணத்-திற்காக தலித்துகள் யாரும் இந்தியாவுக்கு போகக் கூடாது என்று தடை விதித்தது.

இன்று வரையும் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்துவதும் தனிப்-பட்டவர்களது நினைவுகளை குற்றம் சாட்டுவதாகவும் உள்ள இந்த மாதிரியான ஒரு விடயத்தைப் பற்றிப் பேசுவதானால், மேற்கூறிய அனைத்து விடயங்களும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும் என்பது அனைவரதும் பலமான அபிப்பிராயமாக இருந்தது. இந்த விடயங்களைக் கையாளும் ஆசிரியர், இது தொடர்பான பன்முகத் தன்மை வாய்ந்த போக்குகளையும் படைப்பாற்றலுடன் கற்பிப்பதற்கு முன்பாக, இது போன்ற ஒரு கடினமான விவகாரம் வகுப்பறையில் ஏற்படுத்தக் கூடிய காயங்களைத் தாங்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

இத்தகைய ஒரு உயிரோட்டமான கலந்துரையாடல், இன்று இனரீதியான பிரிவினையின் சாத்தியப்பாடு ஒன்றை எதிர்நோக்குகின்ற இலங்கையில் மிகுந்த பொருத்தப்பாடு உடைய ஒன்றாக இருக்கும் என்பது அங்கு உணரப்பட்டது. எல்லா பங்கு-பற்றாளர்களும் 'பிரிவினை எவ்வாறு கற்பிக்கப்பட வேண்டும்' என்ற விடயம் தொடர்பாக, நாட்டின் எல்லைப் பகுதிகளிலும், தென்னாசியாவின் பிற பகுதிகளிலும் பட்டறைகள் நடாத்தப்பட வேண்டும் என்று கருதினர்.

(அடுத்த இதழில் முடியும்)

நன்றி - நூலகத்திட்டம்



# அடக்குமுறை கருவியாக ஊடகம் - I

அடுத்த நூற்றாண்டின் மிகப்பெரும் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் (media) இருக்கப்போகிறது. ஊடகத்தின் நேர்ப்படியான (positive) பாத்திரத்தைப் போலவே எதிர்மறை (nagative) பாத்திரமும் உண்டு.

ஊடகம் இன்று நம்மையெல்லாம் வழிநடத்துகிறது. நம்மை வழிநடத்துகிறது என்று கூறப்படுவதன் அர்த்தம் இன்றைய எமது சிந்தனைகளை தீர்மானிப்பதாக அது ஆகிவிட்டிருக்கிறது.

இன்றைய பெரும்போக்கு (mainstream) எது என்று தீர்மானிக்கும் சக்தியாக அது ஆகிவிட்டிருக்கிறது. பிற்போக்கு ஆதிக்க சித்தாந்தங்களை பெருங்கதையாடல்களாக ஆக்கி அவற்றை நிலைநிறுத்தும் கருவியாக இது ஆகிவிட்டிருக்கிறது.

ஊடகத்தை யார் கொண்டிருக்கிறாரோ அவரிடம்/அச்சக்தியிடம் மனித நடத்தையை கட்டுப்படுத்தும் அதிகாரம் இருக்கிறதென்று அர்த்தம் என்பர் சிலர். இது உண்மையில் உண்மை. ஊடகத்தை கொண்டிருப்பவர் அல்லது கொண்டிருக்கும் சக்தியிடம் சிந்தனையை மட்டுப்படுத்தும், கட்டுப்படுத்தும், வழிநடத்தும் சக்தி உண்டு.

இவ்வாதத்துக்கு மறுப்பு கூறும் சாரார் இதனை, இன்னும் ஊடகம் சென்றடையாத பின்தங்கிய நாடுகளில்/பின்தங்கிய கிராமங்கள் அதிகமுள்ள உலக சமுதாயத்தில் இக்கருத்து எப்படி சரியாகும் என வினவுவர். ஆனால் பின்தங்கச் செய்யப்பட்ட சமுதாயங்களில் நிச்சயம் ஊடகம் நேரடியாக சென்றடைய வேண்டுமென்பதில்லை. அந்த சமுதாயங்களை அதிகாரம் செலுத்துகின்ற சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டம்சங்கள் இந்த ஊடகங்களால் ஏலவே வழிநடத்தப்பட்டிருக்கும். ஆக, இன்று இந்த ஊடகம் வழிநடத்தாத எந்த சமூகமும் உலகில் இல்லை.

ஊடகம் இன்று சகலவற்றையும் தீர்மானிக்கின்ற முக்கிய கருவியாக ஆகிவிட்டிருக்கிறது. இன்றைய ஊடகங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் அதிகாரத்துவ சக்திகள், தமது அதிகாரத்தை நிலைநாட்ட இந்த ஊடகங்களை மிகவும் தந்திரமாகவும் நுட்பமாகவும் கையாண்டு வருகின்றன. ஏற்கெனவே புரையோடிப் போயிருக்கின்ற அதிகாரத்துவ சிந்தனைகளை, ஆதிக்க சிந்தனைகளை, உறுதியாக பலப்படுத்துவதில் இவை இந்த கைதேர்ந்த ஊடகங்களை கையாள்கின்றன.

ஆதிக்க பிற்போக்கு சிந்தனைகளையும், மரபார்ந்த அதிகார ஐதீகங்களையும் மீளுறுதி செய்கின்ற சித்தாந்த மேலாதிக்கத்தை இந்த ஊடகங்களைக் கொண்டே இன்று உலகம் முழுவதுமான அதிகார சக்திகள் செய்து வருகின்றன.

எனவே தான் உலகின் பல்வேறு புரட்சிகர சக்திகள் இன்று ஊடகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முனைப்பு காட்டுகின்றனர். அதுமட்டுமன்றி இன்றைய புரட்சிகர சமூக மாற்றத்துக்காக போராடும் சக்திகள் எதிரி கொண்டிருக்கும் இந்த ஊடக ஆற்றலை எதிர்த்து நிற்கக்கூடிய வகையில் ஊடக வளங்களை/ஆற்றலை தாமும் கைப்பற்ற முனைகின்றன. இது இன்றைய அதிகாரத்துக்காகப் போராடும் சகல சக்திகளுக்குமான முன்நிபந்தனையாக - சித்தாந்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுகின்ற ஊடகங்கள்- ஆகிவிட்டிருக்கின்றன.

இந்த ஆதிக்க சித்தாந்தங்களை நிலைநாட்டுவதிலும் மூளைச்சலவை செய்து அடிமைத்துவ சமூக அமைப்பை ஏற்படுத்தவும், அடிபணிய வைக்கும் முயற்சியிலும் இந்த ஊடகங்களை மிகவும் நுட்பமாக பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

நோம் சொம்ஸ்கி இதனை தொடர்பூடக பயங்கரவாதம் (MEDIA TERRORISM) என்கிறார். இந்தப் போக்கை ஆராய்கின்ற இன்னும் சில சமூகவியலாளர்கள் இதனை தொடர்பூடக மாபியா (Media Mafia) என்றும் ஊடக வன்முறை (Media Violation) என்றும் குறிப்பிடுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் இந்த ஊடகங்கள் இன்று "அதிகாரத்துவத்தின் கருவிகளாக" (Media as a Weapon of Power) பயன்படுத்தப்படுகின்றன.

ஊடகங்களின் பன்முகத்தாக்கம் பற்றிய கரிசனையானது தகவல்தொழில்நுட்ப வியாபகத்தோடு அதிகரித்ததெனலாம். இந்நிலையில் தான் ஊடகவியல் பற்றிய சமூகவியல் ஆய்வுகள் இன்று அதிகரித்துள்ளன. சிவில் சமூகத்தில் அது ஆற்றும் பாத்திரம், உற்பத்தி உறவுகள்- குறிப்பாக மூலதனம் இதில் செலுத்தி வருகின்ற நிர்ப்பந்தங்கள், மூலதனத் திரட்சி ஊடகத்தில் காலூான்ற எடுத்துவரும் முயற்சி, திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்கள் தரகு முதலாளிகளுக்கூடாக ஊடகத்தைக் கைப்பற்றுவதில் எடுத்துவரும் முயற்சிகள், நவீன அரசுகள் தனது அடக்குமுறை இயந்திரங்களில் ஒன்றாக இதனை பயன்படுத்த தலைப்படுகின்ற போக்கு, அவ்வாறு அடக்குகின்ற மற்றும் அடக்கப்படுகின்ற சக்திகளின் எதிர்காலம் என பல கோணங்களில் இவை குறித்து அலச வேண்டியுள்ளது.

பெரும்பாலும் ஊடகத்தின் உட்கட்டமைப்பு (infra structure) பற்றியே பெருமளவான ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கிற நிலையில் அதன் புறச் சக்திகளின் தலையீடு, தாக்கம் எதிர்காலம் குறித்து தற்போதைய ஆய்வுகளில் கூடிய கரிசனை கொள்ளப்பட்டு வருகிறது.



ஏற்கெனவே எமது சமூக அமைப்பில் நிலவுகின்ற ஆதிக்க சித்தாந்தங்களை மீளுறுதி செய்து, அதனை மீள கட்டமைக்கின்ற பணியினை ஆற்றுவது ஆதிக்க சக்திகள் தமது அதிகாரத்தை நிலைநாட்ட முன்நிபந்தனையானது. எனவே அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு, அடிமைத்துவத்தை நிலைநாட்டி அதற்கு அடிபணிய வைக்கவோ அல்லது அவற்றுடன் சமரசம் செய்து கொண்டு

## ஊடகத்தால் எவ்வாறு வழிநடத்தப்படுகிறோம்?

வாழவோ பழக்க ஏற்கெனவே எமது சமூக அமைப்பில் மதம், கல்வி, பண்பாட்டு கலாசார ஐதீகங்கள், சட்டம் என நிறுவப்பட்டுள்ளன. இவ்வத்தனையையும் ஒருங்கு சேர செய்து முடிக்க இலகுவான வழியாக இன்றைய ஊடகம் ஆற்றல் மிகுந்ததாக உள்ளது. எனவே தான் அதிக்கக் கருவிகள் இதில் அக்கறை செலுத்துவது இன்றிமையாததாக ஆகிவிட்டிருக்கிறது.

அடக்கப்படும் மக்கள் பிரிவினர் முகம் கொடுக்கும் இன்னல்கள் வெகு சாமர்த்தியமாக மூடி மறைக்கும் ஆற்றல் இந்த ஊடகத்துக்கு உண்டு. அதுபோல இல்லாத ஒன்றையும் இருப்பதாக காட்டவோ அல்லது அதனை ஊதிப்பெருப்பிக்கும் ஆற்றலும் இந்த ஊடகத்துக்கு உண்டு. இவ்வாறு மறைப்பதும், ஊதிப்பெருப்பிப்பதும் ஊடகத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் சக்திகளின் நலன்களிலேயே தங்கியிருக்கின்றன.

கிளின்ரன் மோனிக்கா லிவின்ஸ்கி விவகாரம் பற்றி திரும்பத்திரும்ப பேசும் ஊடகம் உள்நாட்டில் நடந்த கோணேஸ்வரி குறித்தும், கிருஷாந்தி குறித்தும் அதை விட குறைந்த முக்கியத்துவத்தையே தரும். சிங்கள ஊடகங்கள் அதை விட குறைந்த முக்கியத்துவத்தை தரும் அல்லது ஒன்றும் தராது. கிளின்ரனின் நாய்க்கு சுகமில்லாதது சர்வதேச அளவில் செய்தியாகும் அதே வேளை வன்னிப் பட்டினிச் சாவு உள்ளாட்டிலும் தெரியாமல் செய்யப்படும்.

அமெரிக்காவில் ரொனால்ட் ரேகனும், தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா..., இலங்கையில் காமினி பொன்சேக்கா போன்ற வெறும் திரையுலக நட்சத்திரங்கள் அரசியல் பிரமுகர்களாக ஆக்கப்பட்டதும் இந்த சினிமா எனும் ஊடகத்தையும், ஏனைய ஊடகங்களும் ஊதிப்பெருப்பித்து ஏற்படுத்திய மாயை என்பதை நாமெல்லோரும் விளங்கிக் கொள்வோம்.

எப்போதும் எந்த சக்தியும் அல்லது தனிநபரும் தான் கொண்டிருக்கும் அக-புற, ஆற்றல் /வளங்கள் தக்கவைக்கப்படுவதற்காக/அதிகரிக்கப்படுவதற்காக அவை அதிகாரமாக உருவெடுக்க வைக்கின்றன.

ஒழுக்கம், பால்வாதம், இனவாதம், வயதுத்துவம், பதவி, சாதியம், நிறவாதம் என பல்வேறு வடிவங்களிலும் நிலவுகின்ற ஆதிக்க உறவுகள், அதிகாரத்துவமாக தொடர்ந்தும் நிலைபெற அவை நியாயம் கற்பிக்கப்படவேண்டும். "மதத்தின்" பெயரால், "தூய்மை"யின் பெயரால் இந்த கற்பிதங்கள் குறித்து மூலைச்சலவை மிகுந்த சித்தாந்த மோதிக்கத்தை நிலைநாட்டியே ஆகவேண்டும்.

இப்படி கருத்தேற்றம் செய்யப்பட்ட கற்பிதங்களை நிலைநாட்டுவதில் ஊடகம் முக்கிய பங்காற்றி வருகின்றன.

இந்த வகையில் ஊடகம் பற்றிய நமது பார்வை எளிமைப்படுத்தப்பட்டே இருக்கின்றன. குறைத்து மதிப்பிடப்படுகின்றன. ஊடகம் நம்மை ஒன்றும் செய்து விடமுடியாது என்கின்ற மாயையில் இருத்தப்பட்டுள்ளோம். எனவே தான் ஊடகத்தின் வடிவம், பண்பு, அதன் திசைவழி என்பன குறித்து அவ்வளவாக எம்மத்தியில் அக்கறைக் கிடையாது. தொலைக்காட்சியில் 30 வினாடிகள் கொண்ட ஒரு விளம்பரத்துக்கு சராசரியாக அறுபதினாயிரம் ரூபா வரை அறவிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிந்தால் அசந்து போவார்கள்.ஒரு தடவைக்கு இவ்வளவு அறவிடப்படுகிறதென்றால் எத்தனை முறை குறிப்பிட்ட விளம்பரம் வருகின்றது? அப்படியெனில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டும்? நம்மீது அது எந்த விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லையென்றால் ஒரு நிறுவனம் ஏன் இவ்வளவு தொகையை அவ்விளம்பரத்துக்கென ஒதுக்குகிறது? அவ்வாறெனில் விளம்பரம் எவ்வாறு எம்மில் பிரதிபலிக்கின்றது?

தகவல் களஞ்சியங்களை வைத்திருக்கும் சக்திகளால் உலகு ஆளப்படப் போகிறது எனும் கருத்தாக்கம் வலுவாகி வருகின்றது. இது பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதை இன்டர்நெட் செய்திகள் கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது.

எது பற்றிய முடிவுகளுக்கு வருவதற்கும் அடிப்படையில் தரவுகளை-தகவல்களை நம்பியிருக்க வேண்டிய தேவை நிலவுகின்ற நிலையில் போட்டி போட்டுக்கொண்டு தகவல்களை முன்கூட்டியே அறிய /பெற முயற்சிகள் நடக்கின்றன. அது போலவே தகவல்களை களஞ்சியப்படுத்துவதற்கும் அவற்றைத் தருவதற்காகவும் /சந்தைப்படுத்துவதற்காவும் போட்டிகள் நிலவப்போகின்றன. இந்நிலையில் தகவல் தொழில்நுட்பத்தின் மீது மூலதன் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டது. 'நட்சத்திர யுத்தம்", "வான்வெளி யுத்தம்" என்கிற கருத்தாக்கங்கள் மங்கி இனி வரப்போகும் காலம் தகவல் யுத்தத்துக்கான (IT War) காலம் என்கிற கருத்தாக்கம் வலுவாகி வருகின்றன.

வெறும் தரவுகள்/தகவல்களை சித்தாந்த சுமையேற்றி பரப்புகின்ற வேலையை ஏற்கெனவே உலகில் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன. அமெரிக்கா இதற்காக தமது உயர்ந்தபட்ச தொழில்நுட்பத்தையும், வளங்களையும் பயன்படுத்தி வருவது இரகசியமானதல்ல.

தரவுகள், தகவல்கள் பரப்பப்படுவதற்கு/ அனுப்பப்படுவதற்கு/விற்பனைசெய்யப்படுவதற்கு முன்னரே அதன் நுகர்வோர் யார் என்று இந்த தகவல் முதலாளிகளால் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றது. அதற்கேற்றபடி அதன் வடிவம், வரிசை, உள்ளடக்கம், பண்பு என்பன கட்டமைக்கப்பட்டுவிடுகின்றன.

இத்தகவல்களை வழங்குகின்ற சாதனமாக, சகலவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக இது தோன்றி, வளர்ந்து, ஊடுருவி, வியாபித்திருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் எதிர்வரும் மில்லேனியத்தின் (ஆயிரம் ஆண்டுகளைக் குறிக்கின்ற millenium) முதல் நூற்றாண்டை தகவல் புரட்சி நூற்றாண்டு என்கின்றனர். தகவலைக் கொண்டிருக்கிற சக்திகளே அதிகார சக்திகளாக ஆகக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் எனும் கருத்தாக்கம் இன்று நம்பக்கூடியதாக உள்ளது. ஆதிக்க சக்திகள் தமது அதிகாரத்துவத்தை தக்கவைக்க, அதனை விரிவுபடுத்த மிகக் கனமாக தகவல்களை உற்பத்தி செய்து உற்பத்தி செய்யப்பட்ட அத்தகவலை அரசியல்மயப்படுத்தி/ கருத்தேற்றம் செய்து அல்லது புனைந்து/திரிபுபடுத்தி/பெருப்பித்து சிறுப்பித்து சந்தைக்கு விடுகின்றன.

இதற்காக இரண்டு வகை பிரதான தந்திரோபாயங்களை அது அணுகும். முதலாவது, சந்தையில் ஏற்கெனவே கேள்வி அதிகம் (ஏற்கெனவே புரையோடிப்போயுள்ள ஆதிக்கக் கருத்துக்கள்) எதற்கு என பார்த்து அந்த இடைவெளியை நிரப்புவது. இரண்டாவது, தான் சந்தைப்படுத்த விரும்புகின்ற புதிய செய்திகளை/ கருத்தாக்கங்களை சந்தைக்கு விட்டு சமூகத்தை அதற்கு பழக்கப்படுத்துவது, போதைகொள்ளச் செய்வது.

இதனை நாம் உன்னிப்பாக அலச வேண்டியிருக்கிறது. அடுத்த நூற்றாண்டின் மிகப்பெரும் தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் இருக்கப்போகிற நிலையில் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருப்பது அவசியத்திலும் அவசியம்.

மொத்தத்தில் உலகில் ஆளும் வர்க்கங்கங்கள்/ சக்திகள் தமது நவகாலனித்துவத்தை அடுத்த நூற்றாண்டுக்கும் எடுத்துச் செல்வது இந்த தகவல் தொழில்நுட்பத்தை நம்பியே என்பதை கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இன்றைய உலகமயமாதல் போக்குக்கூடாக மலினத்துவத்தை வேகமாக மக்கள் மயப்படுத்துவதற்கும் இந்த தகவல் தொழில்நுட்பத்தை/ஊடகத்தைத் தான் நம்பியிருக்கிறது.

ஆக ஒட்டுமொத்தத்தில் நவ பாசிசம் என்பதன் புதிய வடிவம் தகவல் தொழில்நுட்பத்துக்கூடாகவே மேற்கொள்ளப்படப் போகிறது. அதுபோல அதனை முறியடிக்க முனையும் எந்த சக்தியும் இந்த இதே ஊடகத்தை கருத்திற் கொள்ளாமல் துரும்பு கூட முன்னேற முடியாது என்பது குறித்து மீள மீள எச்சரிக்கை கொள்ள வேண்டியுள்ளது.

-கோமதி

நன்றி - நூலகத்திட்டம்



கனடா:

# நெஞ்சை உலுக்கிய தற்கொலைக் கொலையும் தமிழ் ஊடகங்களின் அறிவிலித்தனமும்

கனேடிய மக்களின் மனங்களை ஒரு கணப் பொழுது கலங்க வைத்த அந்தச் சம்பவம் என்றுமே எவருமே எதிர்பார்க்காத ஒன்று. ஆவணி 22ம் திகதி மாலை 06.30 மணியளவில் ஜெயபாலன் பாலசிங்கம் (41) தனது மூன்று வயது அன்பு மகன் சயந்தனை நெஞ்சில் அணைத்துப் பிடித்துக் கொண்டு பாதாள ரயிலின் முன் பாய்ந்து தன்னை மாய்த்துக் கொண்டதுடன் தனது மகனின் கொலைக்கும் காரணகர்த்தாவாகி, கொலையுடன் இணைந்த தற்கொலையாகத் தனது வாழ்வையும், அந்தப் பச்சிளம் பாலகனின் வாழ்வையும் முடித்துக் கொண்டார். அவரது தற்கொலையிலும் பார்க்க ஒன்றுமறியாத குழந்தையின் கொலையே கனேடிய மக்களினதும், எம்மவரினதும் மனதைத் தொட்டு ஒரு கணம் சிந்திக்க வைத்த ஒரு நிகழ்வாகி விட்டது.


சயந்தன்

மேற்படி தற்கொலைக் கொலையாளி கடந்த மூன்று வருடங்களாக மன நலமற்று இருந்ததுடன் மன இறுக்கம், மனப்பயம் இரண்டிற்கும் மனநல வைத்தியரிடம் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இருந்த போதிலும் குளிர் காலத்திற்குப் பின் அதாவது ஜூலை மாதத்தின் பின்னர் தனது வைத்தியரைச் சந்திக்காததுடன், தனது நோய்க்கான மருந்துகளையும் புறக்கணித்து வந்துள்ளார் என. மேற்படி நபரிற்குச் சிகிச்சை அளித்த ஸ்காபரோ பொது வைத்தியசாலையைச் சேர்ந்த மனநோய் மருத்துவர் டொக்டர் சூரியபாலன் கூறினார். இவர் இறப்பதற்குப் 19 நாட்களுக்கு முன்னர் தான் இவருக்குப் பெண் குழந்தை ஒன்றும் பிறந்திருந்தது. இந்தச் செய்தியை முன் பக்கத்தில் முக்கியம் கொடுத்துப் பிரசுரித்த ரொரன்ரோ ஸ்டார் (24.08.1999) பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது.

"நாம் சாதாரணமாகத் தற்கொலையை ஒரு செய்தியாக எமது பத்திரிகையில் வெளியிடுவதில்லை. ஆனால், இந்தச் செய்தியைப் பிரசுரிக்க வேண்டிய அவசியமுள்ளது. ஏனெனில், இது கொலையுடன் சேர்ந்த தற்கொலையாகும்".

அத்துடன் இந்த விடயத்திற்கு அனைத்துக் கனேடிய பத்திரிகைகளும், ஏனைய ஊடகங்களும் மிக முக்கியத்துவம் கொடுத்ததுடன் இந்தச் சம்பவத்தின் பின்னணி பற்றி ஆழமாகக் கவனம் செலுத்தியுள்ளன.

ஆனால், இங்கே தமிழ் மக்களின் முதுகில் சவாரி விடும் கலைக்குதவாத தமிழ் மொழி மூலமான வியாபாரப் பத்திரிகைகளோ அல்லது அவர்களுடன் இணைந்த ஏனைய வானொலி ஊடகங்களோ இந்தச் சம்பவம் பற்றி உரிய கவனம் செலுத்தவில்லை என்பது அவர்களின் சிந்தனை வரட்சியின் வெளிப்பாடே. அதேவேளை தமிழ் மக்களின் துன்ப, துயரங்களைத் தங்களின் பிழைப்பிற்கு அடிப்படையாகக் கொண்ட தமிழ் ஈழம் என்ற தமிழ் என்ற பெயர்ப் பலகைப் பொது நிறுவனங்கள் கூட (அரசின் உதவி பெறுவன) உரிய அக்கறை செலுத்தவில்லை என்பது கவலைப்பட வேண்டிய, கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. மக்களாகிய நாமாவது இதில் சற்றுக் கரிசனை கொண்டாக வேண்டும். ஏனெனில், தற்கொலையே ஒரு போராட்ட வடிவமாகவும், தற்கொலைச் செயலையே மாபெரும் தியாகமாகவும் கொண்டாடுகின்ற, அதையே முக்கிய செய்தியாக மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற ஒரு சூழல் நிலவுகின்ற போது, மேற்படி அமைப்புகளின் செயற்பாடுகள் வாலாயகப் போவது தவிர்க்க முடியாததே. இங்கே தான் ரொரன்ரோ ஸ்டாரின் நிலைப்பாட்டிற்கும், எம்மவரின் செயற்பாட்டிற்குமிடையிலான பாரிய முரண்பாடு வெளிப்படுகின்றது.

ஜெயபாலன் பாலசிங்கம் என்ற மேற்படி நபர் 1988 தொடக்கம் கனடாவில் வசிக்கின்றார். அவர் ஒரு கனேடியப் பிரஜை. மேலும் அவர் குடும்பத்தவரால் ஒழுங்கு செய்யப்பட்ட பெண்ணையே இலங்கை சென்று மணம் முடித்தார். துப்பறியும் பொலிஸாரான Mark Mendleson இன் கூற்றுப்படி இவரும், மனைவியும் கடந்த மூன்று வருடங்களாகச் சந்தோஷமாக இல்லறம் நடத்தியதாக உறவினர் தெரிவித்துள்ளனர். ஏன், இவரை மேற்பார்வை செய்த மனநல வைத்தியரும் ஜெயபாலன், தான் தற்கொலை செய்வதுடன், தனது மகனையும் கொலை செய்வார் எனத் தான் எதிர்பார்க்கவில்லையென்று பத்திரிகைகளுக்குக் கூறியுள்ளார். ஆனால் Mendleson இன் இன்னுமொரு கூற்றுப்படி ஜெயபாலன் தம்பதிகளுக்குப் பெண் குழந்தை பிறந்ததிலிருந்து, ஜெயபாலனின் மன இறுக்க நோய் மோசமடைந்துள்ளது. மன நல மருத்துவரை ஜெயபாலன் கடைசியாகச் சந்தித்தது ஜூலை 16ம் திகதியாகும்.


THE TORONTO

Subway murder-suicide shocks relatives, doctor

ஜெயபாலன் பாலசிங்கம் மகளுடன் கீழே மனைவி

Few knew father gripped by depression

பத்திரிகையாளரின் ஆய்விலிருந்து இன்னும் பல விபரங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. மன நல மருத்துவர் சூரியபாலன் இன்னும் பல தமிழ்ச் சமூகத் தொண்டர்கள், தற்கொலைச் சிறப்பு ஆய்வாளர்கள் (Suicide Specialists) முதலியோரின் கூற்றுப்படி கனடா வாழ் தமிழர் சமூகத்தில், அதிர்ச்சி அடைய கூடியளவு பலர் மன இறுக்கம், மன நோய் காரணமாகத் தற்கொலைச் சிந்தனையை எதிர்நோக்குகின்றார்கள். மேலும் இவர்களின் கூற்றுப்படி தற்கொலை நிகழ்வுகள் இந்தச் சமூகத்தில் பயப்படும்படி அதிகரித்துள்ளதுடன், பலர் அந்த நோய்க்குரிய சிகிச்சையையும் கூட நாடுவதில்லை. ரொரொன்ரோ பல்கலைக்கழகத்தின் (Cultural Pluralism And Health) பேராசிரியர் Dr. Morton Beiser இன் அபிப்பிராயம் இங்கு எமது முக்கிய கவனத்திற்குரியது. "I have to say that the Tamil community has been sounding alarm bells for years now."

தமிழ் சேவைக் கழகத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் நாகா இராமலிங்கம், கனடா வாழ் தமிழ்ச் சமூகம் மத்தியில் நிலவுகின்ற இந்த மோசமான நிலை பற்றிய தனது அபிப்பிராயத்தில் மிகச் சாதாரணமான மேலெழுந்தவாரியான சில காரணங்களை முன்வைப்பதுடன் திருப்தி அடைகின்றார். அவர் கூறும் காரணங்கள் பின்வருமாறு, வேலை தேடுவதில் ஏற்படும் அழுத்தம், கனேடியச் சூழ்நிலைக்குத் தம்மைப் பொருத்திக் கொள்வதில் ஏற்படும் இயலாமை, மனநோய், இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்த நினைவுகள். அத்துடன் அவர் தான் அறிந்த இத் தற்கொலைக்கு முன்னதாகச் சென்ற மாதத்தில் நடைபெற்ற வேறு இரு தற்கொலைகளைக் குறிப்பிடவும் தவறவில்லை. ஆனால், அத் தற்கொலைச் சம்பவங்கள் பற்றி விபரிக்கவில்லை.

இங்கே நம்மவரிடையே நடைபெறும் தற்கொலைகள் கூட வன்முறை வடிவிலான கொடூரமான முறையாகவே உள்ளன.

ஏன் இவ்வாறு குறிப்பிட வேண்டியுள்ளது என்றால், அனேகமான தற்கொலைகள் ஓடும் ரயிலின் முன் பாய்தல் அல்லது உயர் மாடிகளில் இருந்து குதித்தல் என்ற வடிவங்களிலேயே அமைகின்றன. மிகவும் உயரமான மாடிகளிலிருந்து குதித்துத் தற்கொலை செய்பவர்களில் எல்லா வகையினரும் அடங்குகின்றார்கள். உதாரணமாகப் 15வயது மாணவன் முதல் பெண்கள், ஆண்கள் என எல்லாரும் அடங்குகின்றார்கள். இவ்விருவழிகளைத் தற்கொலையாளர்கள் நாடுவதற்கு இவையே அவர்களுக்கு இலகுவான வழிமுறைகளாகத் தெரிவதும் ஒரு காரணமாக இருக்கலாம். ஊரில் நாங்கள் அறிந்தவரையில் தற்கொலையாளர்கள் பெரும்பாலும் நாடுவது நச்சுப் பொருட்கள் அல்லது தூக்குக் கயிறு தான்.

ரொரன்ரோ சன் பத்திரிகையில் வெளிவந்த 28.08.1999 திகதிய செய்தியின்படி, "கடந்த 15 வருடங்களில் ஏற்பட்ட குடிவரவாளர் வருகையினால் 200,000 இலங்கைத் தமிழர்கள் கனடாவில் வாழ்கின்றார்கள். மேலும் அவர்களில் 75 வீதமானர்கள் ரொரன்ரோ நகரில் வாழ்கின்றார்கள். மன நல சேவையாளர்கள் கருத்துப்படி மன இறுக்கம் சார்பான தற்கொலை இவர்களிடம் அதிகரித்துச் செல்கின்றது".

இது மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தாலும் கூடச் சமூக அக்கறைக்குரிய மிக முக்கியமான பிரச்சினையாகும்.

மேற்படி பத்திரிகைக்கான நேர்காணலில் தமிழீழ சங்கத்தைச் சேர்ந்தவரும், அந்த அமைப்பின் தலைவருமான சித்தா சிற்றம்பலம் இந்த நோய்க்கான சில காரணங்களை முன்வைத்துள்ளார்.

அவரது கூற்றுப்படி உள்நாட்டுப் போர், அந்தப் போரினால் வீடு, சொத்து என்பவற்றை இழந்தது, குடும்ப அங்கத்தவர்கள் முதலியோரின் இழப்பு என்பன பற்றிய பழைய நினைவுகளும், கனேடிய சூழ்நிலைக்குத் (Less - Restrictive Canadian Society) தம்மைப் பொருத்திக் கொள்வதில் ஏற்படும் கஷ்டம், பொருளாதாரச் சிக்கல்கள் என்பன மன இறுக்கத்திற்கான காரணங்களாகும். ஆனால், இவர் முன்வைக்கும் காரணங்கள் எந்தளவுக்கு ஆய்விற்கு உட்பட்டன என்பது தெரியவில்லை. இவ்வாறு சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த தமிழர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் ஏன் இந்தியாவில் மிகப் பெரும்பான்மையினர் பல பொருளாதாரக் கஷ்டங்களுடனும், இந்திய அரசின் நெருக்கடிக்குக் கீழ் வாழ்ந்தாலும் இவ்வாறு அதிகமான தற்கொலைகள் நடைபெறவில்லை. இதற்கான காரணம் என்ன? இங்கே கனடாவில் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட உரிமை, அரசின் பொருளாதார உதவி (குறைந்ததாக இருந்தாலும்) கிடைத்த போதும் தற்கொலையின் உயர்விற்குக் காரணம் என்ன? இந்த அளவிற்குப் பின்னரும் கூட கனேடிய அரசின் நிதி உதவியில் அதுவும் பல் கலாசார அமைப்பு என்ற மகுடத்தின் கீழ் உள்ள ஒரு அமைப்பாக இயங்குகின்ற எமது தமிழ்ச் சேவை நிறுவனங்கள் இந்தப் பிரச்சினை பற்றி எந்தளவிற்கு அக்கறை செலுத்தியுள்ளன? இது பற்றி மக்களிற்கு அறிவூட்ட என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பது கேள்விக்குறியே.

மேலும் இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து The Toronto Sun 26.08.1999 இல் Diagnosis Depression என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும், அவ்வாறே "The Toronto Star இல் "When you just can't go on any more" (Depression is often taken lightly, but it can be a killer) என்ற தலைப்பில் 29.08.1999 இல் வேறொரு கட்டுரையையும் பிரசுரித்துள்ளன.

முதலாவது கட்டுரையின் ஆசிரியர் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் அபிப்பிராயங்களையும் ஒன்று திரட்டி விபரமாக எழுதியுள்ளதுடன் "Warning Signs To Watch For" என்ற தலையங்கத்துடன் ஒரு பெட்டிச் செய்தியையும் சிறப்பாக எழுதியுள்ளார். இனி அவரின் தேடலை இங்கு நோக்குவோம்.

"The Centre For Addiction And Mentall Health In Toronto" அமைப்பைச் சேர்ந்த Christina Bartha இன் கூற்றுப்படி "சில வேளைகளில் மன அழுத்தத்தால் (Clinical Depression) பாதிக்கப்பட்ட சிலர் நம்பிக்கையை இழப்பதுடன், தங்களுக்கு ஒரு வழியிலும் எவராலும் உதவ முடியாதென நினைத்துத் தங்கள் ⇨

---

**மன இறுக்க நோய் பற்றி**

**நாம் எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டியவை - அறிகுறிகள்**

இவை Clinical Depression பற்றிய விடயங்களாகும்.

01. துக்கமான உணர்வை (வெளிப்படுத்துதல்) - அதாவது அடிக்கடி அழுதல் அல்லது எளிதில் கோபங் கொள்ளல்

02. முன்னர் சந்தோஷமாக அனுபவித்த விடயங்களில் தற்போது ஆர்வம் இழந்த நிலை (பாலியல் உறவு, மற்றவர்களுடன் அளவளாவல்......)

03. உடல் இளைத்தல் (Loss Of Weight), பசியின்மை.

04. நித்திரை கொள்ளும் ஒழுங்கில் மாற்றம் (Changes In Sleeping Patterns).

05. குற்ற உணர்வு, நம்பிக்கையிழப்பு, நம்பிக்கையீனம் (Worthlessness, Hopelessness).

06. விடயங்களில் கவனத்தைக் குவிக்க முடியாமை, ஞாபக மறதி, தீர்மானம் எடுக்க முடியாமை.

07. களைப்பு அல்லது சக்தி இழப்பு.

08. பதட்டம் அல்லது செயற்பாட்டில் தளர்ச்சி.

09. உடல் நோ, உழைவு பற்றியப் பிரஸ்தாபம் ஆனால், அவற்றிற்கு எந்தவொரு மருத்துவக் காரணத்தையும் கண்டு பிடிக்க இயலாதிருத்தல்.

10. தற்கொலை அல்லது மரணம் பற்றிப் பிரஸ்தாபித்தல் ஆனால், இவ்வாறு நோயாளர் கூறுவாராயின் அதில் அசிரத்தையாக இருக்காமல் உடன் கவனம் செலுத்த வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



பிரச்சினைக்குரிய ஒரே ஒரு தீர்வு மரணம் தான் என்கின்ற முடிவிற்கு வருகின்றார்கள். ஆனால், அனுபவம் மிக்க நோய் தீர்ப்பாளர்களின் கருத்துப்படி 80 வீதமான நோயாளர்களை வழக்கமான மருந்துகளின் மூலம் வெற்றிகரமாகக் குணப்படுத்த முடியும் என நம்புகின்றார்கள்.

"The Wings Developement Centre in Toronto" என்ற அமைப்பைச் சேர்ந்தவரும், அதன் Clinical Director ஆகக் கடமையாற்றுபவருமான Dr. Ed Blackstock இன் கருத்துப்படி, பெண்களிலும் பார்க்க மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் ஆண்கள் தான் அனேகமாகத் தற்கொலை செய்துகொள்கின்றார்கள்.

The Canadian Mental Health Association ஐச் சேர்ந்த Scot O' Grady இன் கருத்துப்படி "Clinical depression" ஆல் பாதிக்கப்படுபவர்களில் 15 வீதமானவர்கள் தற்கொலை செய்து கொள்வது இன்றைய நிலையில் மிக அதிகமானது. ஏனெனில், இந்த நோய்க்கு உரிய சிகிச்சை முறை உண்டு."

Christina Barthaன் குறிப்புப்படி பத்துப் பேருக்கு ஒருவர் என்ற ரீதியில் கனேடியர்கள் இந்த மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றார்கள். ஆனாலும் கூட இந்த நோய்க்கு உரிய சிகிச்சை உண்டு என்பதுடன் இதன் தாக்கம், ஆளுக்கு, ஆள் வேறுபடுவதுடன் பலர், சில கிழமைகளில் சிகிச்சை மூலம் குணமடைந்து விடுவார்கள்.

வைத்தியர்களின் கூற்றுப்படி மன அழுத்த நோய்க்குப் பல காரணிகள் இருந்தாலும், அவை ஒன்று சேர்ந்து இயங்கும் போது அதன் தாக்கம் உணரப்படுகின்றது. இதற்கான காரணிகளாவன. மரபு வழி , மன அழுத்தம் சம்பந்தமான குடும்ப வரலாறு, இறப்பு, வேலை இழப்பு, அழுத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை, வறுமை, ஒரு குழந்தையின் பிறப்பு, பிறப்பிற்கு முந்திய மன அழுத்தம் (Post Natal Depression), கடுமையான சுகவீனம் அல்லது காயப்படுதல்.

இங்கே முன்னர் குறிப்பிடப்பட்ட Christina Bartha ஒரு சமூக சேவகியாக இருப்பதுடன் Moods Anxiety Disorder Programme இன் நிர்வாக அதிகாரியாகவும் செயல்படுகின்றனார். அவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாகப் பொது மக்களுக்கு அறிவூட்டும் செயலை முன்னெடுத்துள்ளார். இவ்வாறான அறிவூட்டல், எமது தமிழ் மக்கள் மத்தியிலும் பல வழிகளில் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்காகக் கலந்துரையாடல்கள்; பத்திரிகை, வானொலி போன்ற வெகுஜன ஊடகங்களை நாம் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். எமது மக்கள் எப்பவுமே அறிவூட்டப்படும்_நடவடிக்கைகளில், எந்தவொரு அமைப்பாலும் ஈடுபடுத்தப்படுவதில்லை. இதனால் தான் நாம் எப்பவுமே மந்தைகளாகவும், தனிப் பெரும் தலைவர்கள் எங்கள் மேய்ப்பர்களாகவும் இருந்து வருகின்றார்கள். எனவே தான் நாங்கள் எவ்வளவு முன்னேறிய சமூகத்தின் மத்தியில் வாழ்ந்த போதிலும் கிணற்றுத்தவளைகளாக இருந்து கொண்டு குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுகின்றோம். இனிமேலாவது எம்மைப் பிணைத்துள்ள அறிவீனங்களை, சுயநலங்களை உதறி எறிந்து விட்டு சமூக ரீதியாகச் சிந்திக்க முனைவோம். இல்லாவிட்டால் கனடாவில் இருந்தாலும், ஒரு பல் கலாசாரச் சமூகத்தில் வாழந்தாலும் கூட நாளைக்கு எம்மை மற்றவர்கள் ஒரு பைத்தியக்காரச் சமூகமாகக் கணிப்பிடுவதற்கும், பொதுவாக உலக மக்களால் இன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் ஒரு சமூகமாகவும் தொடர்ந்திருக்க வேண்டியிருப்பதுடன் சமூகம் தொடர்ச்சியான அழிவை நோக்கி முன்னேறுவதை எம்மால் தடுக்கவே முடியாமல் போய்விடும்.

இனி இந்த நோயின் தாக்கம் பற்றிய கனடா, இலங்கை, அமெரிக்கா, சமயம் என்ற ரீதியில் சிறிது கவனம் செலுத்துவோம்.

முன்னர் குறிப்பிட்டதுபோல் The Canadian Mental Health Association கணிப்பின்படி பத்துப் பேருக்கு, ஒருவர் தமது வாழ்நாளில் தாக்கப்படுகின்றார். (The Toronto Star 29.8.1999) இது எல்லா வயதினரையும் பாதிக்கும் போதும், 24 வ்யதிற்கும் 44 வயதிற்கும் இடைப்பட்டவர்களையே மிக அதிகமாக அடிக்கடி பாதிக்கிறது. ஆனால், பரிதாபம், மூன்று பேருக்கு ஒருவர் மாத்திரமே வைத்திய சிகிச்சையை நாடுகின்றனர். U. S. National Institute Of Mental Healthஇன் இன்னுமொரு அறிக்கையின்படி, 19 மில்லியன்கள் அமெரிக்க மக்கள் (Adults - வயது வந்தவர்கள்) மன அழுத்த நோயால் பாதிக்கப்படுகின்றார்கள். இந்த நோய் குறிப்பிடும்படியாக வட அமெரிக்காவில் காணப்படுகின்றது. இலங்கை, உலகிலேயே தற்கொலையிலும் [illegible]து அருந்துவதிலும் முதலாம் இடத்தை வகிப்பதாகப் பல புள்ளி விபரங்களிற்கூடாக முன்னர் வெளிவந்துள்ளது. இது எமது சமுதாயத்தின் மத்தியில் உள்ள சீரழிவையும், மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையீனத்தையுமே வெளிப்படுத்துகின்றது. இதே போல் தமிழ் நாட்டிலும், தற்கொலையின் வீதம் மிகவும் அதிகமாக உள்ளதாக அறியப்படுகின்றது.

பொதுவாக, இலங்கையர் மத்தியிலும் குறிப்பாக, இலங்கைத் தமிழர் மத்தியிலும் இவ்வாறான ஒரு பரிதாபகரமான நிலை உருவாகியுள்ளதற்கு அவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்துகின்ற சிந்தனையின் [illegible]யலாத் தன்மையின் வெளிப்பாடே அடிப்படைக் காரணம் என்பதை இங்கு அழுத்திக் கூறவேண்டியுள்ளது. மேலும் தற்கொலைக் கலாசாரமும் ஒரு முக்கிய பங்கைச் செலுத்துகின்றது. இந்த வகையில் இந்து சமயத்திலும், தற்கொலை இன்றும் கூட ஒரு சிறந்த பண்பாக மதிக்கப்படுவதை உடன் கட்டை ஏறுதல் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். சில வருடங்களுக்கு முன்னர் இந்து மதவெறி, திட்டமிட்ட அமைப்பாக வளர்க்கப்பட்டு வரும் இந்தியாவில், ரூப் கன்வர் என்ற இளம் பெண் பலாத்காரமாகத் தனது கணவன் எரியும் சிதையில் உயிருடன் எரிக்கப்பட்டதும், அதற்கு எதிராக எவரும் சாட்சி சொல்ல முன்வராததுடன், இந்தப் பெண்ணின் பெயரில் கோவில் அமைத்ததையும் நாம் அறிந்த போது ஒரு முறை அதிர்ந்தே போனோம். நாம் திரும்பவும் புராதன, காட்டுமிராண்டி வாழ்க்கைக்கா திரும்புகின்றோம் என்றே ஐயுறத் தோன்றுகின்றது. இதேவேளை தற்கொலையை ஏனைய மதங்களான இஸ்லாம், கத்தோலிக்கம் போன்றவை மறுக்கின்றன. இதேவேளை பொதுவுடமைத் தத்துவம் தற்கொலையைக் கொள்கை ரீதியாக எதிர்ப்பதுடன், இதை முதலாளித்துவத்தின் இயலாத் தன்மையோடு தான் இணைத்துப் பார்க்கின்றது. புத்த சமயம் தற்கொலைக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிராதபோதும், மனித உடலை ஆன்மாவின் ஒரு தற்காலிகத் தளமாகப் பார்ப்பதால் அதுவும் கூடத் தற்கொலைக்கு ஓரளவு துணை போவதாகத் தான் கொள்ள வேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாகத் தேரவாத புத்த மதப் பிரிவின் நிலையைக் கைக் கொண்டுள்ள இலங்கையில் இதன் தாக்கம் மனம் கொள்ளத்தக்கது.

இங்கே கனடாவில், ஒரு தமிழ் மொழி ஒலிப்பரப்பில் தற்கொலையை ஒரு பட்டிமன்றமாக நடாத்திய அறிவிலித்தனமான செயலைக் கேட்ட போது ஆத்திரம் தான் வந்தது.

அதில் என்ன சுவாரஸ்யம் என்றால், மிகப் பெரிய இந்த விடயத்தைச் சமூகவியலாளர்கள், மனநல வைத்தியர்களைக் கொண்ட ஒரு கருத்தாடலாக நடாத்துவதற்குப் பதிலாக 24 மணி நேர ஒலிபரப்பில் சாதாரணமானவர்களின் வெறும் புலம்பலிற்கு இடமளித்தார்கள். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். அந்தப் பட்டிமன்றத் தலையங்கம் வருமாறு, ஒருவர் தானே தற்கொலைக்குத் தூண்டப்படுகின்றாரா இல்லை மற்றவர்கள் மூலம் தூண்டப்படுகின்றாரா ? முன்னர் ஒரு முறை சரிநிகரில் வெளிவந்த இன்று நடைபெறுகின்ற பட்டிமன்றங்கள் பற்றி இரத்தினச் சுருக்கமாக "இவை கோமாளித்தனமும், சிறிது விவேகமும் கலந்த ஒரு வகையான கதம்பக் குழப்பம்" என்ற கூற்றை மேற்படி நிகழ்ச்சி உறுதிப்படுத்துகின்றது.

# வானம் தெரிகிற கூரைக்குள் வதைபடும் வன்னி மக்கள்!

வன்னிப் பெருநிலப்பரப்பினுள் வாழும் மக்கள் போர் சங்கிலித் தொடர் போல தொடர்ந்து கொண்டே இருப்பதால் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து நெருக்கடியான சூழ்நிலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறார்கள் போஷாக்கான உணவு கிடைக்காததால் போசாக்கின்மையால் ஏற்படக்கூடிய நோய்கள் ஏற்பட பெரும்பாலும் வாய்ப்பிருப்பதாக வன்னி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பல இடப்பெயர்வுகளை மக்கள் சந்திப்பதால் அவர்களுடைய பாரம்பரிய தொழில்களான விவசாயம், கடற்தொழில் போன்றவற்றைச் செய்ய முடியாமல் போயுள்ளது. இதனால் வருமானம் இல்லாது சாப்பாட்டிற்கு நிவாரணத்தை நம்பி வாழ வேண்டியவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள். நிவாரணம் கூட யுத்த கோஷம் நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களுக்குக் கிடைக்கவில்லையெனத் தெரிய வருகிறது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் பசியுடன் படிக்க முடியாது தொடர்ச்சியாக பாடசாலை செல்லாமலும் முற்றாகப் பாடசாலை செல்லாமலும் படிப்பும் சீர்குலையும் நிலையிலுள்ளது. அது மட்டுமல்லாமல் மண்ணெண்ணை பெற்றுக் கொள்ள முடியாததினால் இரவில் மாணவர்கள் கற்கவே முடியாதுள்ளது. மண்ணெண்ணையின்மையால் ஆசிரியர்களும், புதிய கல்வித்திட்டத்தின்படி பாட ஆயத்தம் செய்ய முடியாமலும், உள்ளனர். வன்னியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் திரவப்பணங்கள் இல்லாததினால் ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களுக்கு சம்பளம் காசோலையாகவே கிடைக்கின்றது. இதனை பணமாக மாற்றி தங்களது தேவைகளை உடன்பூர்த்தி செய்து கொள்ள அவர்களால் முடியாமல் உள்ளது. 98ம் ஆண்டு ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாகக் கிடைத்த காசோலையினை மாற்றித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் உள்ளனராம். பொருளாதார மட்டுப்படுத்தல் - தடை காரணமாகப் பல அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடாகவு[illegible] விலையுயர்வாகவும் உள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஓகஸ்ட் 09ம் திகதி மாங்குளமூடான போக்குவரத்து ஆரம்பமாகியும் உணவு லொறிகள் அனுப்பிவைக்கப்பட்டும், கோதுமை மா ஒரு கிலோ நாற்பது ரூபாவிற்கு மேல்தான் விற்கப்படுகிறது. அது கூட தட்டுப் பாடகவே உள்ளது என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் குளங்கள் கிணறுகள் மூலமே மக்கள் தமது தேவைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்வார்கள். தற்போது ஆடிமழை பொழியாததால் குளங்கள் கிணறுகள் நீர் வற்றி குடிநீருக்குக் கூட நீண்ட தூரம் சென்று வர வேண்டியவர்களாக உள்ளனர். குடிநீருக்கே அலையும் நிலைக்கு இடம்பெயர்வுகளும் காரணம். வெற்றி நிச்சயம், யுத்த கோஷம் போன்ற நடவடிக்கைகளுள் சிக்கியுள்ள நிலப்பரப்புகளிற்குள் உள்ள கிணறுகள் பெரும்பாலும் ஆழம் குறைவான கிணறுகளைக் கொண்டவை. இப்படியான வளங்களை விட்டு இடம் பெயர்ந்ததனால் குடிநீருக்கும் அல்லல்பட வேண்டிய நிலை. வரட்சி காரணமாக மழை வேண்டித் தவமிருக்கிறார்கள் இம் மக்கள். ஆனால் துயரம் என்னவென்றால் மழை வந்தாலும் அவலம் தான் அவர்களும்கு. எழுபத்தியைந்து வீதமான குடிசைகள் வானம் தெரிய ஓட்டையாகவே உள்ளன. கிடுகு ஒன்றின் விலை 15/-. இவ்வளவு விலை கொடுத்து வசதி குறைந்த மக்களால் கிடுகு வேண்டி கூரைகளை வேய முடியாது. அத்தோடு இடம்பெயர்ந்து கூரைவிரிப்புகளுக்குக் கீழ் வாழும் மக்களும், நிலம் தாழ்வான இடங்களில் இருப்பிடங்களைக் கொண்டவர்களும், மழை காலங்களில் அதிகம் துன்பப்படப் போகின்றார்கள். போர் தொடருமானால் அனைத்து அனர்த்தங்களுக்குள்ளும் வன்னி மக்கள் அகப்பட்டு அவலப்படப் போகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அப்படியாயின் ஓரளவு ஆறுதலடைவர்களர் வன்னி மக்கள்.

# அம்பாறை முஸ்லிம்களின் எதிர்காலம் என்ன?

## அமைச்சர் அஷ்ரஃப்பிடம் சில கேள்விகள்!

சிங்களப் பேரினவாதச் சக்திகளின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் வெற்றிமிக்க அத்தியாய்மாகிய கல்லோயா பள்ளத்தாக்குத் திட்டத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் மூழ்கி பூரிப்ப[illegible]ந்திருக்கும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதிநித்[illegible]ாகிய அமைச்சர் அஷ்ரஃப்புக்கும், பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். முகைதீன் அவர்களுக்கும்!

இலங்கையின் சிறுபான்மை இனங்களாகிய தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக பூமியாகிய வட- கிழக்குப் பிரதேசம் காலத்துக்குக் காலம் சிங்கள ஆட்சியாளர்களினால் திட்டமிட்ட அடிப்படையில் சூறையாடப்பட்டு வந்திருக்கின்ற வரலாற்றை நீங்களும் நாமும் நன்கறிவோம்.

திருகோண்மலை மாவட்டத்தை சிங்களமயமாக்கிய கையோடு ம்ட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியைத் துண்டாடி அம்பாறை மாவட்டத்தை உருவாக்கினர்.

அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களை பெருவாரியாகக் கொண்டிருப்பதை சகிக்க முடியாத பேரினவாதிகள் இம் மாவட்டத்திலிருந்து முஸ்லிம்களை சிறுபான்மையாக்கும் கைங்கரியத்தை தமது முஸ்லிம் முகவர்களின் உதவியுடன் சிறப்பாக மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட தேசிய எழுச்சி பேரினவாதக் கட்சிகளின் ஏஜெ[illegible]டுகளை முற்றிலும் நிராகரித்து தமது அரசியல் விடுதலை மார்க்கமாக முஸ்லிம் காங்கிரசை அங்கீகரித்து திட்டமிட்ட குடியேற்றங்களையும், ஆக்கிரமிப்பையும் தடுத்து எம்மீதான ஒடுக்குமுறைகளை நிறுத்தி இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அடித்தளமாகிய அம்பாறை மண்ணை காப்பாற்றுவதற்காக 1989ம், 1994ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தமது அரசியல் ஆணையினை வழங்கி உங்களை பாராளுமன்றம் அனுப்பி வைத்தனர். நீங்களோ முன்னைய பேரினவாதச் சக்திகளின் முஸ்லிம் முகவர்களுக்கு சிறிதும் வித்தியாசமின்றி எமது நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும் முற்றிலும் மாறாக அப்பட்டமாகவே பேரினவர்திகளின் அம்பாறை மாவட்டம் மீதான ஆக்கிரமிப்புக்கு துணை நின்று வருகின்றீர்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

- ✕ இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டபோது குறும் தமிழ் தேசியவாதத்தினால் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அகதி முகாம்களில் அல்லல்பட திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் கொள்ளைகளினாலும், கொலைகளினாலும் உண்டான வடுக்கள் மாறாமல் தவிக்க அம்முஸ்லிம்களின் அபிலாஷைகளையும், தியாகங்களையும் புறக்கணித்து அதேநேரம் அம்பாறைத் தொகுதியை பேரினவாதிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் குறுகிய தென்கிழக்கு மாகாண அலகிற்கு உடன்பட்டீர்கள்.
- ✕ பொன்னன்வெளிப் பிரதேசத்தை பகல் கொள்ளையடித்து தீகவாபி புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனை, ஒலுவில் முஸ்லிம்களின் விவசாய நிலங்களுக்கு மாற்றீடாக பள்ள்க்காடு, பாற்கேணி பிரதேசங்களில் காணி பெற்றுத் தருவதாக கூறினீர்கள். ஆனால், அவை கிடைக்கவில்லையென்பதோடு எமது பூர்வீக நிலங்களை மேலும் சுரண்டி, தீகவாபி எல்லைகளை விஸ்தரித்ததை அபிவிருத்தி செய்து கொடுத்து பேரினவாத ஆக்கிரமிப்புக்கு துணை நின்றீர்கள்.
- ✕ அம்பாறை ஆலிம்சேனை முஸ்லிம்கள் பேரினவாதிகளினால் வெளியேறுமாறு அச்சுறுத்தப்பட்டபோது அறிக்கை விடுவதுடன் மட்டும் மௌனமாகிப் போனீர்கள். அம்மக்களின் நிரந்தரப் பாதுகாப்புக்கான எத்தகைய நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.
- ✕ அம்பாறை நகரில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கான காணி முஸ்லிம்களினால் சட்டவிரோதமாக பெறப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு சுற்று மதில் உடைக்கப்பட்டபோது நீங்கள் ஆட்சியாளர்களை புகழ்ந்து கொண்டிருந்தீர்கள்.
- ✕ இப்போது நீத்தை பிரதேச முஸ்லிம்களின் விவசாய நிலங்கள் பேரினவாதிகளிடம் பறிபோகும் அபாயம் தோன்றியுள்ளது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சமூக இருப்பு நாளுக்கு நாள் அச்சுறுத்தப்பட்டு இன்னொரு பாலஸ்தீனம் இங்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நீங்கள் அமைச்சர் பதவிக்குள்ளும், பாராளுமன்றக் கதிரைக்குள்ளும் நசுங்கிப் போய் எங்களதும், எங்கள் சந்ததிகளினதும் அரசியல் [illegible] காலத்தை குழிதோண்டிப் புதைக்கும் வரலாற்று [illegible]ரோகத்தை இழைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

இனிமேலாவது முஸ்லிம்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் அரசியல் வங்குரோத்துத்தனங்களை விடுத்து அம்பாறை மாவட்டம் பேரினவாதிகளிடம் பறிபோவதை தடுத்து நிறுத்த முன்வாருங்கள். வருவீர்களா?

**ஏ.எல்.எம். றிபாஸ்**

நன்றி - நூலகத்திட்டம்



## கோணகலை போன்ற சம்பவங்கள்:

# விடுதலை யுத்தத்தை ஆக்கிரமிப்பு யுத்தமாக மாற்றிவிடக்கூடியவை!

தமிழ் ஊடகவியலாளரின் சிந்தனைகள்

(ஈழப்போர் 03க்குப் பின்னர், கடந்த சில வாரங்களாக நடந்த சில சம்பவங்களிலிருந்து இதுகால வரை ஓய்ந்திருந்த 'பழிக்குப் பழி' என்னும் நோய்க் கூறு, இலங்கை இராணுவம் - புலிகளின் மத்தியில் மீண்டும் தலை தூக்கியிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

அண்மையில் அனுபவமிக்க தமிழ் ஊடகவியலாளர் (அவர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை) ஒருவரைச் சரிநிகர் சார்பில் சந்தித்த போது, அவர் இது பற்றித் தந்த கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன.

(ஆ-ர்)

**அண்மையில் முல்லைத்தீவு — புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் மக்கள் கூடியிருந்த போது விமானக் குண்டு வீச்சுகளால் 22 தமிழ் அகதிகள் கொல்லப்பட்டமையும். பலர் காயமடைந்தமையையும் தொடர்ந்து அம்பாறை எல்லைக் கிராமமான கோணகலவில் கொலை செய்யப்பட்ட 46 சிங்களப் பொது மக்கள் பற்றியும் தங்கள் கருத்தென்ன?**

தமிழ் பொது மக்கள் கூடும் பொது இடத்தில் விமானப் படை வேண்டுமென்றே குண்டு பொழிந்தது என்பதும், அதற்குப் பழிவாங்கும் முகமாகப் புலிகளே கோணகல கிராமவாசிகளைக் கொலை செய்தனர் என்பதும் உண்மையானால் பழிக்குப் பழிவாங்கும் உணர்வே இரு பகுதியினரையும் ஏவியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். முதலில் இப்பழி வாங்கும் உணர்வை முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் இராணுவத்தினரே என்றே சொல்ல வேண்டும்.

**எப்படி?**

ரணகோஷ 05 ல் புலிகளால் அவர்களுக்கு ஏற்பட்ட தோல்வியும், உயிரிழப்பும் மேற்படி புதுக்குடியிருப்புத் தாக்குதலுக்குத் தூபம் போட்டுள்ளது என்பதை அரசியல்வாதிகள் உட்படப் பலர் வெளிப்படையாகவே பேசியுள்ளனர்.

**அப்படியானால் புலிகள் செய்த பழிவாங்கல் சரி என்று சொல்வீர்களோ?**

இங்கே தான் புலிகள் பெரிய தவறு செய்கின்றனர் என்பதே எனது அபிப்பிராயம்.

**இதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுவீர்களா?**

இங்கே தான் அநியாயமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தும் இராணுவத்திற்கும், விடுதலைக்காகப் போராடும் போராளிகளுக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடுகிறது. இதை இன்னும் விளக்குவதானால், ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொள்ளும் இராணுவம் தர்ம, அதர்மங்களைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. நேர்மை, நியாயங்களுக்குக் கட்டுப்படப் போவதில்லை. அதன் நோக்கம் இன சங்காரமே: தனக்கும், தன்னினத்திற்கும் எதிரியாகக் கருதப்படும் இனத்தை அழித்தொழிப்பதே அதன் நோக்கம். அதனால் தான் சிங்கள இராணுவ வரலாற்றில் குமுதினிப் படகுக் கொலைகள், குருநகர்க் கொலை, கொக்கட்டிச்சோலைக் கொலைகள், மைலந்தனைப் படுகொலைகள், குமாரபுரம் படுகொலைகள், புத்திரங்கொண்டான் கொலைகள் என்று ஒரு பெரும் பட்டியலே நீள்கிறது. இப்படி ஒரு அராஜகப் பட்டியலைப் போராளிகளும் தக்க வைப்பார்களானால், அவர்களது போராட்டமும் விடுதலை என்ற பேரில் இன்னோர் ஆக்கிரமிப்பு யுத்தமாகவே மாறி விடும். இன்று விடுதலைக்காகப் போராடுவோர் பட்டியலில் காணப்படும் அனுராதபுரப் படுகொலைகள், காத்தான்குடி பள்ளிவாயல் கொலைகள், ஏறாவூர், அரந்தலாவ கொலைகள், யாழ்ப்பாண முஸ்லிம்களின் வெளியேற்றம் யாவும் கறை படிந்த பகுதிகளாகும். தமிழ் முஸ்லிம் மக்களின் நியாயமான இந்தப் போராட்டத்தை மிக வேகமாக முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தம் கால்களையே கட்டுப்போடுபவையாகவே இவை உள்ளன.

**இவ்வாறு இராணுவமும், புலிகளும் பரஸ்பரம் மாறி மாறிக் கொலைகள் புரிந்த செய்திகள் பற்றி நீங்கள் பத்திரிகைகளில், தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் படித்திருப்பீர்கள். பார்த்திருப்பீர்கள். ஆனால். இங்கே ஒரு வித்தியாசத்தைக் கண்டிருப்பீர்கள் இல்லையா?**

நீங்கள் கேட்பதன் உள்ளார்த்தம் எனக்கு விளங்குகிறது. அதாவது இரண்டொரு தமிழ்ப் பத்திரிகைகளைத் தவிர, ஏனைய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் யாவும் (தொலைக்காட்சி ஒளிபரப்புகள், வானொலி ஒலிபரப்புகள் உட்பட) கொட்டை எழுத்துக்களில் படங்களோடு வெளியிட்டிருந்தவை யாவும் கோணகல கிராமத்தில் புலிகளால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சடலங்களின் படங்களும், செய்திகளுமே. ஆனால், புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதலால் கை வேறு, கால் வேறாகப் போன உடல்கள் பற்றியோ தெறித்துப் பறந்த அவற்றின் சதைகள் பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சர் கோணகலைக்கு விரைந்து சென்றதும், ஜனாதிபதியின் அனுதாபச் செய்தியும், அவர்களுக்கான நஷ்டஈடு கொடுப்பனவு அறிவித்தல்கள் யாவும் வெகுஜன ஊடகங்களின் நடத்தையின் இன்னொரு வடிவமாகவே தெரிகின்றன, இல்லையா? வெகுஜன ஊடகங்கள் யாவுமே ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு நிலப் பாவாடை விரிப்பனவாக இருக்கும் போது, சிறுபான்மை இனத்தின் அழிவும், சாவும் என்பது இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு அற்ப எறும்பு நசிந்து போவதற்கு ஒப்பான இன்மை நிகழ்வு தான். இல்லையா?

**இதற்கு மாற்று வழி இல்லையா?**

ஏன் இல்லை? தாராளமாக உண்டு. இது பற்றி ஏற்கெனவே நான் பலரோடு கதைத்தும் உள்ளேன். நமது பிரச்சினைகளும், நமக்கு இழைக்கப்படும் அநீதிகளும் வெளிப்படுத்தப்பட வேண்டுமானால் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பத்திரிகைகள் வெளிவர வேண்டும். ஆனால் இங்கே தான் ஓர் முக்கிய கவனிப்புத் தேவை.

**என்ன அது?**

இந்தப் பத்திரிகைகள் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும், அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் வெளிக் கொணரும் அதேவேளை, சிங்கள இன மக்களின் நியாயமான பிரச்சினைகளையும், அச்சங்களையும் தீர்ப்பனவாகவும், அவர்களையும் கவர்ந்து இழுக்கும், நடுநிலைமையைப் பேணுபவையாகவும் இருக்க வேண்டும். இத்தகைய ஒரு பத்திரிகைக்குச் சான்றாக முன்னர் யாழ்ப்பாணத்தில் கந்தசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் காமினி நவரத்தின, ஏ.ஜே. கனகரத்தின ஆகியோரை [illegible] வந்த Saturday Reviewவைக் குறிப்பிடலாம். ஆனால், இது யாழ்ப்பாணத்திற்குள் முடங்கிய ஒன்றாக இருந்தது. தற்போது தேவைப்படுவது கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை.

**இது சாத்தியமாகக் கூடிய விஷயமா?**

சற்றடே றிவியூ பத்திரிகையைக் கந்தசாமி என்பவரின் தனிமுயற்சி தான் வெளிக் கொணரச் செய்தது. இன்று உலகெங்கும் பரந்துள்ள நம்மவர்கள் மனம் வைத்தால் எத்தனையோ அற்புதமான விஷயங்களைச் செய்து முடிக்கலாம். இந்தச் சிந்தனை நம்மிடையே வேர்விடுமானால், தமிழ் ஊடகவியலாளர் இவை பற்றிச் சிந்திப்பார்களானால் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும்.

---

# முஸ்லிம்களுக்கு எதிராக சூல்கொள்ளும் புதிய இனத்துவேஷம்

ஏற்கெனவே இலங்கையில் இருந்து வரும் தமிழர்களுக்கு எதிரான துவேஷத்தோடு, தற்போது முஸ்லிம்களுக்கு எதிரான துவேஷமும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது பரவலாகத் தெரியவந்துள்ளது.

இது இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு துரதிருஷ்டமே. காரணம், ஏற்கெனவே இனத்துவ அடிப்படையில் நடைபெற்றுவரும் யுத்தத்தின் குரூரத்திலிருந்து மீளமுடியாது நாடு தவித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் முஸ்லிம் மக்களையும் ஓரம் கட்டும் விதத்தில் தற்போது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அவர்களுக்கு எதிரான துவேஷப் போக்கு நாட்டிற்கு எந்தளவில் உதவப் போகின்றது என்பதே முக்கியமான கேள்வியாகும்.

இனத்துவேஷத்தைக் கிளப்பிவிடும் போக்குகள் ஒரு நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிடும் என்பதால் அதை வருமுன்னர் காப்பது அரசின் பொறுப்பாகும்.

ஐம்பதுகளில், இனங்களுக்கெதிரான துவேஷத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சியாக (மகாஜன எக்சத் பெரமுன - எம். ஈ. பி.) மக்கள் ஐக்கிய முன்னணி இருந்து வந்தது. ஆனால், அது 1994ல் இடம்பெற்ற தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூடக் கைப்பற்ற முடியாது தோல்வியுற்றதிலிருந்து நாம் ஒன்றை அறியலாம். மக்கள் இத்தகைய துவேஷ அரசியலிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு வந்துள்ளனர் என்பதே. ஆயினும், வரலாறு என்பது தன்னை ஒவ்வொரு விதத்தில், ஒவ்வொரு தளங்களில் புதுப்பித்துத் திருப்பத் தருவதாக இருப்பதால், இத்தகைய் இனத்துவேஷ அரசியலுக்கு ஒரேயடியாகச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாக நாம் எண்ணக் கூடாது.



இப்பொழுது மக்கள் ஐக்கிய முன்னணி (எம். ஈ. பி.) விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்குப் புதிய நாம ரூபங்களோடு அமைப்புக்கள் தோன்றியுள்ளன. அவற்றில் முக்கியமாகப் 'பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கமும்', 'சிங்கள வீரவிதான இயக்கமும்' முன்னணி வகிக்கின்றன. ஆனால், இவை தமிழர்களுக்கு எதிரான இயக்கங்களாகவே இருந்து வந்துள்ளன என்பது உண்மையே ஆயினும், முஸ்லிம்களுக்கு எதிரான ஆழமான ஒரு துவேஷமும் இவைகள் மத்தியில் அடியோடி இருந்து வந்துள்ளன என்பதும் மறுக்க முடியாது.

பல காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக ஆடு, மாடுகளைக் கொல்வதைச் (பசுவதை) சாட்டாக வைத்துப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வந்தன. பத்திரிகைகளிலும் பிற ஊடகங்களிலும் இவை வெளிப்பட்டன. இவை மேலோட்டமாக வார்த்தைகள் மூலமே வெளிவந்த போராட்டமாகவே இருந்து வந்தன. இது ஈற்றில் இனக் கலவரமாக, யுத்தமாக வெடிக்காது என்று சொல்வதற்கில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறஸ்முஸ் (ERASMUS) என்ற ஐரோப்பிய ஞானி ஒருவர், கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்து பிரிவினரும் தமக்குள் நடத்தும் வார்த்தைகளூடான போராட்டம் 'அடிபிடி'யாக மாறும் என்று கூறினார். அவ்வாறே நீண்ட காலத்துக்கு ஐரோப்பிய நாடுகளில் இரத்த ஆறு பெருக்கெடுத்தது. இது இலங்கையிலும் தலைதூக்கலாம். அதற்கான ஒத்திகையே எனத் தற்போது பத்திரிகைகளில் காணப்படும் 'வாக்குவாதங்கள்' எதிர்வு கூறுகின்றன. 1815ல் இடம்பெற்றவற்றை நாம் மறக்க முடியாது. 1970 - 1977 வரை நீடித்த அரசாங்கத்தின்போது புத்தளம் பள்ளிவாசலில் நிகழ்ந்த இரத்தக் களரியை நாம் நினைவு கூர வேண்டும்.

இன்று முஸ்லிம்களுக்கு எதிராக, கால்நடைகளைக் கொல்வதையும், பள்ளிவாயல்களில் ஒலிபெருக்கி பூட்டித் தொழுகைக்கு அழைப்பு விடுவதையும் சாட்டாக வைத்துத் தொடங்கப்பட்ட துவேஷ விவாதங்கள், தற்போது கங்கொடவில சோமதேரரின் "கொல்லாமை" பற்றிய புத்த போதனைகளை அண்டி சூல்கொள்ளத் தொடங்கியுள்ளன. (இது ஏற்கெனவே சரிநிகரில் வெளிவந்துள்ளது) இவற்றுக்கு எதிராக லூசியன் கருணாநாயக்க, போன்ற புத்திஜீவிகள் குரல் எழுப்பியுள்ளனர்.

இருந்த போதும் அண்மையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட சோம தேரருக்கும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப்புக்கும் இடையில் நடந்த விவாதம், நாம் குறிப்பிடும் முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பி விடப்படும் புதிய இனத்துவேஷ அலைகளின் தெறிப்புகளாகவே தெரிகின்றன. அஷ்ரஃப் அவர்கள், தேரர் முன்வைத்த அந்தக் குற்றச்சாட்டுகள் தவறானவை என நிரூபித்ததோடு, தேரரும் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார் என்பதை ஒப்புக் கொள்ளவும் வைத்தார் என்பன வேறு விடயம்.

முக்க மான விடயம் என்னவெனில், இப்போ முஸ்லிம்களுக்கு எதிரான துவேஷமும் மையங் கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதே.

தேரரின் கொல்லாமை பற்றிய போதனைகள், அதாவது 'வாழ்வதற்குக் கொலை செய்வதும், பாவ காரியமான படுகொலை' என்பன போன்றவைகள் மீண்டும் இனப் படுகொலைகளைத் தூண்டுவதற்கான விதை தூவலாக மாறக் கூடாது.

இனத்துவேஷம் பேசுவோர் ஒன்றையே திருப்பித் திருப்பிக் கூறுவர். அதாவது தொல்லை தருபவர்களாக மாறும் சிறுபான்மையினரை அடக்குவதற்கு ஒரே வழி, அவர்களுக்கு 'அடிக்குமேல்' அடிகொடுக்க வேண்டும் என்பதே. இதையே இந்தப்போதனைகள் மறைமுகமாகக் கூறுகின்றன.

இன்று இனத்துவேஷம் பேசுவோர் மிகக் குறைவாகவே உள்ள போதும், அவர்களால் பரவலான அழிவைத் தரும் தீச்சுவாலைக்குத் தீனி போடும் ஒரு தீக்குச்சியைக் கிழிக்க முடியாது என்றில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# கோணவில - புதுக்குடியிருப்பு சம்பவங்களை அடுத்து வவுனியாவில் புதிய நிலைமைகள்!

செப்.15 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதிகளில் இலங்கையின் விமானப்படை நடத்திய குண்டுத் தாக்குதல்களில் 22 அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறி, கோரமான முறையில் கொல்லப்பட்டார்கள். 41 பேர் காயமடைந்தார்கள்.

இந்தச் சம்பவம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின்



அலுலவகத்திற்கு அண்மித்த ஓரிடத்தில் இடம்பெற்றது. சம்பவ இடத்தை அக்குழுவின் அதிகாரிகளும் புதுக்குடியிருப்பில் வைத்திய தொண்டர் சேவைகளில் ஈடுபட்டுள்ள எம்.எஸ்.எவ் என்ற பிரஞ்சு நாட்டு நிறுவத்தின் அதிகாரிகளும் சென்று பார்வையிட்டுள்ளார்கள். திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அவசரமாகத் தேவைப்பட்ட மருந்துகள் மற்றும் காயங்களுக்குத் .தேவையான பொருட்களுமின்றி வைத்தியர்கள் தடுமாறிய வேலையில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் அவசர மருந்துகளையும் தேவைகளையும் வழங்கி உதவி செய்துள்ளார்கள்.

இந்தக் குண்டு வீச்சுச் சம்பவமானது, முழுமையானதொரு சிவில் இலக்கு மீதே நடத்தப்பட்டுள்ளது என்பதை, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பேச்சாளராகிய ஹர்ஷா குணவர்தன முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் உள்ள அவர்களுடைய அதிகாரிகள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். அதுமட்டுமல்லாமல், அரச தரப்பின் இத்தகைய கண்மூடித்தனமான நடவடிக்கைகள் குறித்து அவர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் கவலையையும் அக்கறையையும் வெளிப்படுத்தியிருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழு என்பது உலகளாவிய ஒரு பொதுச் சேவை நிறுவனம். உலகில் போர் நடக்கின்ற பிரதேசசங்களில் பிராந்தியங்களில் தமது உயிர்களைப் பணயம் வைத்து மனிதாபிமான சேவைகளில் ஈடுபட்டு வருகின்றது. இலங்கையிலும், அரச படைகள் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுள்ள போரில் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவதற்காக அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று பல வருடங்களாகவே செயற்பட்டு வருகின்றது. அவர்களின் சேவைகள், பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல், போரில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகளுக்கும் கிடைத்து வருகின்றன.

இந்த நிலையில், சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் ஏதோ கூறத்தகாத ஒன்றைக் கூறிவிட்டது போல, புதுக்குடியிருப்பு பகுதியில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் உறுதியாக மறுத்துள்ளார். இராணுவப் பேச்சாளர் என்றாலே, இராணுவம் தவறிழைத்திருந்தாலும், அதனை மறுத்து ஊடகங்களுக்கு தகவல் வழங்க வேண்டும் என்பது தெய்வ வாக்கைப் போல பின்பற்றப்பட்டு வருவதையே காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த நிலையில் அவரிடமிருந்து அத்தகைய ஒரு பதிலை, அல்லது மறுப்பையே எதிர்பார்க்க வேண்டும். அவர் தமது தொழில் தகைமைக்கு அப்பால் உண்மை பேசுவார் என்று எதிர்பார்ப்பது தவறு.

புதுக்குடியிருப்பு சம்பவம் நடைபெற்று 3 நாட்கள் கழிந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோணவில குடியேற்றப்பகுதியில் 50க்கும் மேற்பட்ட சிங்கள பொதுமக்கள் வெட்டிக்கொல்லப்பட்டார்கள். இந்தக் கொலைகளை விடுதலைப் புலிகளே செய்தார்கள் என்று வரிந்து கட்டிக்கொண்டு அரசாங்கமும், இராணுவ பேச்சாளரும் மட்டுமல்லாமல், இந்த நாட்டில் உள்ள சிங்கள, ஆங்கில ஊடகங்கள் அனைத்தும் ஒரு முகமாகக் குற்றம் சாட்டின. இது உண்மையாக இருந்தாலும் கூட, புதுக்குடியிருப்பில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைக் கண்டுகொள்ளாத இந்தச் செய்தி ஊடகங்களுக்கு சிங்கள மக்கள் கொல்லப்பட்டது மட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிந்திருந்தது எப்படி என்ற கேள்வி கழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

அத்துடன் நில்லாமல், பிரபல சர்வதேச செய்தி நிறுவனமான ராயிட்டர் செய்தி நிறுவனம் புதுக்குடியிருப்பு சம்பவத்தை விடுதலைப் புலிகள் உரிமைகோரியிருந்தார்கள் எனத் தெரிவித்து, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவும் இது குறித்துத் தெரிவித்துள்ளது என்பதையும் குறிப்பிட்டதன் பின்னர். இந்த சம்பவத்தை சுதந்திரமான முறையில் ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை என்றும் சுட்டிக் காட்டியிருந்தது. சர்வதேச அளவில் புகழும் அங்கீகாரமும் பெற்றுள்ள அந்த செய்தி நிறுவனத்தினர், செய்தியாளர்கள் எவரும் போக முடியாது என்று அரசாங்கத்தின் சொந்த அரசியல் நலன்களுக்காகத் தடை விதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் இருந்து சுதந்திரமான முறையில் ஒரு தகவலை எப்படி, யார் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெளிவுபடுத்துமேயானால், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது, அந்த வகையில் அதனை ஊர்ஜிதம் செய்துகொள்ள வசதியாக இருக்கும்.

சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற மனிதாபிமான சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகிய சர்வதேச செஞ்சிலுவைக் குழு அதிகாரிகள் வெளிப்படையாகத் தெரிவித்திருந்த விபரங்களை உண்மையானவை என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பதுபோல, செய்தி வெளியிட்டிருந்த அந்த நிறுவனம் இப்படி வெளிப்படையாக அரசியல்வாதிகளைப் போல, தரக்குறைவாக நடந்து கொண்டிருப்பது நியாயமானதாகத் தெரியவில்லை.

இச்சம்பவத்தை வெளிப்படுத்திய பி.பி.சி. நிறுவனத்தின் செய்தியாளர் சுசான பிரைஸ்க்கு தொலைபேசி மூலமான விடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. அத்தொலைபேசி அழைப்பில் நாம் நிழல்போல் உன்னைத் தொடர்ந்து உனது நடவடிக்கைகளை அவதானிப்போம். உடனடியாக நாட்டை விட்டு வெளியேறு என எச்சரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதேபோன்ற சம்பவம் ஒன்றை வெளிப்படுத்தியதற்காக இதே செய்தி நிறுவனத்தின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இன்னொரு செய்திளார் முன்னர் ஒரு முறை அச்சுத்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு, கோணவில ஆகிய இடங்களில் இடம்பெற்ற கொலைகளை சர்வதேச மன்னிப்புச்சபை, ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆகியன வன்மையாகக் கண்டித்திருந்தன. இந்தக் கண்டனத்தை, வெளிநாட்டமைச்சர் கதிர்காமரினால் சீரணித்துக் கொள்ள முடியவில்லை. அரசாங்கத்தையோ, இராணுவத்தையோ யாரும் கண்டிப்பதை அவ்ரால் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் ஐ.நாவை எதிர்த்து கருத்துத் தெரிவித்துள்ளார்.



இது ஒரு புறமிருக்க, கொழும்பில் குண்டு வெடித்தாலும், வடக்கு கிழக்கில் அல்லது தெற்கில் படையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பாரிய தாக்குதல்கள் இடம்பெற்றாலும், வவுனியாவில் அதன் பிரதிபலிப்புகளைக் காண முடியும். இந்த யதார்த்த நிலைமைக்கு ரணகோஷ 5 மீது விழுந்த மரண அடியின் எதிர் விளைவாக புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விமானத்தாக்குதல்களும், அதற்கு எதிர்விளைவு என்று கூறப்படுகின்ற அம்பாறை பகுதி தாக்குதல் என்பனவும் உதாரணமாக அமைந்து, வவுனியாவில் புதிய நிலைமைகளை உருவாக்கியுள்ளன.

அம்பாறை பகுதியில் சிங்களக் கிராமவாசிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையைப் போல, வவுனியா பூந்தோட்டம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான அகதி முகாம் மக்கள் மீது தாக்குதல் நடத்த இனந்தெரியாக கோஷ்டியினர் முயற்சித்ததாகவும், அவைகள் பலிக்காமல் போயின என்றும் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் மீதான தாக்குதல்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்து தெளிவான தகவல்கள் வெளியாகாத போதிலும், எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவியது. அகதி முகாம்கள் மீது சிங்கள கோஷ்டியினரே தாக்குதல் நடத்துவற்கு முற்பட்டார்கள் என்று அந்த முகாம்களைச் சேர்ந்த மக்கள் முறையிட்டிருந்தார்கள். இதனை ஆதாரமாகக் காட்டிய எல்லைப்புற சிங்களக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகள் தம்மீது தாக்குதல் நடத்த வரப்போகின்றார்கள் என்றும். சில இடங்களில் அவர்களின் நடமாட்டங்கள் காணப்பட்டன என்றும் இராணுவத்தினருக்குத் தெரிவித்து தமது உயிர்கள் ஆபத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்து தமக்குப் பாதுகாப்பு தரவேண்டும் என்றும் இராணுவத்தினரைக் கேட்டிருந்தார்கள்.

உடனடியகச் செயலில் இறங்கிய இராணுவத்தினர், எல்லைப்புறக் கிராமங்களில் தமது கவச வாகனங்களில் சென்று சிங்கள பொதுமக்கள் தமிழ் முஸ்லிம் மக்களுடன் ஒற்றுமையாகவும். அமைதியாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். வீணான பிரச்சினைகளில் அவர்களுடன் ஈடுபட வேண்டாம் என்றும் அற[illegible]ரை கூறினார்கள். அதேவேகத்தோடு எல்லைப்புற சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கென, மின்னல் வேகத்தில் ஊர்காவல் ப[illegible]க்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர். ஒருவார காலப் பயிற்சி வழங்கப்பட்டு, 3000 ரூபா சம்பளத்தில் அவர்கள் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் புலிகளின் தாக்குதல்களில் இருந்து சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக கிராமவாசிகளுக்குத் துப்பாக்கிகள் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதகாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளையில் தமிழ் கிராமங்களில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள் அழைக்கப்பட்டு, பிரஜைகள் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மக்களின் பாதுகாப்புப் பொறுப்பை இராணுவமும் பொலிசாருமே ஏற்றுள்ளதற்கு அறிகுறியாக இவர்களுக்கு துப்பாக்கிகள் வழங்குவது பற்றி எவரும் வாய் திறக்கவில்லை. ஏன் இந்தப் பராபட்சம் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

அம்பாறை அசம்பாவிதத்தையும், அதன் எதிரொலியாக வவுனியா சிங்களக் கிராமவாசிகள் தமக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையையும் பயன்படுத்தி, படைகளுக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகளை படையதிகாரிகள் நாசூக்காக ஆரம்பித்து விட்டார்கள் என்ற ஒரு கருத்தும் பொது மக்கள் மத்தியில் நிலவவே செய்கின்றது.

எப்படியிருந்த போதிலும், ரணகோஷ 5 மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஆக்ரோஷத் தாக்குதலானது பல தொடர் வினைகளை ஏற்படுத்தி விட்டுள்ளது என்பது நிச்சயம். இதன் விளைவாக வவுனியா பகுதிகளின் பாதுகாப்பு - குறிப்பாக, தமிழ் மக்களின் பாதுகாப்பு பத்து வருடங்களுக்கு முந்திய நிலைமைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

உள் முரண்பாடுகளில் இருந்து புளொட் இன்னும் மீளாமல் இருக்கின்றது. டெலோ இயக்கம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியோடு, பொதுமக்களிடமிருந்து எவ்வளவுக்கு முடியுமோ அந்த அளவிற்குத் தேங்காய், தேங்காய் எண்ணெய் போன்ற பொருட்களின் மீதான வரிகளின் மூலம் வருமானத்தை ஈட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினர் ஏதோ பொழுது போனால்போதும் என்ற வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் வவுனியா பொது மக்கள் ஓரளவில் அனாதைகளாகவே காணப்படுகின்றார்கள் என்றால் அது தவறாகாது.

– துரை

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழும் தன்னியக்க கணனி மொழிபெயர்ப்பும்

### அறிமுகம்

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் வெளிப்படுத்தப்பட்ட உரைப் பகுதியொன்றை (வரி வடிவ அல்லது ஒலி வடிவ) அதனுடைய கருத்து, தொனி போன்ற அடிப்படைத் தன்மைகள் எதுவும் மாறுபடாமல் வேறோரு மொழிக்கு மாற்றும் செயற்பாடாகும். அதாவது மூலவுரையை கேட்பதால் அல்லது வாசிப்பதால் ஒருவருக்கு ஏற்படும் அனுபவம் அதன் மொழிபெயர்ப்பை நுகர்பவருக்கும் ஏற்பட வேண்டும். ஆனாலும், ஒரு மிகச் சிறந்த அனுபவமுள்ள மொழிபெயர்ப்பாளரினால் கூட எல்லா உரைப் பகுதிக்கும் சிறந்த மொழிபெயர்ப்பை வழங்க முடியுமென எதிர்பார்க்க முடியாது.

ஒரு மொழிபெயர்ப்பாளனுக்குக் கீழ்வரும் விடயங்களில் அடிப்படை அறிவு இருப்பது அவசியமெனக் கருதப்படுகிறது.

- ✔ மூலவுரையுள்ள மொழியிலும், மொழிபெயர்க்கப்பட வேண்டிய மொழியிலும் தேவையானளவு மொழியியல் ஞானம் (Linguistic Knowledge).
- ✔ மேற்படி இரு மொழிகளினதும் வசன அமைப்புக்கள் போன்ற இலக்கண சம்பந்தமான விடயங்களில் ஒப்புமை ஞானம் (Comparative Grammer Knowledge).
- ✔ மூலவுரை குறிப்பிடும் பொருள் தொடர்பான போதிய விஷய ஞானம்.
- ✔ அடிப்படை உலக ஞானம் மற்றும் இரு மொழிகளையும் பேசும் மக்கள் சமூகத்தினரின் சமூக கலாசார விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் போன்றனவற்றில் பரிச்சயம்.

*1.*

மூலவுரையை மொழிபெயர்க்க அதனுடைய கருத்தை முழுமையாக விளங்கிக் கொள்ள முனைவது ஆரம்பப் படியாகும். இதற்கு மூலமொழியிலுள்ள சொற்களின் கருத்து, சொற்தொடரமைப்பு, வசன அமைப்பு விதிகள் போன்ற விடயங்களில் போதிய அறிவிருக்க வேண்டும். இதேபோல், மூலவுரையிலிருந்து புரிந்து கொண்ட கருத்தை வேறு மொழியில் மொழிபெயர்க்க அம் மொழியிலும் பொருத்தமான சொற்கள், இலக்கண விதிகள் பற்றிய பரிச்சயம் முக்கியமானதாகும்.

*2.*

ஒரு மொழியிலிருந்து மற்றைய மொழிக்கு ஒரு வசனத்தை மாற்றும் பொழுது இரு மொழிகளிலுமுள்ள வாக்கிய அமைப்புக்களை தொடர்புபடுத்தக் கூடிய அறிவு அத்தியாவசியமானதாகும். உதாரணமாக ஆங்கிலத்தில் எழுவாய் வினை செயற்படுபொருள் (Ravi called Ramu) என்று பொதுவாக அமையும் வாக்கியம் தமிழில் எழுவாய் செயற்படுபொருள் வினை என மாறி வரும் (ரவி ராமுவை கூப்பிட்டான்) அத்தோடு ஆங்கிலத்தில் சொற்களின் ஒழுங்கு முறையால் வெளிப்படுத்தப்படும் இலக்கணத் தொழிற்பாடு, தமிழில் வேற்றுமை உருபுகளால் நிறைவேற்றப்படுகிறது.

(உ+ம் : ராமு + ஐ ⇨ ராமுவை)

*3.*

மூலவுரையை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு அதில் சொல்லப்பட்ட விடயம் தொடர்பான அடிப்படை அறிவு அத்தியாவசியமானது. உதாரணமாகக் கணனி பற்றிய கட்டுரையை மொழிபெயர்ப்பதற்குக் கணனி பற்றிய அடிப்படையை அறிந்திருத்தல் மொழிபெயர்ப்பின் தரத்தைச் செழுமையாக்கும்.

*4.*

அடிப்படை உலக ஞானம், பொது அறிவு என்பவற்றுடன் இரு மொழிகளையும் பேசும் சமூகத்தவரின் சமூகக் கலாசார விழுமியங்களையும், பழக்க வழக்கங்கள் பற்றிய பரிச்சயமிருப்பது சிறப்பான மொழிபெயர்ப்பைப் பெறுவதற்குத் தேவையானதாகும்.

உதாரணமாக "ரவி கண்ணாடியைத் தரையில் எறிந்தான். அது உடைந்து நொருங்கியது" என்பதை மொழிபெயர்க்கச் சில மொழிகளில் அது அவை போன்ற சுட்டும் பெயர்கள் இல்லை. எனவே உடைந்தது எது கண்ணாடியா?, தரையா? என்பது மொழிபெயர்ப்புக்கு அவசியமாகின்றது. எது உடைந்தது என்பதைப் பொது அறிவினால் புரிந்து கொள்ளலாம். (தரையும், கண்ணாடியினாலானதாக இல்லாவிட்டால்) இதே போல் "அவனுக்குக் கால் கட்டு போட்டாயிற்று" என்பதை மொழிபெயர்க்கத் தமிழ்த் திருமண சம்பிரதாயங்களைப் பற்றிய பரிச்சயமிருக்க வேண்டும்.

ஒரு மொழியின் அடிப்படை மொழியியல் அறிவு (Linguistics Knowledge) என்பது கீழ்வரும் வகைகளாக ஆராயப்படலாம்.

- ✔ Phonology:- ஒரு மொழியிலுள்ள ஒலிக் குறியீடுகளும் அவற்றின் சேர்க்கைகளும்.
- ✔ Morphology:- ஒரு மொழியிலுள்ள சொல் உருவாக்க விதிகள்.

விளையாடு — விளையாடு —— விளையாடினான்
விளையாடு — விளையாட்டு
விளையாடு — விளையாட்டுப்பிள்ளை

- ✔ Syntax:- இலக்கண விதிகள் - வசனங்களின் கருத்தைப் பற்றியே கணக்கிலெடுக்காத வசன அமைப்பு விதிகள். உதாரணமாக "நான் பந்தை அடித்தேன்" என்ற வசனம் "எழுவாய், செயற்படுபொருள், வினை" என்று அமைகிறது என்பதைத் தவிர யார் எதை, என்ன செய்தார் என்பது நோக்கப்படுவதில்லை.
- ✔ Semantics:- வசனம் வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைக் கணக்கிலெடுக்காது அதன் கருத்தோடு மட்டும் தொடர்புள்ள விடயங்கள்.
- ✔ Pragmatics:- ஒரு வசனம் வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பம். அதன் நோக்கம் என்பவற்றையும் கணக்கிலெடுத்து அதனுடைய கருத்தை ஆராய்தல். உதாரணமாக வசனங்களின் உண்மையான கருத்து, அது உரைக்கப்படும் சந்தர்ப்பத்தில் பெருமளவு தங்கியுள்ளது. (உ+ம் : அவன் காய் வெட்டுகிறான் - அவன் ஏமாற்றிக் கொண்டிருக்கிறான்) அத்தோடு உரைப் பகுதியொன்றில் ஒரு வசனத்தின் கருத்து அதற்கு முதலுள்ள வசனங்களின் கருத்தில் தங்கியிருக்கலாம்.

### கணனி மூலம் மொழிபெயர்ப்பு

நாம் இதுவரை மொழிபெயர்ப்புத் தொடர்பான பொதுவான விடயங்கள் பற்றி நோக்கினோம். இனி இந்த மொழிபெயர்ப்புச் செயற்பாட்டைக் கணனி மூலம் எப்படி நிறைவேற்றலாம் என்பதை ஆராய்வோம்.

மனிதர்களின் பரிணாம வளர்ச்சிப் படிகளில் இயல்பாகவே வளர்ந்து வந்த மொழிகளைக் கணனி இயந்திரமொன்று புரிந்து கொள்ளத்தக்கதாகக் கட்டளைத் தொகுப்பு உருவாக்கல் சாத்தியமா? என்று கேள்வி எழலாம். அதிசயிக்கத்தக்கதாக இந்தக் கேள்விக்கு விடை சாத்தியம் என்பதே. மனித மொழியானது ஆரம்பத்தில் எல்லையற்ற சிக்கல் நிறைந்ததொன்றாகத் தோன்றினாலும் அது சொற்கள், சந்தங்கள், சொற் சேர்க்கை விதிகள், சொற்தொடர் அமைப்புகள், வசன அமைப்புக் கொலங்கள் மற்றும் இலக்கண விதிகளால் வரையறுக்கப்பட்ட ஒன்றாகவும், அதற்கே உரிய ஒலி வடிவ, வரி வடிவக் குறியீடுகள் கொண்டதாகவும் காணப்படுவதால், மொழியைக் கணனிகளால் இலகுவில் பதனிடப்படுத்தப் படக் கூடியவாறு மென்பொருள் தொகுப்புக்கள் உருவாக்கப்படலாம். மொழியோடு தொடர்புபட்ட கணனிப் பயன்பாடுகளுள் மொழிபெயர்ப்பும் முக்கியமானதொன்றாகும்.

உலகத்தில் இன்று கணனி மென்பொருள் தொகுப்புக்கள் பல இயற்கை மனித மொழியொன்றை வேறு மொழியொன்றுக்குத் தானாகவே மொழிபெயர்க்கும் பணியில் நாளாந்தம் ஈடுபடுத்தப்படுகின்றன. (உதாரணமாக METRO எனும் கணனி மென்பொருள் தொகுப்புக் கனடா நாட்டின் காலநிலை அறிக்கைகளை மொழிபெயர்க்கப் பயன்படுகின்றது.) ஆனாலும், தற்போது பாவனையிலுள்ள கணனி மொழிபெயர்ப்புத் தொகுப்புக்கள் மனித மொழிபெயர்ப்பாளர்களையும் விடச் செம்மையான மொழிபெயர்ப்பினைத் தரத்தக்க நிலையில் இல்லையெனலாம். இதற்குக் காரணம் கணனி போன்ற இயந்திரத்தில் சொற்களையும், அவற்றின் கருத்துக்களையும், மாற்று மொழிச் சொற்களையும் அகராதியில் சேர்க்கலாம். அத்தோடு ஒரு மொழியிலுள்ள சொற்தொடர், வசன அமைப்பு, இலக்கண விதிகளையும் கணனியில் உணரவைக்க முடியும்.



















ஆனாலும், சொற்களுக்கான உண்மையான கருத்தையோ, உலக அறிவையோ, மனித சமூகத்தினரின் சமூகக் கலாசாரப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையோ கணனியினுள் பிரதிநிதித்துவப்படுத்துவது இன்றும் ஆராய்ச்சிக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. ஆனாலும் இந்த வகையான கணனி மொழிபெயர்ப்புத் தொகுப்புக்கள் மொழி பெயர்ப்பாளர்களுடைய வேலையை மிக எளிதாக்கும் பணியைச் செய்கின்றன. சில வேளைகளில் இந்தத் தொகுப்புக்களால் பெறப்படும் மொழிபெயர்ப்பே ஒருவரது தேவைக்கு போதுமானதாக அமையக் கூடும். (உதாரணமாக, ஒரு மூலவுரையில் சொல்லப்பட்ட விடயம் தொடர்பான மேலோட்டமான தகவல்களைப் பெறுவதற்கு.)







இன்று உலகில் காணப்படும் மொழிபெயர்ப்பு மென்பொருள் தொகுப்புக்களை அவற்றின் அடிப்படையான செயற்பாட்டைக் கருத்திற் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

- Direct (Transformer)
- Transfer
- Inter - lingua

முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட (Direct) நேரடி மொழிபெயர்ப்புத் தொகுப்புக்களில் ஒரு மொழியிலுள்ள வசனத்திலிருந்து சொற்கள் பிரித்தெடுக்கப்பட்டு அதன் சொற்றொடர்கள் அடையாளம் காணப்படுகின்றது. இதன் மூலம் அந்த வசனம் அமைந்துள்ள இலக்கண விதி அறியப்படுகின்றது. அதேநேரத்தில் வசனத்தின் காலம், எழுவாயின் எண் போன்ற விடயங்கள் கணிக்கப்படுகின்றன. பின்னர் சொற்களுக்கான மொழிபெயர்ப்புப் பதங்கள் அகராதியிலிருந்து பெறப்பட்டு இரு மொழிகளுக்கிடையிலான ஒப்புமை விதிகளின் மூலம் பதங்களை ஒழுங்குபடுத்தி இணைத்து மொழிபெயர்ப்பு வசனம் பெறப்படுகின்றது.

உதாரணமாக, "The dog chased a cat" என்னும் வசனத்தைத் தமிழுக்கு மொழிபெயர்க்கும் பொழுது பின்வரும் சொற்றொடர்கள் அடையாளம் காணப்படும்.

### அகராதி




அடி (பெயர், dog, நாய்)
அடி (பெயர், cat, பூனை)
அடி (வினை, chase, துரத்து)
அடி (சுட்டு, the, -)
அடி (சுட்டு, a, ஒரு)

துரத்து (ஒன்றன் பால், இறந்த காலம்) → துரத்து + அது + துரத்தியது பூனை + ஐ→ பூனையை.

தமிழ் மொழி பெயர்ப்பு → நாய் ஒரு பூனையைத் துரத்தியது.

இங்கு மூல வசனத் தின் கருத்து பகுத்தறி யப் படாமலே மொழி பெயர்க்க முயற்சிக்கப் படுகிறது.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட Transfer



மொழி பெயர்ப்புத் தொகுப்புக்களில் மூல வசனத்தின் கருத்து ஓரளவு பகுத்தறியப் பட்டு அந்த மொழிக் கான ஒரு இடை வடி வத்தில் உருவமைக்கப்படும். இதிலிருந்து மொழிபெயர்க்கப்பட வேண்டிய மொழியின் இடை வ்டிவத்திற்கு அந்த இரு மொழிகளுக்கிடையேயான இலக்கண ஒப்புமை விதிகளின் மூலம் மாற்றப்பட்டு, அதிலிருந்து பின்னர் தேவையான மொழிபெயர்ப்புப் பெறப்படுகின்றது.

மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட புதிய Inter-lingua தொகுப்புகளில் இருமொழி இலக்கண ஒப்புமை விதிகள் தேவைப்படுவதில்லை. இங்கு ஒரு கருத்தைக் கூறுவதே ஒரு வசனத்தின் நோக்கம் என

⇨18

நன்றி - நூலகத்திட்டம்



# சிறந்த புனைகதைப் படைப்பாளிகள் உருவாகாததற்கு படைப்பாற்றல் சார்ந்த காரணங்கள் இல்லை!

**-காலச்சுவடு நேர்காணலில் சேரன்**

***தம்முடைய வரலாற்று நெருக்கடியைத் தற்கால ஈழத்துப் படைப்பாளிகள் சரியாக எதிர்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகின்றீர்களா?***

இது பற்றிய எனது அவதானத்தைச் சொல்வது காலத்துக்கு முந்தியதாகி விடும் என அஞ்சுகிறேன். வரலாறு தான் இதனைத் தீர்மானிக்க வேண்டும். எனினும், இலக்கியத்தில் இன்றைய வாழ்வின் இருப்பும், எதிர்ப்பின் துடிப்பும் பல தளங்களிலும் பேசப்படுகின்றன. போராட்டத்துக்குள் ஒரு போராட்டமாக போராளி இயக்கங்களின் அசியலும் நடவடிக்கைகளும் குறைந்த அளவிலாயினும் விமர்சிக்கப்படுகின்றன. வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது அதற்கெதிராக இலக்கியத்தூடாக வந்த எதிர்ப்பும் பதிவும் குறிப்பிடத்தக்கதாகவும், தாக்கமானதாகவும் இருந்தது. அந்த வகையில் அரசியல் தளத்திலும் அரசியல் கருத்து நிலையிலும் இல்லாத ஒரு பாய்ச்சல் இலக்கியத்தில் நிகழ்ந்திருக்கிறது. எனினும், இது ஒரு அம்சம் மட்டும் தான். இந்தப் பாய்ச்சல் கவிதைகளிலும் சிறுகதைகளிலும் நிகழ்ந்திருக்கிறது.

இந்தப் பாய்ச்சல் இன்னும் ஆழம் பெற வேண்டும் என்கிற தேவையும் உள்ளது. அரசியல் தளத்திலும், பகிரங்கமாகவும் பேசப்படாமல் இருக்கிற அல்லது பேசத் தயங்குகிற பல விஷயங்களைப் பற்றி இந்த இலக்கியம் பேசுகிறது. எனினும், அற்புதமான, உயிரோட்டமான மாற்றுப் பதிவுகளாகவே இவற்றுள் பல நின்று விடுகின்றன. இவற்றுக்கு அப்பால் செல்ல வேண்டிய ஒரு தேவை இருக்கிறது: அதற்குத் தேவையானது காலம் என்று தான் தோன்றுகிறது.

***ஈழத்துக் கவிதைகள் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை புனைகதை இலக்கியம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. சிறந்த புனைகதைப் படைப்பாளிகள் தோன்றாததன் காரணம் என்ன?***

சிறுகதைகளைப் பொறுத்தவரை சிறந்தோர் பலர் உருவாகியுள்ளனர் என்று தான் கூறுவேன். எனினும் நாவலைப் பொறுத்தவரை பெரும் முக்கியத்தும் வாய்ந்தவை இனித் தான் எழ வேண்டும் என்று நினைக் கிறேன். இதற்கு வரலாற்று ரீதியான மற்றும் படைப்பாற்றல் சார்ந்த காரணங்கள் இருக்கின்றன் என நான் கருதவில்லை. சூழலின் நெருக்கடியும் அவலமும் தொடர்ச்சியான ஒரு முகப்படுத்தப்பட்ட உழைப்பையும் கவனத்தையும் தடுத்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சாவகாசமாக எழுதக் கூடிய மனோநிலை பலருக்கு இல்லை என்று தோன்றுகிறது. உதாரணத்துக்கு என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் எழுதியிருக்கக் கூடியவற்றுள் அல்லது நான் எழுத வேண்டியிருப்பதில் ஒரு முப்பது சதவீதத்தையாவது நான் எழுதியிருக்கிறேனா என்பது பெரிய சந்தேகமாக இருக்கிறது. எழுதுவதற்குத் தேவையான உள்ளக அமைதியைக் கண்டு பிடிப்பதே இருப்பின் சிக்கல்களுக்கு அப்பால் மிகவும் சிரமமாக உள்ளது. படைப்பிலக்கியத்திற்கு அப்பால் இத்தகைய காரணிகள் ஒருவரின் உள்வெளியைக் கூறுபோட்டுக் கொண்டு செயல்படுகிறபோது பெரிய இலக்கியப் படைப்புகளை உடனடியாக எதிர்பார்க்க முடியும் என்று தோன்றவில்லை.

அதிகமாக எழுதிக் கொண்டிருக்கிற செ. யோகநாதன், செங்கை ஆழியன் போன்றவர்களது படைப்புகளில் சாரமில்லை என்பது மட்டுமில்லாமல், அவர்களுடைய எழுத்துக்களில் பல எப்படிக் காலனியாதிக்கத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும் நிழலாகவும் அடிவருடிகளாகவும், ஆங்கில நாவல்கள் பல தொழிற்பட்ட பாங்கைத் தமிழ்ச் சூழலில் நினைவுக்குக் கொண்டு வருகின்றன. தமிழ்த் தேசியவாதத்தின் மேலாதிக்க / இனவாத முகம் ஒன்றை வலியுறுத்துகிற இவ்வெழுத்துக்களைப் பற்றித் தனியாகப் பேச வேண்டும்.

***ஈழப்படைப்பாளிகளில், குறிப்பாகக் கவிதைகளில் தர்க்கம் புரிதலை விட உணர்வின் அலைகளே மேலோங்கி இருக்கின்றன. பாலஸ்தீனக் கவிதைகள் அல்லது ஆபிரிக்கக் கவிதைகளில் காணப்படும் வரலாற்று உணர்வும், தத்துவார்த்த ஆழமும் ஈழக் கவிதைகளில் காணப்படுவதில்லை. இது ஈழக் கவிஞர்களின் சித்தாந்த வறுமையைக் காட்டுகிறதா?***

உங்களுடைய கேள்வி கவிதைகளின் பன்முகச் சாத்தியப்பாட்டையும் கவனத்துக்கு எடுக்க வேண்டும். அறிவு, தர்க்கம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதும், உணர்வு/ உணர்ச்சி போன்ற அம்சங்களை முக்கியத்துவம் குறைந்ததாகவும் பார்க்கிற இருதுருவ நிலைப்பாடு பொருத்தமானதாக எனக்குப் படவில்லை. இந்த இருதுருவ நிலைப்பாட்டின் எழுச்சி, தொடர்ச்சி, எல்லைப்பாடுகள் என்பனவற்றை இலக்கிய விமர்சனத்துறைக்குள் மட்டுமன்றி சமூக விஞ்ஞானங்கள், மெய்யியல், அறிவியல் ஆகிய துறைகளிலும் பார்க்க முடியும். உணர்வு, அனுபவங்களுக்கு மேலாக அறிவையும், புறவயத் தன்மையையும் வைப்பது, வாய் மொழி மரபை விட உயர்ந்ததாக எழுத்து மரபைக் கருதுவது என்னும் அம்சங்களையும் நாம் இதனோடு இணைந்ததாகப் பார்க்க முடியும். 'எழுதிய எழுத்து' இல்லை என்பதற்காகவே 'சொல்லிய சொல்'லாக இருந்து வந்த செழிப்பான பல இலக்கியங்களும், கலைகளும் ஐரோப்பிய மையவாதச் சிந்தனை முறைமையால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அறிவொளிக் காலத்தினது உபயங்களுள் ஒன்றாகவும் இதனை நாம் பார்க்க வேண்டும். கறுப்பு மக்கள், மூன்றாம் உலகம் என அழைக்கப்பட்ட நாடுகளின் இலக்கியங்கள், கலைகள் என்பனவெல்லாம் மெருகற்றதாகவும், உணர்ச்சியினடியாக வந்தவையாகவும் உணர்வுகளின் ஆதிக்கம் பெற்றவையாகவும் இனங் காணப்பட்டு ஒதுக்கப்பட்டன. Professionalism என்ற கருதுகோளே இத்தகைய கருத்தியல் அம்சங்களோடு பிணைந்து நிற்கிறது.

இன்னொரு முக்கியமான தளத்தில் பெண்ணியச் சிந்தனை முறைமைகள் இந்த இருதுருவ நிலைப்பாட்டைத் தீவிரமாக விமர்சனத்துக்குள்ளாக்குகிறது. பெண்ணியச் சிந்தனைகளும் அச் சிந்தனைகள் தொடர்ச்சியும் இலக்கிய விமர்சனம் மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்குள் இழுத்து வந்து நிறுத்தி விட்டிருக்கிற ஒரு ஆய்வு முறைமை, அனுபவத்தையும், அகத்தின் முக்கியத்துவத்தையும் ஆய்வு முறைமைகளில் உணர்ச்சி/ தன் நிலை என்பனவற்றின் இன்றியமையாமையையும் வலியுறுத்துகிறது. இந்தத் தளத்திலேயே கோபம், காமம் போன்ற உணர்ச்சிகள் இலக்கியத்தில் பதிவு செய்யப்படுவதும் புதியதொரு தளத்தில் கவனம் பெறுகின்றன.

கவிதைக்கு ஊடாக உணர்வு, உணர்ச்சி, கொண்டாட்டம், குதூகலம், களிப்பு, திளைப்பு, சகிப்பு, வெறுப்பு, விசாரம், உசாவல், உலாவல், அறிவு, மெய்யியல் போன்ற பல அம்சங்கள் பல மாதிரியும் வெளிப்பட முடியும். ஒரே கவியிடம் கூட வேறு வேறு காலப்பகுதிகளில் வேறுபட்ட முறைகளில் இவை வெளிப்படலாம். அல்லது சில காலகட்டங்களில் சில அம்சங்கள் மட்டுமே வெளிப்படலாம். இந்த வெளிப்பாடு எப்படி இருக்கும் என்பதை நாம் திட்டமிட முடியாது. தனித்தனி ஆளுமைகளும் சூழலோடு அத்தகைய ஆளுமைகள் கொண்டுள்ள உறவின் நெருக்கம், தீவிரம் போன்ற பல அம்சங்கள் அவற்றைத் தீர்மானிக்கின்றன.

ஈழத்திலும் புலமை சார்ந்த கவிதைப் போக்கு ஒன்றை முருகையனின் கவிதைகளுக்கூடாக சிவத்தம்பி இனங் காண்பது உண்டு. அறிவும் தர்க்கப்பாடும் மேலோங்கப் பெற்ற கவிதைகள் இருக்கலாம் எனினும், அவை தான் உயர்ந்த கவிதைகள் என்று சொல்வது சிக்கலானதாகும். இதுபோலவே தான் கவிதையின் ஆத்மார்த்தத் தளத்தை முன்னுரிமையாக உயர்த்துகிற மு.த., மு.பொ. ஆகியோரது வாதங்களும் சிக்கலானவை. "வசனத்தின் வலிமையைக் கவிதை பெற்று விட வேண்டும்" என்று க.நா.சு. புதுக்கவிதை தொடர்பாக எழுதியதும் அறிவு/ தர்க்கம் என்பவற்றக்கு முன்னுரிமை வழங்கி உணர்வைப் பின் தள்ளுகிற ஒரு செயல் தான். இந்த அறிவு/ உணர்வு துருவநிலை பற்றி மரணத்துள் வாழ்வோம் தொகுதிக்கு எழுதிய முன்னுரையிலும் (1985) விரிவாகப் பேசியிருக்கிறேன்.

பலஸ்தீனக் கவிதைகளிலும், ஆபிரிக்கக் கவிதைகளிலும் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு வரலாற்றுணர்வும், ஆழமும் ஈழக் கவிதைகளின் சில போக்குகளில் நீங்கள் காண முடியும் என்று தான் கருதுகிறேன். பலஸ்தீன, ஆபிரிக்கக் கவிதைகளை நவீன ஈழக் கவிதைகளோடு ஒப்பிடுவதற்கு முன்பாக, அடிப்படையிலான ஒரு வரலாற்றுத் தரவையும் நான் கணக்கிலெடுக்க வேண்டும்.

பலஸ்தீனியர்களுக்கு ஒரு ஐம்பது வருட கால எதிர்ப்புக் கவிதைப் பாரம்பரியம் உள்ளது. ஆபிரிக்கக் கவிதைகளுக்கும், கறுப்பு அமெரிக்கக் கவிதைகளுக்கும் எதிர்ப்பு, போராட்டம், இருப்பு, அடையாளம், பண்பாட்டுச் சிக்கல்கள் போன்ற பல தளங்களில் அடிமை வாழ்வின் பின்னணியில் நூற்றாண்டுகளான அனுபவம் இருக்கிறது. கூடவே பன்முகப்பாங்கும் உள்ளது. ஆபிரிக்கா ஒன்று அல்லவே! ஏராளமான ஆபிரிக்காக்கள் அல்லவா உள்ளன. அந்த வகையில் ஈழக் கவிதைகளை ஒரு கட்டிறுக்கமான முறையில் இவற்றுடன் ஒப்பிட முடியாது.

சமூக நீதிக்கான போராட்டங்களோடு முக்கியமாகவும் முனைப்பாகவும் இலக்கியம் ஊடாடி வருகிறது என்ற அம்சத்தில் பலஸ்தீன, ஈழ, ஆபிரிக்கக் கவிதைகளுக்கு முக்கியமான பொதுமைப்பாடு உண்டு என்று சொல்லலாம்.



சேரன்

இந்தப் பொதுமைப்பாட்டின் இன்னொரு முக்கியமான அம்சம்தான் சமூக இருப்பு/ அடையாளம் தொடர்பான இலக்கியப் பதிவுகளுமாகும். கறுப்பியல் (Magnitude) போன்ற இயக்கங்களும் இந்தச் சூழலிலேயே எழுகின்றன. கூடவே புலம்பெயர்தல், பண்பாட்டுச் சிக்கல்கள், இருப்பழிதல் போன்றவையும் இப்போக்கின் பக்க விளைவுகளாக உள்ளன.

பலஸ்தீனக் கவிதைகள் தொடர்பாக (Edward Said) முன்வைக்கிற கருத்துக்களையும் இந்த வகையில் நான் உதாரணமாகத் தரலாம். பலஸ்தீனக் கவிதைகள் பற்றி Hanan Ashrafi (அரஃபாத்தின் அமைச்சரவையில் முக்கியமான உறுப்பினராக இருந்து இப்போது முரண்பாடுற்றுள்ளவர்: பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கெடுத்தவர்: This side of Peace என்ற நூலின் ஆசிரியர்) அவர்களுடைய ஆய்வை நெறிப்படுத்தியவர் Said தான். Ashrafi கூறுகிற ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. போராட்டச் சூழலும், எதிர்ப்பும் மட்டுமே நல்ல கவிதைகளை உருவாக்கி விடுவதில்லை. பெரும்பாலான பலஸ்தீனக் கவிதைகள் சாரமற்றுத் தான் இருக்கின்றன.

புதிய அனுபவங்கள் என்ற முறையில் புதிய பார்வை வீச்சுகளுக்கு அவை வழிவகுக்கக் கூடும். எனினும் தொடர்ந்தும் ஒரே வகையான வெளிப்பாடுகள் வருகிற போது தேக்கம் ஏற்படத் தான் செய்யும். இதை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

80களின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நவீன ஈழத்துக் கவிதையை விமர்சனத்துக்குட்படுத்துகிற போது பல முக்கியமான அம்சங்கள் தெளிவாகலாம். ஒரு சிறு உதாரணத்தை மட்டும் தரலாம். ஒடுக்குமுறையின் அவலம், பயங்கரம் என்பன ஆரம்பத்தில் ஜெயபாலன், சிவசேகரம், நுஃமான், வில்வரத்தினம் ஆகியோரிடம் வெளிப்பாடு பெற்றுள்ள முறைமையையும், சிவரமணி, ஊர்வசி போன்ற "சொல்லாத சேதிகள்" கவிகளிடம் வெளிப்பட்ட முறைமையையும், பிற்பாடு சோலைக்கிளி அதை வெளிப்படுத்துகிற முறைமையையும் இப்போது அஸ்வகோஷ், ஆகர்ஷயா, நட்சத்திரன் செவ்விந்தியன், ஆழியாள், தேவஅபிரா, றஷ்மி, ஆத்மா, போன்றோர் வெளிப்படுத்துகிற முறைமைக்கும் பல தளங்களிலும் பல அம்சங்களிலும் வேறுபாடுகள் உள்ளன. இவை பற்றிய சீரிய விமர்சனங்கள் உங்களுடைய பல கேள்விகளுக்கு விடை தர முடியும் என்று நான் கருதுகிறேன்.

பலஸ்தீன எழுத்தாளர்களான மஃமூட் தர்விஷ், ஃபத்வாது கான், ஸமீம் அல் காஸிம், கஸான் காஃபானி போன்றோரை எடுத்துக் கொண்டால் நிச்சயமாகவே அவர்களின் தரத்துக்கும் தளத்துக்கும் இணையான படைப்பாளிகள் ஈழத்தில் இருக்கிறார்கள் என்று தான் கூறுவேன்.

**முந்தைய தலைமுறையில் ஈழத்திலிருந்து கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.நுஃமான் போன்ற பல சிறந்த விமர்சகர்கள் தோன்றியிருக்கின்றனர். தற்போது அத்தகைய விமர்சகர்கள் யாரும் தோன்றுவதற்கான அறிகுறியே இல்லையே.**

விமர்சனம் பெருமளவுக்குப் படைப்பாளிகளின் துறையாகவும், மாறிவிட்டமையும் இதற்கு ஒரு காரணம் என்று நினைக்கின்றேன். படைப்பாளிகள் விமர்சனத்தில் ஈடுபடுகிறபோது அது துறை சார்ந்த வரன் முறையான விமர்சனமாகப் படுவதில்லையோ என்ற கேள்வியும் எனக்குள் எழுகிறது.

கைலாசபதி, சிவத்தம்பி இருவரும் பலம்மிக்க ஆளுமைகளாக மேலோங்கியதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று இலக்கிய விமர்சனத்தை சமூகவியல், பண்பாட்டியல் போன்ற துறைகளுடன் ஆக்கபூர்வமாக இணைத்தமை ஆகும். படைப்பு என்பதை படைப்பின் அரசியல், சமூக, வரலாற்றுச் சூழலோடும் சேர்த்து எடைபோட வேண்டிய அவை மதிப்பிட வேண்டிய ஒரு அணுகுமுறையை அவர்கள் கொண்டுவருகிறார்கள். இது முக்கியமானதுதான். கூடவே ஏற்கெனவே வழக்காக இருந்த உரையாசிரியப் பாரம்பரியத்தையும் அவர்கள் தகர்த்து விடுகிறார்கள். எனினும், தனித்தனியான படைப்பாளுமைகள் பற்றிய ஆழமான விமர்சனங்கள் எம்மிடம் முக்கியமானதாக இருக்கவில்லை இலக்கியப் போக்குகளையும் இலக்கியக் குணம்சாங்களையும் இனங்கண்டு அலசுகிற ஒரு பரந்த விமர்சன முறையை அவர்கள் கடைப்பிடித்தார்கள். படைப்பாளிகள், இலக்கியங்கள் அனைத்தையும் இத்தகைய போக்குகளை இனங்காட்டும் வெறும் சுட்டிகளாகவே பயன்பட்டன/ பயன்பட்டனர்.

தனித்தனிப் படைப்பாளிகளைப் பற்றிய விமர்சனங்கள் இடையிடையே இருந்தாலும் ஒரு வரன்முறையான, முழுமையான விமர்சனம் முன்வைக்கப்படவில்லை என்றே கருதுகிறேன். உதாரணத்துக்கு மஹாகவி அல்லது நீலாவணனையே எடுத்துக்கொள்ளுங்கள். தமிழ்க் கவிதையின் நவீன மாற்றங்களுக்கு இவர்கள் முன்னோடிகள் என்பது மட்டுமல்ல, ஈழத்திலக்கியத்தின் கலைத்துறைகளில் முக்கியமானவர்கள் அவர்கள். அவர்கள் பற்றிய எத்தகைய ஆழமான, விரிவான, விமர்சனங்களும் எங்கள் மத்தியில் இல்லை. மஹாகவி பற்றி ஓரளவுக்காவது விரிவாக எழுதப்பட்ட விமர்சனங்களும் (நுஃமான், சண்முகம் சிவலிங்கம்) அவருடைய நூல்களின் முன்னுரையாகவோ அல்லது பின்னிணைப்பாகவோதான் வந்துள்ளன. பல்லைக்கழகபட்டங்களில் செய்யப்பட்ட மாணவர்களது ஆய்வேடுகள் பல இருக்கக்கூடும். எனினும், எவையும் நூலுருப்பெறவில்லை.

கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரது அணுகுமுறைகளில் இருந்த இடைவெளிகளையும், பலவீனங்களையும் நிவிர்த்தி செய்தலோடு விமர்சனத்தை இன்னொரு தளத்துக்கு உயர்த்தியவர் நுஃமான் என்பது உண்மை.

பெண்ணியம், பெண்ணியத்திற்கூடாக வெளிப்பட்ட பார்வை வீச்சுக்கள் மற்றும் அவை துலங்கவைத்த புதிய வெளிகளை அறிமுகப்படுத்தியவர் சித்திரலேகா. எண்பதுகளில் பலமாக முனைப்புப்பெற்ற இத்தகைய கவிதைகளுக்கும் அவற்றோடான விமர்சன உரையாடலையும்/ உறவையும் அவர் தொடர்ந்தும் பேணி வருகிறார். எனினும் கருத்தியல், கோட்பாடு, சமூக, வரலாறு, சமூகவியல் எனும் அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகிற அறவுக்கு இலக்கிய ஆளுமைகள் பற்றிய விமர்சன விரிவு என்கிற அம்சத்தை அவரும் பெருமளவுக்கும் பேணுவதில்லை என்பதே என்னுடைய கருத்து.

ஈழத்துப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளிலும் இத்தகையதொரு பலவீனம் இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. விமர்சனத்துக்கும் படைப்புக்கும் இடையே ஒரு தொடர்ச்சியான உரையாடல் இருப்பது இலக்கிய வளத்துக்கும் விமர்சன வீச்சுக்கும் நலம் தரும்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# பலஃடு நடத்தைகள்

-ஞானவிந்தன்

அந்தக் கப்பல் ஆடி அசைந்து போய்க் கொண்டிருக்கிறது. கப்பலின் ரெண்டாவது தளத்தில் நிண்டு கடலைப் பார்க்கிறேன். நீலக் கடல் எங்கும் பரந்திருக்கிற நீலம். எங்கும் நீலம். எதிலும் நீலம். நீலம் என்பது நிறம் மட்டுமல்ல. அது தூய்மை: ஞானம். தியானம் செய்யற ரைம்ல நெத்திப் பொட்டில உண்டாகி முள்ளந்தண்டுக் கூடாகப் போய் குண்டலினி சக்தியைத் தூண்டி பேரின்பத்தை உணரச் செய்யற அந்தச் சுடர் கூட நீலந்தான்.
நீலக் கடல் தாய்மையின் வடிவம்.
ஏனென்றால் எங்களைச் சுமந்து எங்கள் பிள்ளைகளுக்கு உணவூட்டுவதால். இந்தக் கடல், இதே கடல் தான் எனது தாய், தந்தையால் என்ர ரெண்டு வயதில அறிமுகம் செய்யப்பட்ட கடல்.
கடல் மேலே கப்பல்.
கப்பல் மேலே நான்.
கப்பல் அலைந்து போற மாதிரி என்ர மனமும் அலையத் தொடங்குது.

என்ர பட்டப்படிப்பை நிறைவு செய்ய, குரங்குகளில் நான் ஒரு ஆய்வை செய்ய வேணும். அந்தக் குரங்குகள் இப்ப நான் போகப் போற இடத்தில தான் மிகவும் கூட இருக்கிறதாம். எப்படி அந்த ஊரை கப்பல விட்டு இறங்கி கண்டு பிடிக்கப் போறேனோ என்ட பயம் எனக்கில்ல. நான் சின்ன வயதில குடும்பமாக இருந்த நகரப் பகுதியைச் சார்ந்த கிராமப் புறம் தான் அந்த ஊர் என்பதால எப்படியோ கண்டு பிடிச்சிடலாம் எண்டு மனதில ஒரு தன்னம்பிக்கை இருக்குது.
கப்பல் ஆடி அசைந்து போய்க் கொண்டிருக்குது. நிமிர்ந்து என்ர தெற்குப்புறம் நோக்கிப் பார்க்கிறன். கடல் நடுவே சற்றுத் தொலைவில அமைந்திருக்கிற தொழிற்சாலைகள் தெரியுது.
அவை புகை கக்கி சூழலையும் மாசாக்கிறதப் பார்க்கிறன். இப்ப அந்த ஏழு மாடித் தொழிற்சாலைக்கு பக்கதில கப்பல் போகுது. அங்கே நெறைய மீனெல்லாம் செத்துக் கிடக்குது. கடற்படையினரால் அரைமணிக்கொரு தரம் நீருக்கடியில செய்யிற கிரனேட் சார்ஜினால் சாக்கொல்லப்பட்டவை தானாம் அந்த மீனெல்லாம். கொல்லப்பட்டவை தங்கட முகாம்களுக்கு அள்ளுப்பட்டுப் போக, மீதப்பட்டவையெல்லாம் செத்து மிதக்குது. கப்பல் இப்ப அடிக்கடி உயிர்களைக் காவெடுக்கும் அந்த மலைப் பக்கமாக போகுது. கப்பல் இப்ப ஆடத் தொடங்குது. அந்த மலைப் பகுதி கழியுமட்டும் இந்தப் பிரயாணிகளுக்கு கடவுள் மேல எவ்வளவு பக்தி. கப்பல் இப்ப இறங்கு துறையை அடைஞ்சுட்டுது போல. பாதுகாப்பு சோதனைகள் முடிஞ்சவுடன் என்ர பெயர், முகவரி போன்ற விபரங்களையெல்லாம் பொலிசில் பதிஞ்சிட்டு, இறங்குதுறையை விட்டு வெளிய வாறன். பஸ் ஒண்டு அந்தக் குரங்குகள் இருக்கிற ஊர்ப்பக்கம் தாண்டி போகத் தயாரான நிலையில் நிக்குது.
அதில ஏறுறன். இப்ப பஸ் என்ன சுமந்து போய்க் கொண்டிருக்குது.
ஒரு பதினஞ்சு வருசங்களுக்குள்ள எவ்வளவு மாற்றங்கள்.
வீதி மருங்கில இருந்த காடுகள் அழிக்கப்பட்டிருக்குது.
வீடுகள் நிறைய இடங்களில தரைமட்டமாக்கப்பட்டிருக்குது.

நான் இறங்கவேண்டிய நாற்சந்தியில் இறங்குறன். சந்திக்கு மேற்குப் பக்கமா ரெண்டு மைல் போனா நான் சின்ன வயதில இருந்த அந்த பச்சை மாடிவீடு வரும் என மனதில பழைய நினைவுகள் ஓடுது. ஆனா நான் என்ர குரங்குகள் இருக்கிற ஊருக்கு சந்திக்கு கிழக்குப் பக்கமா நாலு மைல் நடந்து போக வேணும்.

நடக்கிறன். வீதி எவ்வளவோ மாறியிருக்குது. பள்ளமும் படுகுழியுமாய். வீதி ஓரத்திலிருந்த கண்டல் காடுகள் கண்டபடி அழிக்கப்பட்டிருக்குது.



வீதியோட சேர்ந்தாப் போல ஒரு ஓடையும் வீதிக்கு போட்டியாய் ஓடிக் கொண்டிருக்குது.
இங்க வீதியின்ர ரெண்டு ஓரத்தில இருக்கிற வீடெல்லாம் ஓட்டையும் உடைசலுமாய் காணப்படுது.
நிறைய வீடுகள் தரைமட்டமாக்கப் பட்டும் இருக்குது. குண்டுகள் சன்னங்களின்ரை வேலை யாக்கும்
இதெல்லாம் என நினைச்சுக் கொள்ளுறன். கூரையில்லாத வீடுகளில் ஜன்னல், கதவு நிலைகள் பிடுங்கப்பட்டு இருக்குது.

டக்கென நிறைய சப்பாத்து சத்தங்கள் எனக்கு கேட்கத் தொடங்குது. சீருடை அணிஞ்ச ஆக்கள் வந்து கொண்டிருக்காங்க.
ஏதோ தாக்குதல், ஒண்ட நடத்தி முடிச்சிட்டு வாறாங்கள் போல் தான் தென்படுது?
அதில அவங்களுக்கு வெற்றியோ?
தோல்வியோ?
எத்தனை பேர் செத்தாங்களோ?
தெரியாது.
அவங்க என்ன நோக்கி வர வர எனக்கு பயம் வரப் பாக்குது.
ஒரு வேளை அவங்க வாற எதிர்ப்பக்கம் நான் போறேனோ? அல்லது நான் போற எதிர்ப்பக்கமா அவங்க வாறாங்களோ தெரியாது?
இதில என்ன பயம் வேண்டிக் கிடக்குது. நான் என்ன பயங்கரவாதி மாதிரியா இருக்கிறன்.
அப்ப வீதிய திரும்பிப் பார்க்கிறன்.
வீதியில் ஒருத்தரும் என்னத் தவிர இல்ல. ஒரு சீருடைக் காரன் எனக்கிட்ட வந்து அவன்ர மொழியில விசாரிச்சி சந்தேகம் தீர்க்கிறான். இந்த சீருடைக்காரனிடம் கொள்ளையா ஆண்மையும், ஆணவமும் இருக்குது. முகத்திலே அகங்காரம் நெரம்பி வழியுது.
ஒரு வேளை இவன்ர வீடு ஆளுயரமேயில்லாத ஒத்த அறை குடிலோ என்னவோ? இவனுக்கு கலியாணம் கட்டாத ரெண்டு அக்காக்களும், தங்கைகளும் வயல்ல வேல செய்யிற ரெண்டு தம்பிமாரும் பத்தாம் வகுப்பை மூணு தடவை படிக்கிற ரெண்டு தம்பிமாரும் இருக்கலாம்.
இல்லாட்டி ரெண்டு தம்பிமாரும் வேறெ எங்கோ சீருடைக்காரனா வேலையும் செய்யலாம்.

இவைகள நெனச்சிக் கொண்டு அந்தப் பாலத்தை தாண்டுறன். ஒரு பதினைந்து வருடங்களுக்கு முன் ஒரு மாலைப் பொழுதில நானும் என்ர சொந்தக்காரப் பெண்ணும் ஆளுக்கொரு சைக்கிளில் இந்தப் பாலம் வரைக்கும் வந்து திரும்பியிருக்கம். அந்தப் பாலத்திற்கும் இந்தப் பாலத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்குது.

இங்க நிறைய தூண்கள் உடைஞ்சி காணப்படுகுது.

பாலத்த தாண்டி வந்து கொண்டிருக்கன். அந்த உச்சிவெய்யிலுக்கு வீதியில ரெண்டு சைற்றிலையும் மரங்கள் குடை போல அமைஞ்சு குளி-ர்மை குடுத்துக் கொண்டிருக்குது.
அப்ப எனக்கு முன்னால தூரத்தில அஞ்சாறு பொடியன்கள் நிண்டு கொண்டிருப்பதைப் பார்க்கிறன். அவங்கள் யாரென மதிச்சிட்டன். அவங்கள் முகத்தில சிரிப்பு இல்லை. ஆனால் கவலையும் இல்ல. செருப்பு போட்டிருந்தாங்க.
அவங்களிடம் இயல்புக்கு மீறிய அழுத்தம் இருந்தது. உண்மையில இயல்புக்கு மீறிய அழுத்தம் வாறத்திற்கு அவங்களின் கடந்த காலம் கசப்பான மாதிரி இருக்க வேணும். வாழ்க்கையில நிறைய அடிகள் பட்டிருக்க வேணும். அந்தத் திடகாத்திரமான உடம்புள்ள பொடியன்கள் என்னப் பார்க்கிறாங்க.
நான் புன்னகைக்கிறன்.
அவங்க பதிலுக்கு புன்னகைப்பதா இல்லாட்டி வேண்டாமா என்று யோசிச்சிட்டு கஷ்டப்பட்டு புன்னகைக்கிறாங்க.
அவங்கள தாண்டிப் போறன். என்னையே பார்த்துக் கொண்டிருக்காங்க.

விடிகாலைச் சூரியக் கிரகணத்தின் வெம்மை என்னத் தட்டியெழுப்புது. கட்டிலில் படுத்தபடி ஜன்னலுக்கூடாகப் பார்க்கிறன்.
அந்த நாற்சந்தி, நீரோடையின் வளைவு எல்லாம் தெளிவாகத் தெரியுது.
தூரத்தில விவசாயம் செய்யாம பல வருசமா கைவிட்ட தரிசு நிலத்தில புல்லு முளைச்சு,
அது பச்சைக் கம்பளம் மாதிரி காட்சியளிக்குது. இக்கரைக்கு அக்கரை பச்சை அது மாதிரி என்னவோ?

"குய்... குய்...கீய்.... கீய்.. குய்..." என்று சத்தம் கேட்குது.
திரும்பிப் பார்க்கிறன். பெரிய குரங்கு ஒண்டு ஜன்னலுக்கு வெளியில இருந்து எனக்கு பயம் காட்டுது.
நானும் பதிலுக்கு அது மாதிரிக் கத்துறன்.
பின்ன அந்தக் குரங்கு போயிட்டுது.
ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருக்கிற இந்த ரெண்டு அறை வீட்டுக்கு வந்து ஒரு வாரமாயிட்டுது. மெல்ல மெல்ல ஊரும், இந்த வீடும், குரங்குகளும் பழக்கமாயிட்டுது.
என்ர அறைக்குப் பக்கத்தில இருக்கிற பெரிய ஆல மரத்தில தான் குரங்குகள் தங்குது, தூங்குது.
பகல் நேரத்தில பன்ரெண்டரை மணியிலிருந்து ஒண்ணரை மணி வரையும் சிறு தூக்கம் செய்யுது.
பின்ன குறுாப் குறுாப்பா பிரிஞ்சி விளையாடுவதும், சாப்பிடுவதும், சேர்க்கை செய்து ஓடிப் பிடிச்சும் விளையாடுது.

திடீரென அலறலுடன் சேர்ந்த மாதிரி குரங்கொன்றின் சத்தம் கேட்குது.
அது அசாதாரணமான சத்தம் எண்டு உணர்ந்து கொள்ளுறன்.
வெளிய வந்து பார்க்கிறன்.
குரங்கொன்று மண்டை வெடிச்சி ரெத்தம் வழிஞ்சி நான் பார்ப்பதற்கிடையில் அஞ்சாறு முறை மூச்செடுக்க கஷ்டப்பட்டு செத்துப் போட்டுது.
மழைக்கால இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாதாம். இது எப்பவும் உண்மையில்லை எண்டு எத்தனை பேருக்குத் தெரியுமோ தெரியாது. என்ர யுனிவர்சிட்டி வளவுக்குள்ளேயே கூட மூண்டு குரங்குகள் பிடி பிழைச்சி செத்திருக்கிது. அவை விழுந்து கிடந்தாலும், உடனே முதலுதவிக்கு குரங்குக்கு கிட்ட போகவேலாது.
அது தற்கொலை முயற்சி மாதிரி.
நாம் சத்துருவா, மித்திரனா எண்டு மற்றக் குரங்குகளுக்கு தெரியா.
எல்லாம் சேர்ந்து நாலு வேட்டைப் பல்லாலும், இருபது நகத்தாலும் தாக்கத் தொடங்கினால் அதோ கதிதான்.
இப்போ செத்த குரங்கைச் சுத்தி பதினஞ்சுக்கு மேலே குரங்குகள் நிற்கிது. ஒரு குட்டிக் குரங்கு செத்த குரங்கை சுற்றி கட்டிப் பிடிச்சி அழுது கொண்டிருக்கிது. சின்ன கறுத்த முலைக் காம்பு அதற்கு இருந்தது எனக்கு தெரியுது. அந்தப் பெண் குட்டிக்கு "ஜெனி" என்று பெயர் வைக்கிறன். அதற்கு அருகிலே முலைக்காம்பு நீண்டு தொங்கும் பெரிய குரங்கு செத்த குரங்கை தட்டித் தட்டிப் பார்த்து தன்ர தலையில் கைவைச்சி எதையோ தொலைச்சி விட்டது மாதிரி சோகமாக கண்ணில் நீருடன் நிலத்தையும் மரத்தையும் மாறி மாறி அண்ணாந்து பார்க்குது. செத்த குரங்கை

நன்றி - நூலகத்திட்டம்



ஜெனி கட்டிப் பிடிச்சி அழுது கொண்டிருந்ததப் பார்க்கையில மனசுக்கு கஷ்டமாக இருக்குது.

இந்த பெரிய பெட்டைக் குரங்கு ஜெனியின் தாயாக இருக்கணும் போல.
தாய்க்கு வீணா என்று பெயர் வைக்கிறன்.
செத்துக் கிடக்கும் குரங்கு ஜெனியின் தகப்பனா இருக்கணும் போல.
அதற்கு "விக்கி" என்று பெயர் வைக்கிறன்.
விக்கி எண்டு பேர் வச்சா வகுப்பில அடிக்கடி என்னை கிண்டல் பண்ணும் அந்த தாடிக்காரனை பழி வாங்கியது போல் கூட இருக்கும்.

விக்கியை கட்டிப் பிடிச்சி அழுதுக்கிட்டிருந்த ஜெனியை வீணா தூக்கிக் கொண்டு போயிட்டுது.
அப்பவும் ஜெனி திமிறிக் கொண்டிருக்குது.
ஜெனி ஏன் இன்னமும் அழுது கொண்டிருக்குது?
தன் தகப்பனில்லாத எதிர்காலத்தப் பத்தியா?
அல்லா சாப்பாட்டப் பத்தியா?
தங்குகிற மரக்கிளையைப் பத்தியா?
தகப்பனின் அன்பின் பிரிவைப் பத்தியா?
ஆனா ஏதோ ஒண்டு. ஜெனிக்கும், வீணாக்கும் ஏதோ ஒரு வகையில இழப்பா தான் இருக்கணும் போல. எப்படி விக்கி செத்திருக்கும்? சாப்பாட்டுக்கும், இடத்துக்கும், பெண்ணுரிமைக்கும் போட்டி போட்ட மத்தக் குரங்குகள் ஒரு வேளை ஒரு மரத்திலிருந்து மத்த மரத்திற்கு தாவற ரைம்ல தட்டியும் விட்டிருக்கலாம்.
இங்கே எல்லாம் விரவிக் கிடப்பது போட்டியும், பொறாமையும், அடக்குமுறையும் தானே.
அடக்குதலும், அடங்குதலும் தானே.

ரெண்டு கிழமைக்குப் பிறகு இன்றைக்குத் தான் ஜெனியும், வீணாவும் விளயாடுவத பார்க்கிறன். காரணம் மூணாவது குரங்கு ஆண் குரங்கு. அதற்கு பரா என்று பெயர் வைக்கிறன். மூணும் ஓடிப் பிடிச்சி விளையாடிக் கொண்டிருக்கிது. அதற்குப் பின்ன மூணு நாளுக்கு தொடர்ச்சியா மூணும் ஒருமிக்கத் தான் இருக்கிது. ம்... வீணா பராவை துணையாக்கிக் கொண்டு விட்டது




போல. ஜெனிக்கு புதுசா ஒரு அப்பா கிடைச்சிருக்கார் போல.
வாழ்க்கை என்பதில் பரம்பிக் கிடப்பது.
வளைத்தலும், வளைதலும், மயங்குதலும், மயக்குதலும், துணையாதலும், துணையாக்குதலும் தானே.

மூக்கப் பிடிச்சி ஓடையில் முங்கி முங்கி குளிச்சிக் கொண்டிருக்கிறன். ஒரு நாய் முங்கி எழுந்து நிமிர்ந்து பார்க்கிறன். ஒரு தோணி என்ர தலைக்கு நேர தெரியுது.
அதில ஒருவன் தன்னந் தனியே வலை வீசிக் கொண்டிருக்கிறான்.
அவன் வலை வீசுவதையே பார்த்துக் கொண்டிருக்கன், பதினஞ்சு வருசத்துக்கு முன்னால ஒரு வலைப்பாட்டில எவ்வளவு மீன்கள் படும். ஏன் இப்ப குறஞ்சு போச்சு.
ஒரு வேளை யுத்தம் காரணமாக்கும்.
அந்த மெல்லிய கறுத்த வலை வீசுற தோணிக்காரன், தோணியுடன் என்னை நெருங்குகிறான். ஏதாவது கதைக்கணும் என்பதற்காக மீனப் பத்தி விசாரிக்கிறன்.
நான் அவனோட கதைச்சது அவனுக்கு சந்தோசம் எண்டு அவன் முகத்தைப் பார்த்ததும் புரிஞ்சி போச்சுது.

தோணி, இப்ப எனக்குப் பக்கத்திலிருந்து துறையடிக்கு போய்க் கொண்டிருக்கிது.
பொதுவாக ரெண்டு துறையடிகள் இருக்கிது.
ஒண்டு குளிக்கவும், மத்தது தோணி தள்ளி வைக்கவும். இப்ப, ரெண்டு பெண்கள் அந்த தோணியை நெருங்கி வருகினம்.
ஒரு பெண் நடுத்தர வயது.
மற்றது இள வயது.
ரெண்டு பேரும் அம்மாவும், மகளுமா இருக்கணும் போல.
குளிச்சி வெளியேறிய நான் கரையாலேயே நடந்து அந்தத் தோணித் துறைக்கு போறன்.
இப்ப தோணி துறையில தரைதட்டிட்டுது.
அந்த ரெண்டு பெண்களும் தோணியைப் பிடிச்சி தோணிக்காரனுடன் சேர்ந்து தோணியை கரைக்கு இழுக்கினம்.
நானும் உதவி செய்ய நெனச்சி தோணியில் கை வைக்க அவர்கள் அதனை மறுக்கினம்.
ஒரு வேளை எனக்கு கஷ்டம் தரக் கூடாதாக்கும் எண்டு நெனைக்கிறாங்களோ தெரியாது.

தோணிக்குள் கிடந்த மீன்களை அந்த ரெண்டு பெண்களும் கோர்வையாக்கினம்.
கோர்வையாக்கின கொஞ்ச நேரத்தில அடிமாட்டு விலைக்கு மீன்கள் வில போகுது.
மீன்கள் போன பின் முகத்தில் அவங்களுக்கு திருப்தி இல்ல போல. ஒரு வேள இந்த மீன் வித்த காசு இன்றைய நாளை ஒரு

வேளை ஒப்பேற்ற போதுமோ என்னவோ? தெரியாது. நான் இந்த நடுத்தர வயதுப் பெண்ணிடம் கதை கொடுக்கிறன்.
இளவயதுப் பெண் தனது மகளென்றும், முதலாவது திருமணத்தில் பிறந்ததென்றும், தோணிக்காரன் கணவனென்றும், தனது முதற் கணவனை பத்து வருடத்திற்கு முன்னால சீருடைக்காரர்கள் கூட்டிச் சென்று

கொன்று போட்டார்கள் என்றும் சொல்லுகிறாள்.

பெரிய முள்ளை, சின்ன முள் துரத்த, அது நிமிசத்தை துரத்த, பின் மணியை, நாளை மாதத்தை துரத்தி சென்றுவிட்டன.
நான் இந்த ஊருக்கு வந்து ஆறு மாதமாயிட்டுது. எனது புறஜக்ட் முடிய இன்னும் ஆறு மாதம் இருக்குது.
துரத்தல்கள் மாதங்களுக்கிடையே நடந்து கொண்டிருந்த பிரக்ஞையிலிருந்து விடுபட்ட நேரம் எனது அறைக்கு பக்கத்து ஆலமரத்தில் குரங்குகள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தது. இந்த மரத்தில் ஒரு "ட்ரூப்" இருக்குது. அதில பத்தொன்பது பேர். எல்லோருக்கும் பேர் வைச்சிருக்கன். எல்லாம் என்ர வகுப்புத் தோழர்களின் பேர்களின் சுருக்கம் தான். தெரிந்தால் கொண்டு போட்டு விடுவானுகளாக்கும்.

கிழக்குப் பக்கம் இருந்த கிளை பலமாக ஆடிக் கொண்டிருக்குது.
என்னெண்டு பார்க்கிறன்.
அங்க பராவும், ஜெனியும் இருக்காங்க.
ஜெனி முனகிக் கொண்டிருந்தது.
வர வர பராவின் நடத்தை காட்டுமிராண்டித்தனமாகி வருவதை அவதானித்துக் கொண்டு தான் இருக்கிறன்.
ஒரு முறை ஜெனிக்கு முதுகுப் பக்கமாக கடிச்சி விட்டது.
அதற்கு நான் தான் மருந்து போட்டு விட்டன். இப்ப ஜெனியை, பரா புணருவதற்கு முயல்கிறது.
நாலு காலில் ஜெனியை நிற்க வச்சி, பரா பகீரதப் பிரயத்தனம் எடுக்கிது. ஆனால், ஜெனி ஒத்துக் கொள்கிறாற் போல இல்லையே. பரிதாபமாக பின்னால் திரும்பிப் பார்க்குது.
உடனே பரா ஜெனியின் கழுத்தின் பின் பகுதியை கடித்து விடுகிறது. இப்ப ரத்தம் கசியத் தொடங்க வலியினால் ஜெனி அலறுகிறது. பின் ஜெனி நாலு காலில் நிற்க பரா அதன் முழங்கால் சில்லுக்கு மேலே தன்ர ரெண்டு பெரிய கால வச்சி ஏற.
ஜெனி துவண்டு கீழே விழுகுது.
பின் ஏறி ஜெனியின் பிற்பக்கத்தில் தன் முற்பக்கத்தினால் புணருது.
ஜெனி மீண்டும் துவளத் தொடங்குது.
ஒரு வேளை ஜெனியின் தாய் வீணா இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமோ தெரியாது. இந்தப் பாலியல் வல்லுறவு வீணா இல்லாத நேரங்களில் தான் நடக்கின்றன என்று நான் இரு மாதங்களுக்கு பின்தான் உறுதி செய்து கொள்ளுறன். வாழ்க்கை என்பது நம்புதலும், நம்ப வைத்தலும் தானே. பலதார திருமணம் இல்லாத இந்தக் குரங்கினத்தில் (மொனோகெமி) ஜெனி கர்ப்பமானால், அந்தக் கர்ப்பத்திற்கு காரணம் பரா என்றால் அது மிகவும் முறைகேடான ஒன்றாகத்தான் இருக்கும். பராவின் அட்டகாசம் அந்த "பன்யன் ட்ரூப்பில்" (ஆலமர குறுப்) அளவுக்கு மீறிப் போயிட்டுது. இது "மேல் ஓவர்ரேக்கிங்"காகத் தான் இருக்குமாக்கும்.

கட்டிலில் புரண்டு புரண்டு படுக்கிறன்.
நித்திரை இன்னும் வரவில்லை.
இன்றையுடன் இந்த ஊருக்கு வந்து ஒரு வருசம். இன்றுடன் என்ர புறஜக்ட் முடிஞ்சிட்டுது. நாளைக்கி என்ர யுனிவசிட்டி க்கு நான் போகவேணும்.
புறஜக்ட் ரிப்போட், புத்தகங்கள், உடுப்புக்கள் வைக்கப்பட்ட பையை தூக்கிக் கொண்டு மேற்குப் பக்கமா நாலு கிலோ மீற்றர் நடந்து, அந்த நாற்சந்தியை அடைஞ்சி, பஸ்ஸோ அல்லது வேனோ அல்லது வேறு என்னத்தயோ பிடிச்சி ஜெற்றிக்குப் போய், பத்தரை மணிக் கப்பலைப் பிடிக்கணும்.
ஒரு வருசத்திற்குப் பின்ன இந்த ஊரை விட்டு போறது சந்தோசமென்றாலும், இந்த ஊர், இந்த வீடு, இந்த ஓடை, இந்த ஆல மரம், இந்தக் குரங்குகள் இவைகளை பிரிஞ்சு போறத நினைக்கிற நேரத்தில கொஞ்சம் துக்கமாத்தான் இருக்கிது.
இந்தக் குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் என்ன வித்தியாசம். ரெண்டு வயது குழந்தையும், ரெண்டு வயது குரங்கும் எனக்கு ஒரே மாதிரித் தான் இருக்கினம். அறிவிலும் சமம் தான். எனக்கு இவைகள் மாமாட சித்தப்பாட பிள்ளைகள் மாதிரி. அவைகள் என்னிடம் கேள்விகள் கேட்கும்.

நான் பதில் சொல்வேன்.
நானும் கேட்பன். அவையும் மறுமொழி சொல்லும்.
இந்தக் குரங்குகளின்ர துன்பத்திலும், இன்பத்திலும், சாவிலும் பிறப்பிலும் கலந்து கொண்டிருக்கன்.
இந்த ஆலமரம் இவைகளின் அரண்மனை மாதிரி. அதில் அரசோச்சிய அரசனும், அரசியும், அரசிளங்குமரர்களையும், சேவகர்களையும் எனக்குத் தெரியும்.
மற்றவர்களின் கண்ணுக்கு வாயில்லாத வாலுள்ள வானரங்களாகத் தெரியும்.
எனக்கோ இவற்றின் ஒவ்வொருவரின் கதை கூட நன்றாக இந்த ஒரு வருசத்தில் தெரியும்.
என்ன, மனிதனும் குரங்கும் எவ்வளவு செயல்களிலும், நடத்தைகளிலும் ஒண்டு தான். ஆனால், மனிதன் வாலில்லாத வானரம்.

வையகத்தை
சுருக்கி விட்டவைகளின்
துணையோடு
தொலைந்து விட்ட
வாலைத்தேடி....

என மனசு கவிதை சொல்லத் தொடங்க தூக்கம் கண்களைச் சொருக, தூங்கிப் போகிறன்.

சூரியன் பரவி, பறவைகள் வெளிக் கிளம்பி பொழுது விடிஞ்சி காலை நேரமாகி விட்டிருந்தது.
நான் யுனிவசிட்டி திரும்ப தயாராகி நிற்கிறன்.
எனது பேக்கை தோளில் போடுகிறன்.
அப்போ, மக்களின் கத்தல் ஆரவாரச் சத்தம் மெல்ல மேல்ல கேட்கத் தொடங்குது.
இப்போ தெளிவாக கேட்கத் தொடங்குது.
ஒரு ஆள் அடிபட்டு அலறும் சத்தமும், சவுக்கடியும் கேட்குது.
அப்போ அலறுபவனுக்குத் தான் அடி விழுதாக்கும் என்று நான் நினைக்கையில இப்ப ஆலமரத்திலயும் பாயும் சத்தமும், அரளும் சத்தமும் கேட்கத் தொடங்குது. பல குரங்குகள் ஒண்டாச் சேர்ந்து ஒரு குரங்கை தாக்கத் தொடங்குது என்று புரிஞ்சு கொள்ள எனக்கு கன நேரம் எடுக்கல்ல.

இப்போது ஜன்னலுக்கூடா எனக்கு தெளிவாக தெரிகிற தூரத்தில சனங்கள் வந்து கொண்டிருக்காங்க.
சனக் கூட்டத்திற்கு முன்னால் அந்த திடகாத்திரமுள்ள பொடியன்கள் ஒருத்தனை தலையை மொட்டை அடிச்சி, செம்புள்ளி கரும்புள்ளி குத்தி, சவுக்கால் அடிச்சி நடத்திக்கிட்டு அவன்ர மேலெல்லாம் ரெத்தம் வழிஞ்சி கொண்டிருக்க வந்து கொண்டிருக்கினம்.
என்ன தவறு செஞ்சானோ தெரியாது இவன்.
ஏன் இப்படி அவனைத் தண்டிக்காங்களோ?
அவன்ர கழுத்தில ஏதோ போட் மாட்டி அதில ஏதோ எழுதப்பட்டிருக்குது.
தூரத்தில எண்டதால என்னால வாசிக்க முடியல்ல. ஆளையும் அடையாளம் காண முடியல்ல.
இப்ப என் ஜன்னலுக்கு நேரேயுள்ள முச்சந்திக்குக் கொண்டு வந்து அங்கு இருக்கிற புளிய மரத்தில பொடியன்கள் அவனை கட்டுகினம். ஆ, அவன் நமக்குத் தெரிஞ்சவன்.
அந்தத் தோணிக்காரன்.
கழுத்தில் கிடந்த போட்டை வாசிக்கிறன்.
"எனது மகளை கற்பழித்தவன் நான்."

இப்ப ஆலமரத்தின் கிளையெல்லாம் உடையற மாதிரி சத்தமும், அலறல்களும் கேட்கத் தொடங்குது.
முச்சந்தியைப் பார்க்கப் பிடிக்காமல் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறன். மரத்திலிருந்து ஒரு குரங்கு தலை அடிபட விழுந்து, அஞ்சாறு முறை மூச்செடுக்க கஷ்டப்பட்டு மூச்சுக்கு ஏங்கி மேலெல்லாம் பல்லும் நகமும் பட்டு சதை கிழிஞ்சி ரத்தம் ஓடி செத்துப் போய்விட்டிருந்தது. கிட்டப் போய்ப் பார்த்தன். அது பரா. சத்தம் இல்லாமல் தனது கடைசி மூச்சையும் விட்டுட்டுது.

அப்போது புளிய மர முச்சந்தியிலிருந்து டுமீல்... என்று மூண்டு சத்தங்களும், யாரோ தன்ர தாயை அலறிக் கூப்பிடுகிற சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# தொலைக்காட்சியில் காட்ட திரைப்படங்களைத் தயாரிக்க முடியாது!

– வசந்த ஒபயசேகர

***தொடர்ச்சியாக சிங்களத் திரைப்படத்துறையின் வீழ்ச்சி பற்றி சிங்களத் தொடர்பூடகங்களில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் திஸ்ஸ அபேசேகர அவர்களது சிங்களத் திரைப்படத்துறை பற்றிய அவதானங்கள், மற்றும் இயக்குனர் பிரசன்ன விதானகே, பேட்ரம் நிஹால் ஆகியோரின் திரைப்படத்துறை பற்றிய கருத்துக்கள் என்பன சரிநிகரில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இந்த வரிசையில், வசந்த ஒபேசேகர அவர்களுடைய தற்கால சிங்களத் திரைப்படத்துறை பற்றிய கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன. 'வல்மத்வூவன் திரைப்படத்தின் மூலம் தன் திரைப்பட யாத்திரையை ஆரம்பித்த வசந்த ஒபேசேகர அவர்கள், "தடயம", "மாருதய", "தொரகட மாராவ" போன்ற புகழ்பெற்ற திரைப்படங்களை இயக்கியுள்ளார்.***

**திரைப்படத் துறையின் வீழ்ச்சி பற்றி இன்று பலவாறாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது. நீங்கள் இவ்வீழ்ச்சியை எங்ஙனம் இனம் காண்கிறீர்கள்?**

77-94 காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட அனைத்து திரைப்படங்களுக்கும் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆனால், அத்திரைப்படங்கள் தரம் வாய்ந்த நிலையில் இருக்கவில்லை. அக்காலப்பகுதியில் ஆண்டுக்கு சுமார் 60, 70 திரைப்படங்கள் தயாராகின. ஆனால் வருடத்திற்கு அதிக பட்சம் திரையரங்கில் காட்டக் கூடிய திரைப்படங்களாக சுமார் 25 மட்டுமே இருந்தன. திரையரங்க பற்றாக்குறையை நாம் அன்று எதிர்நோக்கியிருந்ததே இதற்குக் காரணம். அதேபோல் அக்காலகட்டத்தில் தான் திரைப்படங்கள் திரையரங்குக்கு வர வரிசையில் காத்துக் கிடக்க ஆரம்பித்தன. வரையறையின்றி மக்கள் வங்கியால் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதால், எவ்விதத்திலும் காட்சிக்குதவாத திரைப்படங்கள் வருடத்திற்கு சுமார் 40 என்ற அளவில் வெளியாகின. இன்று வரை அத்திரைப்படங்களில் ஒரு சில திரையரங்குக்கு வரவேயில்லை. அவ்வளவுக்கு அத்திரைப்படங்கள் மோசமானவை.

94ன் பின்னர் நாம் மிகவும் சிறந்த 10 திரைப்படங்களுக்கு மட்டும் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். இவற்றைத் தவிர தொலைக் காட்சிகளைப் போன்று வேறு சில காரணிகளும் திரைப்படத் தயாரிப்பில் செல்வாக்கு செலுத்தின எனலாம்.

**தொலைக்காட்சியின் செல்வாக்கு பற்றி நீங்கள் எங்ஙனம் விளங்கப்படுத்துவீர்கள்?**

இந்நிலைமை அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சியின் செல்வாக்கு காரணமாக அந்நாடுகளில் திரைப்படத்துறை வீழ்ச்சியைக் கண்டது. திரைப்படத்துறையின் வருமானம் குறைந்தது. நாம் முகம் கொடுக்கும் இவ்வாறான பிரச்சினையை தற்போது இந்தியாவும் சந்திக்கின்றது.

**திரையரங்குகளை நாடி பார்வையாளர்கள் வராதது. தொலைக்காட்சியினால் அல்ல.சிறந்த திரைப்படங்கள் இல்லாததே எனச் சிலர் கூறுகின்றனரே?**

ஜனரஞ்சக திரைப்படங்கள் தயாரிக்கப்படும் அதேவேளை நல்ல தரத்திலான படைப்புத்திறன் மிக்க திரைப்படங்களும் தயாரிக்கப்பட்ட காலகட்டம் ஒன்று இருந்தது. பத்திராஜ, லெஸ்டர், திஸ்ஸ அபேசேகர போன்றோர் தரமான திரைப் படைப்புக்களை மேற்கொள்ளும் போது, " ஹிங்கன கொல்லோ"(பிச்சைக்காரப் பையன்கள்) போன்ற திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டன. ஆனால் தொலைக் காட்சியின் வரவினால் முழு குடும்பமும் தொலைக்காட்சியைச் சூழ ஆரம்பித்தது. சிறுவர் திரைப்படங்கள், குடும்ப கதைகள் போன்ற படைப்புக்கள் தொலைக் காட்சியினால் தயாரிக்கப்பட்டன. உண்மையில் உலகம் முழுதும் வயது வந்தோருக்கான திரைப்பட அலையொன்று உருவானதும் இந்தத் தொலைக்காட்சி சவாலை எதிர்கொள்ளத்தான் எனலாம். நான் இதை சரியென்று ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

தொலைக்காட்சியும், திரைப்படமும் வெவ்வேறுபட்ட ஊடகங்கள். அத்துறைகளில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியதும் பிரத்தியேகமாகவே எனலாம்.

**தொலைக்காட்சி நாடகங்களுக்கும். திரைப்படங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைப் பற்றிக் கூறுவதாயின்?**



இவ்விரு ஊடகங்களிடையேயும் பரந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இது பற்றி யாரும் பீதி கொள்ளத் தேவையில்லை. மாறாக இவ்விரு ஊடகங்கள் பற்றியும் ஆழமாக கற்று விளங்கிக் கொள்ள வேண்டியதே இங்கு செய்ய வேண்டியுள்ளது.

1824ல் புகைப்படக்கருவி கண்டுபிடிக்கப்பட்டவுடன் அனைவரும் ஓவியக்கலை தனது இறுதி மூச்சை விடப் போகின்றது என எண்ணினர். மாறாக, ஓவியக்கலை புதுப் பரிணாமத்தைத் தேடிச் சென்றது. ஆனால் Portait கலை வீழ்ச்சியுற்றது. ஏனெனில் இக்கலைக்கு பொருந்தக் கூடியவாறு புகைப்படக் கலை விஸ்வரூபமெடுத்தது.

அதன் பின்னர் திரைப்படங்கள் வளர்ச்சியுற்றன. அப்பொழுது மேடை நாடகம் முடிவு காணப் போகின்றது என்றனர். மாறாக மேடை நாடகத் துறை புதிய முனைப்புடன் முன்னேறிச் சென்றது. அதன்பின் தொலைக்காட்சியூடகம் வருகை தந்தது. ஆனால் திரைப்படத்துறை ஸ்தம்பிதம் அடையவில்லை. தொலைக்காட்சி திரைப் படத்துறைக்கு சவாலாக விளங்கும் போது திரைப்படத்துறை புதிய பரீட்சார்த்தங்களுக்கு வழி தேடியது. அன்று "தடயம"(வேட்டை) திரைப்படத்தை இயக்கிய நான் இன்று முற்றிலும் மாறுபட்டிருக்கிறேன்.

**தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் திரைப்படமொன்றை 12. 13 பகுதிகளாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் புதிய யோசனையொன்றை முன் வைத்திருக்கின்றது. இது ஊடகங்கள் இரண்டை வீணடிக்கும் முயற்சியல்லவா?**

உண்மையில், இது பெரிய அழிவு. என்னால் ஒரு போதும் அப்படி திரைப்படங்களை தயாரிக்க முடியாதென நான் கூட்டுத்தாபன தலைவரிடம் கூறிவிட்டேன். தொலைக்காட்சி என்பது உணவு, பானம் அருந்திக் கொண்டோ, பேசிக்கொண்டோ, தொலைபேசியில் பதில் கூறிக் கொண்டோ ரசிக்கக் கூடிய வர்த்தக ஊடகம். அத்தோடு தொலைக்காட்சி ஊடகத்தில் கவனம் சிதறடிக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகம். ஆனால் திரைப்படம் என்பது முற்றிலும் மாறுபட்டது. ஏன் மக்கள் லயனல் வென்ட்டிற்கு ஓவியக் கண்காட்சி பார்க்கச் செல்கின்றனர்? வீடுகளில் ஓவியக்கண்காட்சியை ஒழுங்குபடுத்த முடியாதா? மிகப் பெரிய மாளிகையில் வசித்த பிக்காசோ கூட தனது மாளிகையில் ஓவியக் கண்காட்சியை வைக்கவில்லையே. தனிமைப்பட்டு, வெளியுலகத்திலிருந்து மீண்டு காட்சியை உள்வாங்குவது தான் சிறப்பு எனலாம். உலகப் பிரசித்திப் பெற்ற பிரதி எழுத்தாளரான "சீயிட் பீல்ட் (Syd Field) The Screen Writers problem solver என்ற தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"திரைப்பிரதியொன்றை தொலைக்காட்சிக்கும் திரைப்படங்களுக்கும் எழுதுவதில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அது சரியாக ஆப்பிள் பழத்திற்கும், தோடம் பழத்திற்கும் இருக்கும் வித்தியாசத்தைப் போன்றது. தொலைக்காட்சியூடகத்தில் அனைத்தையுமே வெளிப்படையாகத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. ஆனால் திரைப்படத்துறை இதற்கு முற்றிலும் புறம்பானது. இங்கு கதை காட்சிப் பிம்பத்தினால் கூறப்படுகின்றது. இதனால் நித்திய மௌனம் கூட, கூற முடியாத பல விடயங்களை உணர்த்தி நிற்கின்றது.

தொலைக்காட்சியில் பகுதி பகுதியாக ஒளிபரப்பப்படும் தொலைக் காட்சி நாடகங்கள் முற்றிலும் வேறானவை. பாத்திரங்கள் அன்றாட வாழ்வுடன் முரண்படும் விதத்திலேயே இவை கட்டி எழுப்பப்படுகின்றன. இதனால் பெரும்பாலும் தொலக்காட்சி பார்க்கும் போது அடுத்ததாக என்ன நடைபெறப் போகின்றது என்பது முன்னரேயே தெரிந்துவிடும் வாய்ப்புகள் அதிகம். மேலும் வர்த்தக நோக்கத்துடனேயே தெலலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் திரைப்படம் என்பது அவ்வாறானதல்ல"

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இந்த யோசனைகள், சிறுகதைகளை எழுதிய செக்கோவை நாவல் எழுது என்று பணிப்பதைப் போன்றதொரு செயலாகும். உலக வரலாற்றில் "ஸ்டாலின்" இவ்வாறான கட்டாயப்படுத்தல்களை மேற்கொண்டார். உண்மையில் இது கலைக்கெதிரான தொரு மோசமான தொரு யோசனை எனலாம்.



**திஸ்ஸ அபேசேகர போன்ற திரைப்படத்துறையைச் சேர்ந்த. அத் துறையை நன்கு அறிந்த ஒருவர் இவ்வாறாக யோசனைளை முன் வைப்பதேன்?**

தொலைக்காட்சியில் காட்ட என்னால் திரைப்படங்களை தயாரிக்க முடியாதென நான் தெட்டத் தெளிவாக கூறிவிட்டேன். தொலைக்காட்சியில் ஒரு காட்சி விடுபட்டால் அடுத்ததாக கதையை விளங்கிக் கொள்வது கடினமானதாகவிருக்கும். இவ்விடயத்தில் மற்றவர்களின் அபிப்பிராயத்தைப் பற்றி எதுவும் என்னால் கூற முடியாது. ஆனால் இவ்விடயம் பற்றி மீள ஆராய்ந்து பார்ப்பதாக திஸ்ஸ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**வெளிவரும் புதிய திரைப்படங்களை ஒளிப்பேழைகளாக மாற்றி வெளிநாடுகளுக்கு அனுப்புதல் இந்த யோசனைகளின் இன்னொரு பகுதியாகும். இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

உலகத்தில் 90 வீதமான திரைப்படங்கள் திரைப்படங்களுக்காகவே தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் இந்த வீதம் 100. மிகவும் குறைவானளவு திரைப்படங்களே தொலைக் காட்சிக்கும், ஒளிப் பேழைகளுக்கும் என தயாரிக்கப்படுகின்றன.

**புதிய திரைப்படங்களுடன் ஒளிப்பேழைகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தப் போவதாக கூட்டுத் தாபனம் கூறுகின்றதே?**

இவ்வாறு செய்வதும் சாத்தியமில்லை. மேலும் எத்தனை நம் நாட்டு திரைப்படங்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன? அமெரிக்காவில் திரைப்பட ஒளிப்பிரதிகள் வெளிவர 6 மாதங்களாகின்றன. இஸ்ரேலில் ஒரு வருடம் பூர்த்தியான பின் தான் தொலைக்காட்சியில் அத்திரைப்படம் காட்டப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியாக இந்த நடவடிக்கையினால் இலாபத்தை ஈட்ட முடியாது. இலாபம் பெறக் கூடிய நடவடிக்கையாகவிருப்பின் தனியார்துறை எப்பொழுதோ இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும். இவை வெறும் புனைவுக் கதைகள் மட்டுமே.

**ஆனால். தொலைக்காட்சி தொடர் திரைப்படங்களினால் புதிய திரைப்பட பாரம்பரியம் ஒன்றை கட்டி யெழுப்பலாம் என கூட்டுத்தாபனம் கூறுகின்றதே? இவ்வாறான யோசனைகள் மூலம் புதிய திரைப்பட பாரம்பரியம் ஒன்றை கட்டியெழுப்ப முடியுமா?**

புதிய திரைப்பட பாரம்பரியத்திற்கு ஆழமான கற்பிதங்கள் தேவை. அதேபோல் வாழ்வு நோக்கம் பரந்துபட்டிருக்க வேண்டும்.

திரைப்படம் என்பது சம்பவங்களை படம் பிடிப்பது மட்டுமல்ல. சம்பவத்திற்கு காரணமான சமூக அரசியல், சூழல் என அனைத்து காரணிகளையும் ஆராய்வது அவசியம். இவ்வாறு தான் புதிய பரம்பரையை கட்டியெழுப்ப வேண்டும். என்னுடன் தொடர்பு கொள்ளும் இளைஞர்களிடம் இவ்விடயம் பற்றி கலந்துரையாடுவோம் என பல தடவைகள் கூறியிருக்கிறேன். ஆனால் இந்த யோசனைகள் மூலம் திரைப்படத்துறை தொலைக்காட்சி மயமாவதே நிகழும். இவ்வாறு புதிய பாரம்பரியம் ஒன்றை எப்படி கட்டியெழுப்புவது? கடவுளே, இது வெவ்வேறுபட்ட ஊடகங்கள் என்பதை எவரும் விளங்க மாட்டார்களா? குறிப்பாக நான் இவ்வாறான முறையின் கீழ் திரைப்படங்கள் எதனையும் இயக்கப் போவதில்லை என உறுதி கொண்டிருக்கிறேன்.

**தளுகம ஒலிப்பதிவு நிலையத்தை மீளமைப்பு செய்ய யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அக்காணியில் பல பிரச்சினைகள் காணப்படுவதாக கூறப்படுகின்றதே?**

ஆம். அரசு அக்காணியை பெற்றுக் கொண்ட முறை சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதனால் ரூ 45 மில்லியனுக்கு அக்காணியை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. கூட்டுத்தாபனம் வழக்கில் தோற்றதன் பின்னர் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள பாரிய பிரச்சினை இதுவல்லவே. மிகப் பெரிய பிரச்சினை அக்காணி அமைந்துள்ள பிரதேசம் நீரில் மூழ்கக் கூடிய சதுப்பு நிலம். தளுகம ஒலிப்பதிவு நிலையத்தை மீளமைப்பு செய்வது அநியாயம் என்றே கூறத் தோன்றுகின்றது.

**புதிய உபகரணங்கள். திரைப்படக்கருவிகள் என்பன கொண்ட 3 நிலையங்களை ஸ்தாபிக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது இந்நாட்டு திரைப்படத்துறையில் தொழினுட்ப அபிவிருத்தியை ஏற்படுத்த வழிகோலும் அல்லவா?**

படப்பிடிப்பு கருவிகள் கொண்ட மூன்று நிலையங்களா? கூட்டுத்தாபனம் என்ன 'ஜூராசிக் பார்க்" படத்தையா தயாரிக்கப் போகின்றது? இந்நாட்டு திரைப்படத்துறைக்கு ஒரு நிலையம் தாராளமாகப் போதும். எமது படக் கருவிகளும் அவற்றில் உள்ள வில்லைகளும் 30, 35 ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை. எனது "தீர்த்த யாத்ரா"(தீர்த்த யாத்திரை) படத்தை நான் பழயை கருவியில், வில்லையில் தான் இயக்கினேன். "ச்லெலு வரம" படம் கடந்த வாரம் புதிய வில்லைகளைக் கொண்டு படம்

-19

நன்றி - நூலகத்திட்டம்



# தேர்தலுக்கு முன் யுத்தம் மூலம் தீர்வு!

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து தீவிரப்படுத்தப்பட்டு வந்த வன்னி யுத்தம், ஜூன் மாதம் வரை றிவிபல, ரணகோஷ -1, ரணகோஷ -2, 3, 4 என்று பல நாமங்கள் தனித்து இழுவுண்டு கொண்டு வந்த கடந்த 12ம் திகதி இடம்பெற்ற ரணகோஷ -5வதோடு பெரும் தோல்வியைத் தழுவி பலத்த உயிரிழப்புகளோடு முடிவுற்றது அரசுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



கடந்த டிசம்பரில் முடுக்கிவிடப்பட்ட வன்னி யுத்தம் மூன்று மாகாண சபை தேர்தல்களின் வாக்கு வங்கியை குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

றிவிபல வயம்ப தேர்தலை நோக்காகக் கொண்டிருந்தது. ரணகோஷ 1வதும், 2வதும் மார்ச் மாதம் நடந்த ஐந்து மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து செய்யப்பட்டது. ரணகோஷ 3ம், 4ம் மே- ஜூன் மாதங்களில் இடம் பெற்ற தென் மாகாண சபை தேர்தலை நோக்காகக் கொண்டிருந்தது.

அப்படியானால் தற்போது நடந்து முடிந்த ரணகோஷ -5 எதனை நோக்காக வைத்து ஆரம்பிக்கப்பட்டது என்பது தவிர்க்க முடியாத கேள்வியாகும். ஏனெனில், தேர்தல் ஒன்றும் இடம்பெற்ற வாய்ப்பில்லாத இந்த நேரத்தில், எல்லா மாகாண சபைத் தேர்தல்களிலும் வெற்றிவாகை சூடிய பின்னர் இந்த யுத்தம் முடுக்கி விடப்படுவதற்கான அவசியம் என்ன?



அவசியம் பல அரசுக்கு இருக்கவே இருந்தது. சனல் 9 விவகாரம் அரசுக்கு பல மட்டங்களில் தலைகுனிவையும் அவமானத்தையும் ஒரு பக்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்க, இதற்கிடையில் கொலை செய்யப்பட்ட ரோகண குமாரவின் விவகாரம் பூதாகரமாக அரசின் மேல் கவிந்து கொண்டிருக்க, இதிலிருந்து தப்புவதற்கு அரசுக்கு எந்த வழியும் இருக்கவில்ல யுத்த பேரிகையை முழக்குவதைத் தவிர!

இன்னும் அரசுக்கு தன்னைப் படாடோபப்படுத்துவதற்கு வேறு தேவைகளும் இருந்தன. இருக்கின்றன.

அவற்றில் முக்கியமானது, கதவைத் தட்டிக் கொண்டு நிற்கும் ஜனாதிபதித் தேர்தல். ஜனாதிபதி அம்மையாருக்கு தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான ஆயத்தங்கள் பல தேவைப்பட்டன. தனது பக்கமிருந்து நழுவிக் கொண்டுபோகும் சிறுபான்மையினரின் வாக்குகளை இழுத்துப் பிடிக்க, சமவாய்ப்பு சட்டவாக்கம் முன்வைக்கப்பட்டு, தமிழாசிரியர்கள் நியமனம் பற்றிய வாக்குவாதத்தினால் அது இப்போ தொங்கிப் போய்கிடக்கிறது. இருந்தாலும் அம்மையாருக்கு சிங்கள மக்களை எப்படி தன்பக்கம் இழுக்கலாம் என்பது பற்றி நன்கு தெரியும். அதை அவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார். அதனால் அவர் "சந்திரனில் இருந்து அரசி கொண்டு வருவோம்" "ரூபா 35.0க்கு பாண் தருவோம்" என்றெல்லாம் அறிவிக்கலாம். இதற்கு 'பராக்' கூறுவதுபோலவே அரசாங்கத்தின் ஐந்து ஆண்டு நிறைவு வைபவம் தாடை தம்பட்டம், தேரோட்டம் போன்ற காட்சிகளை நிகழ்த்திக் காட்டிற்று.

இவற்றின் மத்தியில் தான் கடந்த 12ம் திகதி ஞாயிறு அதிகாலையில் ரணகோஷ - 5 முன்னெடுக்கப்பட்டது. உண்மையைச் சொல்லப் போனால் உயர் மட்டங்களில் இருந்த இராணுவ அதிகாரிகள் எவரும் இந்த யுத்தத்தை விரும்பவில்லை என்றே தெரியவருகிறது.

ஆனால், பாவம் அவர்கள்! அவர்களால் இதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போனதற்குக் காரணம் இப்படையெடுப்புக்கு காரணமாய் இருந்தவர் எல்லாருக்கும் பெரியவராக இருக்கும் 'தளபதி'யற்ற தளபதியாக இருப்பவரே! இவரது நோக்கம் இது காலவரை கைப்பற்றப்பட்ட காட்டுப் பிரதேசங்களோடு இன்னும் 100 கிலோ மீற்றரைச் சேர்த்து விட்டால் எல்லா விஷயங்களும் "சுபமாக"வும் ஜெயமாகவும் முடிந்துவிடும் என்பதே. ஆனால், எதுவும் நாம் நினைப்பதுபோல் நடந்து விடுவதில்லையே! அரசுக்கு ஏற்பட்ட இப்பின்னடைவு, பெரிய 'தளபதி' எதிர்பார்த்ததற்கு மாறாக அமைந்துவிட்டதால் இனி கதவைத் தட்டிக் கொண்டிருக்கும். தேர்தலுக்குள் மீண்டும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

எம்.பி.எம்

## பாவம் லட்சுமி

இன்று-
கற்பைப் பற்றி யாரும் கதைப்பதாய் இல்லை.
காரணம்,
விபச்சார விடுதியில் எவரும்
கற்பை எடுத்துப் போதிப்பாரோ!
அரசு திரை நீக்கும் ஜனநாயக அரங்கில்
ஒவ்வொரு நிகழ்வும் விபசார அளிக்கை!

பாதுகாப்பெனும் கருவறையுள்ளே
வன்புணர்வான நிர்வாண லட்சுமி!
புனர்வாழ்வுக் கோப்பையுள்
சூறையாடப்பட்ட லட்சுமியின் சொத்துக்கள்!
இதன் பக்கவிளைவின் பங்காளராய்
நானும் நீயும்!

லட்சுமி சிந்திய சிலதைப் பொறுக்கி
ஒப்பந்தம் செய்த ஒரு சிலர் எம்போல்
கட்டிலில் இருந்து காலாட்டிய படி.
'சொலோ' போனோடு காரில்
சிரித்துக் கதைத்தபடி.
இவர்களின் அட்டை உறிஞ்சலில்
ஒவ்வொரு பிரஜையும்
தம்மைத் தக்க வைக்க
கற்பை இழந்து சோரம் போதல்

மார்க்சீயம் என்றும் இலக்கியம் என்றும்
பெண்ணியமென்றும் ஆத்மீகம் என்றும்
பட்டிமன்றச் சொற்பொழிவென்றும்
தொங்கவிடப்படும் மறைப்புகளுள்ளே
வன்புணர்வான நிர்வாண லட்சுமி!

இந்த லட்சணத்தில்
பெண்களுக்கென்றே பிரத்தியேகமாக
முதுகெலும்போடு முளைக்கிற ஒன்றாய்
கற்பை உருவகித்தகுப்பை ஓவியங்கள்
பற்றி எரிய அதன் முன்
எம் நிழலாட்டம்!

மு.பொ.



## அழி.....

உயிரைத் தாங்கிய
ஒவ்வொரு ஜீவனும் (-உடலும்)
ஓடுகிறது. - நடிக்க
வேகம் -
வேசங்களாய்.

1 நிதானமாய் - அற்றதாய்
2 பலமாய் - இழந்ததாய்
3 வெகுளியாய்-..............
4 நிழலாய் - நிஜமாய்
5 இன்னும் இன்னும்.

பொய்.
பொய்க்குப் பொய்யாக,
உமிழ்ந்து துப்பு.
இன்பம் கிடைப்பதாய் இருக்க,
- நடிப்பு
புரிந்தும் புரியாததுமாய்
அசைகிறது.
உயிர்.

ஜெபா
10.08.1999

நன்றி - நூலகத்திட்டம்



## கேள்விகேட்ட...

டாக்களினால் சுடப்பட்டுள்ளனர் என்றும், வன்னியில் மொத்த வியாபாரம் நடக்கிறது, இங்கு சில்லறை வியாபாரம் ஆரம்பமாகி இருக்கிறது என்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

மேலும், அவர் பொலிசார் துப்பாக்கிகளை வைத்திருப்பது தேங்காய் துருவுவதற்கல்ல என்றுக் கூறி நடந்து முடிந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நியாயப்படுத்துவது போல் பேசிக் கொண்டிருந்தார்.

காயப்பட்ட இளைஞர்களில் பாய்ந்த வேட்டுக்களில் பெரும்பாலானவை அவர்களின் மார்பு, முகம் என்பவற்றிலேயே அதிக காயங்களை ஏற்படுத்தி இருக்கக் காணப்பட்டது. கலகங்களின் போது பொலிசாரினால் பிரயோகிக்கப்படும் வேட்டுக்கள் இடுப்பின் கீழ்ப் பகுதியை குறி வைத்திருக்க வேண்டும். இது வழமைக்கு மாறாக அமைந்திருப்பது கவனத்தில் கொள்ளப்பட வெண்டும் என மறு நாள் ஹர்த்தாலின் போது வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததோடு இது ஒரு மனித உரிமை மீறும் செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

சுட்டுக் காயப்படுத்தப்பட்ட இள்ளைஞர்கள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பரிதாபமான நிலைமையையும் பொருட்படுத்தாது மறு நாளே கொழும்பு சென்று , இத்துயர சம்பவத்தினால் தன் மீது கறைகள் படியாதவாறும், குற்றங்காணாத வாறும் உண்மையை திரிபுபடுத்தி அரச செய்தி ஊடகங்களினுாடாக மும்மொழிகளிலும் விளக்கமளித்தார் எனவும் பிரசுரங்களில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தன.

முஸ்லிம் கட்சியின் தலைவர் சேகு இஸ்ஸதீன் சம்பவ தினத்தன்று ஊரில் இல்லாதிருந்தார் என்பதும், இது நடைபெற்று சுமார் இருபது நிமிடங்களுக்குப் பின்னரே அவர் கொழும்பில் இருந்து அக்கரைப்பற்று வந்து சேர்ந்தார். ஆயினும், முஸ்லிம் காங்கிரசின் கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தார் எனக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுதலையாகி உள்ளார்.

இது மாத்திரமின்றி மேலும் 22 பேர் இதே குற்றத்திற்காகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்தனர். பின்னர் இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

மேற்குறித்த அனைவர் மீதும் சாதாரண சட்டத்தின் கீழல்லாது அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இந்நிலைமைகள் இவ்வாறிருக்க, மாற்றுக் கட்சிகள் செல்வாக்குப் பெறாது தடுப்பதற்காக அஷ்ரஃபும், அவரது சகாக்களும் திட்டமிட்டே இத் துணிகர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர் என எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் அக்கரைப்பற்று மாணவர் ஒன்றியம் ஓர் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தது. இந்த நடவடிக்கை திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு ஆதாரமாகச் சில சான்றுகளையும் இத்துண்டுப்பிரசுரம் முன் வைத்திருக்கிறது. அது தெரிவிக்கும் காரணங்களும் அவ்வளவு இலகுவாகப் புறக்கணிக்கப்படக் கூடியவையல்லல.

எது எவ்வாறிருப்பினும் கூட்டமொன்றில் கூச்சலிட்டுத் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர் என்ற ஒரே காரணத்திற்காகத் தனது சொந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மீதே மனிதாபிமான வரையறைகளை மீறியதாகவும், அடிப்படை உரிமைகளில் ஒன்றான கருத்து வெளிப்பாட்டுரிமையினை மறுதலிப்பதாகவும் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினை நியாயப்படுத்த முனைந்த அமைச்சர் அஷ்ரஃப்பின் செயற்பாடு , எதிரே வரப்போகின்ற தேர்தல்களின் போது காங்கிரசின் செல்வாக்கு நிலையை உயர்த்தும் நோக்கத்திற்கு நிச்சயம் ஒரு சவாலாகவே இருக்கப் போகிறது!

**அபூ பலாஹ்**

# தமிழும் தன்னிய...

கருதப்படுகின்றது. இந்த முறையில் மூலவுரையின் கருத்து முழுமையாக உள்வாங்கப்பட்டு எந்த மொழியிலும் தங்கியிராத ஒரு உலகப் பொதுக் குறியீட்டு முறையில் பிரதிநிதித்துவப்படுகின்றது. இந்த வகைத் தொகுப்புக்களினால் மொழிபெயர்க்கப்படுவதற்கு, ஒவ்வொரு மொழிக்கும் அதன் வசனத்திலிருந்து கருத்தைப் பகுத்தறியவும், ஒரு கருத்திலிருந்து அதை வெளிப்படுத்தும் வசனத்தைப் பிறப்பிக்கவும் கூடிய கட்டளைத் தொகுப்புக்கள் இன்றியமையாதது. இந்த வகைத் தொகுப்புக்களை உருவாக்குதல் மிகக் கடினமான பணியாகும். ஆனால், ஒரு புதுமொழியைத் தொகுப்பில் இணைப்பது இலகுவானதாகும்.

### தமிழும் – கணனி மொழிபெயர்ப்பும்



தகவல் புரட்சி யுகத்தில் இணையத்தின் பாரிய வளர்ச்சியும், தமிழ் பேசும் மக்களிடையே கணனி, அதன் பயன்பாடு குறிப்பாக இணையத்தின் பயன்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு மேலோங்கி வருகின்றது. ஆனாலும் இணையத்திலுள்ள அபரிதமான தகவல் களஞ்சியங்கள் வேறு மொழிகளில் குறிப்பாக, ஆங்கிலத்தில் சேமிக்கப்பட்டிருப்பதால் இணையத்தின் முழுமையான பயனைச் சகல தமிழ் பேசும் மக்களும் பெற்றுக் கொள்வதில் தடங்கல் ஏற்படுகின்றது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக ஆங்கிலம் போன்ற மொழிகளிலிருந்து தமிழுக்கும், அதேபோலத் தமிழிலிருந்து வேறு மொழிகளுக்குமான மொழிபெயர்ப்புத் தேவை இன்று பாரிய அளவில் உணரப்படுகின்றது. ஆனாலும் மனித மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில் இருப்பு, கேள்வியிலும் விட மிகக் குறைவாகவேயுள்ளது. இதனால் கணனி மூலமான தானியங்கி மொழிபெயர்ப்பு மென்பொருள் தொகுப்புக்கள் உருவாக்கப்பட வேண்டிய தேவையினைத் தமிழ்க் கணனிக் கல்விமான்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இத்தகைய மொழிபெயர்ப்புத் தொகுப்புக்கள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகளில் குறிப்பாகச் சிங்களம், இந்தி, மலையாளம் போன்ற மொழிகளுக்கு விஸ்தரிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

இத்தகைய தேவையை நன்கு உணர்த்த இலங்கையின் 'தமிழ் இணையம் 2000' கருத்தரங்கு ஏற்பாட்டாளர் குழுவினர் இந்தக் கருத்தரங்கில் ஆராயப்படவுள்ள விடயங்களாகக் குறிப்பிட்டுள்ள 12 விடயங்களுள் ஒன்றாகக் 'கணனி மூல மொழிபெயர்ப்பை' அடையாளம் கண்டுள்ளார்கள்.

கணனியைத் தமிழ் மூலம் பயன்படுத்தும் செயற்பாடுகள் இன்னமும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே உள்ளன. குறிப்பாகத் தமிழ் மொழியிலிருந்து அல்லது தமிழ் மொழிக்கான கணனி மூல மொழிபெயர்ப்புச் சாத்தியமாவதற்கு உலகமெங்கிலுமுள்ள தமிழ்க் கணனி வல்லுனர்கள் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். அதேவேளை இந்த ஆராய்ச்சியில் தற்பொழுது ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுடைய முயற்சிகள் ஒன்றிணைக்கப்படுவது இந்தத் தொழிற்பாட்டை விரைவாக்கும்.

ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கு ஒரு வரி வடிவ உரைப்பகுதியைக் கணனி மூலம் மொழிபெயர்ப்பதற்கான ஆராய்ச்சி இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் ஆரம்ப கட்ட அறுவடையாக 'மொழி உதவியாளன்' என்ற மென்பொருள் தொகுப்பு உருவாக்கப்பட்டது. இது சிறிய மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கில வசனங்களைத் தமிழில் மொழிபெயர்க்கக் கூடியது.

உதாரணமாக:-
Subject + Verb (The boy had gone)
Subject + Verb (BE) + Complement (He is a boy)
Subject + Verb + Object (The dog chased a cat)

போன்ற வடிவங்களிலுள்ள வசனங்களைத் தமிழில் மொழிபெயர்க்கக் கூடியது. இதைத் தவிர மேற்படி வசன வகைகளில் நேபயவளைநஇ "யளளளைந மற்றும் ஆழனயட ஏநசடிள ஐயும் ஏற்றுக் கொண்டு மொழிபெயர்க்கும். இது ஆங்கில மொழியில் சில பிழையான 'இலக்கண வடிவங்களையும் சுட்டிக் காட்டும். 'இதில் சொற்பதனிடலுக்கான நியமங்களின் தேவை கருதிச் சில Mark - Up tagsl அறிமுகம் செய்கின்றது. இது பந்தியொன்றை மொழிபெயர்க்க முனைந்தாலும் அதிலுள்ள வசனங்களிடையேயுள்ள தொடர்பைக் கருத்திலெடுப்பதில்லை. இந்தத் தொகுப்பானது கணனி மூலம் ஆங்கில - தமிழ் மொழிபெயர்ப்புச் சாத்தியமென்பதை நிரூபிக்கும் ஒரு மாதிரியே தவிர ஒரு முழுமையான மொழிபெயர்ப்பு மென்பொருள் தொகுப்பு அல்ல. (இந்தத் தொகுப்பில் பெறப்பட்ட சில வெளிப்பாடுகளைக் படத்தில் காண்க.)

இறுதியாக, தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கணனி மூலம் முழுப் பயன்பாட்டையும் பெற்றுக் கொள்ள மொழி ஒரு தடையாக இருக்காதிருப்பதை உறுதிப்படுத்தக் கணனி மூல மொழிபெயர்ப்பில் அறிஞர்கள் ஆர்வமுடன் ஈடுபட ஊக்குவிக்கப்பட வேண்டும். இனி வெளிவரும் தொகுப்புக்கள் அனைத்தும் தமிழ் இணையம்- XXXX இனால் வரையறுக்கப்படும் நியமங்களைக் கட்டாயம் பின்பற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்.





**போரும் பெயர்வும்**
தாமரைத்தீவான்
கவிதைத் தொகுப்பு

வெளியீடு:- அருள் வெளியீடு
37/7, மத்திய வீதி,
உவர்மலை

விலை :- 55 / =

**கலைக்குரல்கள்**
வி.என்.எஸ்.உதயசந்திரன்

இலங்கை வானொலி கலைப்பூங்கா நிகழ்ச்சியில் ஒலிபரப்பான 21 முக்கிய கட்டுரைகளின் தொகுப்பு

வெளியீடு:-
பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

விலை :-250 / =






**வினாக்காலம்**
தேவகாந்தன்
நாவல்
(கனவுச்சிறையின் இரண்டாம் பாகம்)

வெளியீடு:- இலக்கு வெளியீடு
87, பஜனைக் கோவில் தெரு,
சென்னை, இந்தியா

விலை :- 75 / =

**பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்**
கலாநிதி க.கைலாசபதி
கட்டுரைத் தொகுப்பு

வெளியீடு:-
குமரன் பப்பிளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வழி குமரன் காலனி, 7வது தெரு,
வடபழனி, சென்னை - 600026

விலை :- 48 / =







**ஒப்பியல் இலக்கியம்**
கலாநிதி க.கைலாசபதி
கட்டுரைத் தொகுப்பு

வெளியீடு:-
குமரன் பப்பிளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வழி குமரன் காலனி, 7வது தெரு,
வடபழனி, சென்னை - 600026

விலை :- 65 / =

**தமிழ் நாவல் இலக்கியம்**
கலாநிதி க.கைலாசபதி
திறனாய்வுக் கட்டுரைகள்

வெளியீடு:-
குமரன் பப்பிளிஷர்ஸ்
3, மெய்கை விநாயகர் தெரு,
வழி குமரன் காலனி, 7வது தெரு,
வடபழனி, சென்னை - 600026

விலை :- 70 / =



நன்றி - நூலகத்திட்டம்






## அதை வெளியிட்டது சக்தியே!

சரிநிகர் 180வது இதழில், சக்தியின் வெளியீடான "புது உலகம் எமை நோக்கி" எனும் சிறுகதைத் தொகுதியில் இருந்து மறுபிரசுரம் செய்யப்பட்ட "நீயும் ஒரு சிமோன் தி போவா போல" எனும் சிறுகதையை வெளியிட்டமைக்கு நன்றிகள்.

அச்சிறுகதைக்கான அறிமுகக் குறிப்பில் "புதுஉலகம் எமைநோக்கி" தொகுதி, சக்தி சஞ்சிகையை வெளியிட்டு வந்த புலம்பெயர்ந்த பெண்கள் அணியினரால் வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படி ஒரு அணியால் அது வெளியிடப்படவில்லை, அது "சக்தி"யாலேயே வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சக்தி "வெளிவந்து" கொண்டிருக்கும் ஒரு சஞ்சிகை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

நிற்க, அச்சிறுகதை காவேரியால் எழுதப்பட்டதாக எம்மால் வெளியிடப்பட்ட தொகுதியில் பிழையாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதே பிழை சரிநிகரிலும் வந்துவிட்டதற்கு நாம் பொறுப்பு. அச்சிறுகதை லக்ஷ்மி கண்ணன் எனும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணால் எழுதப்பட்டு சக்தியில் சில வருடங்களுக்கு முன் வெளிவந்திருந்தது. இதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

ஆசிரியர், சக்தி, நோர்வே.

## ஒரு தமிழ் 'ராஜபக்ஷ' இல்லையே!

'செம்மணி' விவாகரத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்தமைக்காக தமிழ் பேசும் மக்கள் ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். எவருடைய பயமுறுத்தலுக்கும் அஞ்சாது உண்மையை உரைத்தமைக்காக அவரை எவ்வளவும் பாராட்டலாம்.

காணாமல் போன தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதும், அரசாங்கத்தின் முகத்திரையும் கிழிக்கப்பட்டது ராஜபக்ஷ என்ற மனிதர் வாய் திறந்ததனாலேயே. இந்த நேரத்தில் கிழக்கு மாகாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் போன முஸ்லிம்கள் பற்றியும் சிந்திப்பது நியாயமானது.

1990ல் பலநூறு முஸ்லிம்கள் கடத்தப்பட்டார்கள். களுவாஞ்சிக்குடிக்கும், காத்தான்குடிக்கும் இடையில் வைத்துக் கட்டத்தப்பட்டவர்களில் எனது தந்தையும் ஒருவர். அவர் புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று அவருக்காகத் தொழ வேண்டுமென்று புதைக்கப்பட்ட இடம்பற்றி எத்தனையோ தமிழ் மக்களிடம் விசாரித்துப் பார்த்து விட்டேன். ஒரு 'ராஜபக்ஷ' கூட முன்வரவில்லை.

கடத்தப்பட்டதாக நம்பப்படும் பகுதியைச் சேர்ந்த எனது மொழி சகோதரர்களிடம் விசாரித்து மனம் தான் நொந்ததே தவிர புதைக்கப்பட்ட இடம் பற்றி இன்னமும் தெரியவேயில்லை.

இந்த வகையில் தான் சொல்கிறேன். 'ராஜபக்ஷ' துணிச்சலான உணர்வுள்ள மனிதர். தான் குற்றம் செய்த போதும் அதற்காக வருந்தி, பல உண்மைகளை வெளிக்காட்டியதன் மூலம் தனது தவறுகளுக்கு பரிகாரம் தேடியவராகிறார். அவரை நான் வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

ஏ.எம்.முபாறக் ,
கிழக்கு மாகாணம்

## யாழ்: உறுப்பினர்கள் இல்லாத உள்ளூராட்சி சபைகள்

யாழ். குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர்கள் கடந்த இரண்டு வருடமாக பதவி ஏற்காத காரணமாக பல உள்ளூராட்சி சபைகள் கோரம் இல்லை என்பதால் கூடவில்லை. சில உள்ளூராட்சி சபைக்கு தலைவர்கள் கூட இன்னும் நியமனம் செய்யப்படவில்லை.

இதனால் ஆணையாளரின் விசேட அதிகாரத்தின் பெயரில் மட்டுமே இவ் உள்ளூராட்சி சபைகள் செயல்படுகின்றது.

பதினெழு உள்ளூராட்சி சபைகளில் 234 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதும் நூற்றுக்குமேற்பட்ட உறுப்பினர்கள் பதவி இழந்துள்ளனர். இதேசமயம் இரு மாநகர சபை மேயர் உட்பட பதினொரு உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்தனர். யாழ் மாநகர சபைக்கு கூட இன்னும் மேயர் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை சில உள்ளூராட்சி சபைகளின் கூட்டங்கள் சபை உறுப்பினர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சி அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

நிமலராஜன்

## ஆக்கிரமிப்பின்....

இருப்புக்கு வேட்டு வைத்தவர் டீ. எஸ். அவர்கள். அன்றிலிருந்து, இன்றுவரை இந்த மழுப்பல் அரசியலே சிங்களப் பேரினவாதத்தின் தமிழர் மீதான அனைத்து ஒடுக்குமுறைகளையும் மூடிமறைத்து வெற்றிக்கொள்ள உதவுகின்றது என்பது கண்கூடு. இங்கே கல்லோயாக் குடியேற்றத் திட்டம் - Sinhalese என எழுதப்பட்டமை சிங்களவர்ளுக்கே உரித்துடையது என்பதை வெளிப்படையாகக் காட்டும் செயலே. நிகழ்வுகள் நிதர்சனமான பின்பும் கூட "முறிந்த பனை" டீ. எஸ். அவர்களுக்கு வக்காலத்து வாங்கியது வரலாற்றுக் குருட்டுத்தனமாகும்.

இன்றும் தமிழர்கள் வாழும் பகுதியான அம்பாறை சென்ரல் காம்ப் பகுதி, கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் அரசால் தமிழர்களுக்கு வழங்கப்பட்டதல்ல. சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டமிட்ட இந்தப் பகுதியில் தமிழர்கள், அப்போதைய பட்டிருப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கத்தின் தூண்டுதலின் பேரிலும், ஆலோசனையின் பேரிலும் குடியேறியவர்கள் ஆவர்.

இவ்வாறு குடியேறியவர்களைத் துரத்தியடிக்கும் முயற்சி நடைபெற்றபோது அதனைப் புத்திசாதுரியமாகத் தடுத்து நிறுத்தியவரும், இராசமாணிக்கம் அவர்கள் தான். தமிழ் அரசியல் தலைமைகள் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தால் விபரீதமான விளைவுகளைத் தமிழர்கள் எதிர்கொள்வர் எனத் தெரிந்திருந்தும், பெரியளவான எதிர்ப்பினைக் காட்ட முடியாதவர்களாக இருந்தபோது, சென்ரல் காம்ப் பகுதியில் இரவோடிரவாகத் தமிழ் பேசும் மக்களைக் குடியேற்றியவர் இராசமாணிக்கம் அவர்கள். இவ்வாறு குடியேறிய தமிழர்களை அப்புறப்படுத்த அப்போதைய நீர்ப்பாசன, வலுவள அமைச்சர் சி. பி. டி. சில்வா மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோர் பட்டிருப்புப் பாராளுமன்ற உறுப்பினரான இராசமாணிக்கத்தையும் அழைத்துக் கொண்டு சென்ரல் காம்ப் பகுதிக்குச் சென்று இறங்கியது. இறங்கிச் சென்ற குழுவில் முன்சென்றவர் இராசமாணிக்கம் அவர்கள். அவர் அங்கு கூடிய மக்களை நோக்கி அரசாங்கத்தின் உத்தரவைக் கூறிய போது ஆத்திரம் கொண்ட மக்கள் இராசமாணிக்கத்தையும், அமைச்சர் குழுவினரையும் வாள், பொல்லு., கத்திகளுடன் துரத்தி வந்தபோது இராசமாணிக்கம் ஜீப்பில் பாய்ந்தேறித் தொகுதி எம். பீ. எனக்கே இந்த நிலை என்றால், உங்களுக்கு எப்படியிருக்கும் எனக் கூறி அனைவரையும் திருப்பி அழைத்துச் சென்றார்.

ஆகவே, இதிலிருந்து நாம் உணரக்கூடியது, கல்லோயாக் குடியேற்றத்தில் தமிழர்கள் குடியேறுவதற்கு அரசால் சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேயில்லை என்பதாகும். டீ. எஸ். அவர்களின் சிங்கள மேலாதிக்கச் சிந்தனை குறித்தும், தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்விடப் பிரதேசங்களை அபகரிக்கும் திட்டங்களை டீ. எஸ். திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினார் எனும் கருத்தில் முரண்பட்டுச் செல்லும் முறிந்த பனையின் விளக்கம் மீளாய்வின்றி நிராகரிக்கப்பட வேண்டியது.

தமிழர் தாயகப் பகுதி மீதான நில ஆக்கிரமிப்பின் தொடக்கம் கல்லோயாத் திட்டமே. ஆகவே தமிழ்ப் பேசும் மக்களின் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் திட்டங்களுக்குரிய தந்தையும் டீ. எஸ். அவர்களே.

- எஸ். ஜி. ராகவன்

## தொலைக்காட்சியில்.....

பிடிக்கப்பட்டது. இரண்டிலும் பாரிய வேறுபாடுகள் இல்லை. சத்யஜித் ரே " பதேர் பாஞ்சாலி"யை பழைய கருவியினாலேயே படம் பிடித்தார். இந்தப் படக் கருவிகளின் ஒரு நிலையம் வெளிநாட்டுத் திரைப்படங்களை படம் பிடிக்க பயன்படவிருக்கின்றது. இலங்கைக்கு வருடத்திற்கு எத்தனை பேர் புதிய திரைப்படங்களை தயாரிக்கவென வருகின்றனர். அவர்கள் இலங்கைக்கு வரும் போதே தேவையான கருவிகளை தம்முடன் எடுத்து வருகின்றனர். இதன்படி ரூ. 350 மில்லியன் செலவில் யாருக்காக படப்பிடிப்புக் கருவிகளை கொள்வனவு செய்யப் போகிறார்கள். இவற்றுக்கான வரிப்பணம், இதர கருவிகள், அவற்றுக்கான பராமரிப்பு என்பனவற்றுக்கு அதிகம் செலவாகும். குறைந்தது இவற்றை 4, 5 ஆயிரம் ரூபாக்களுக்கு தான் வாடகைக்கு விட வேண்டி வரும். ஆனால் இலகு விலையில் இங்கு - ரூ. 300 க்கு - பெற்றுக்கொள்ள முடியும். நல்ல கலைத்துவமான திரைப்படங்களை எடுப்பவர்கள் 4, 5 ஆயிரத்திற்கு இவற்றை வாடகைக்கு பெறுவார்கள். மாறாக ஜனரஞ்சக படங்களை எடுப்பவர்களுக்கு இது இலாபகரமானதா? இதன்படி இந்த யோசனை எந்தவித பிரயோசனமும் அற்றது.

**உண்மையில் யார் இவ்வாறான யோசனைகளை முன்வைக்கிறார்கள் எனக் கூற முடியுமா?**

திஸ்ஸ அபேசேகர அவர்களை நான் நம்புகிறேன். ஆனால் யாரோ ஒருவர் பாரிய ஊழல் நடவடிக்கையொன்றுக்கு தயாராகி வருகின்றார் என்றே கூறவேண்டும். உண்மையில் படப்பிடிப்புக் கருவிகளை கொள்வனவு செய்ய அவ்வளவு பணத்தை செலவழிக்கத் தேவையில்லை. 185 வில்லையிட்டு திரைப்படத்தை எடுத்தால் அத்திரைப்படத்தை இலங்கைத் திரையரங்குகள் 5,6ல் மட்டுமே காட்ட முடியும். சில தியேட்டருகளில் இருக்கும் புரொஜக்டர்கள் இரண்டாம் உலக போரின் போது கொண்டு வரப்பட்டவை. இவற்றுக்கு 133 வில்லைகளில் தான் திரைப்படங்களை எடுக்க முடியும். ஆனால் 133 வில்லையில் படம் பிடித்து வெளிநாட்டு அரங்குகளில் காட்டும்போது ஆரம்பமும், முடிவும் வெட்டி நீக்கப்பட வேண்டியதாகிறது. இலங்கையில் 185 வில்லை திரைப்படங்களுக்கு ஏற்ப திரையரங்குகளை ஒழுங்குபடுத்த பாரிய செலவு ஏற்படாது. ஆனால் இந்த அடிப்படை பிரச்சினையை கூட தீர்க்காது 350 மில்லியன் செலவில் கருவிகளை இறக்குமதி செய்யப் போகிறார்கள்.

**அவ்வாறெனில் புதிய இரசாயன கூட யோசனைகளையும் எதிர்க்கின்றீர்களா?**

அந்த இரசாயனகூடத்தை வெளிநாட்டிலிருந்து இலவசமாகக் கொண்டு வந்தாலும் பரவாயில்லை. இவ்வாறான இரசாயன கூடத்தை பராமரிக்கக் கூடியளவிற்கு திரைப்படங்கள் இலங்கையில் தயாராவதுமில்லை. அதைவிட தயாரிக்கப்படும் 10, 15 படங்களை இந்தியாவிற்கு அனுப்புதல் இலாபகரமானது. அவ்வாறு செலவழிக்கப்படும் பணத்தை சேமித்து அதன் வட்டியைக் கொண்டு இலங்கை திரைப்படத்துறையை தாராளமாகக் காப்பாற்ற முடியும்.

**2000ம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதி விருது வைபவத்தினைப் பற்றி யாது சொல்ல விரும்புகிறீர்கள்?**

2000ல் திரைப்படத்துறையை காப்பாற்ற முடியாது. மாறாக புதைகுழியில் போட்டு மூடிவிடலாம்.

திரைப்படத்துறை தொடர்பான அமைச்சரவை தீர்மானமும், யோசனைகளும் ஆழமாகக் கற்று சமர்ப்பிக்கப்பட்டவையல்ல. அவை சுயநலத்தோடு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள். சிலவேளை திஸ்ஸ அபேசேகரவினாலும் எதுவும் செய்ய முடியாதிருக்கும்.

தற்போது திரைப்படத்துறையில் நிலவும் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் என்பன பற்றி ஜனாதிபதிக்கு ஓர் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தோம். ஆனால் அந்த அறிக்கைக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

## சிறந்த....

என்கிற கருத்து என்னிடம் பலமாகவே உள்ளது. இந்தத் தொடர்ச்சியான உரையாடல் திருப்தி தரக் கூடிய அளவுக்கு எம்மிடம் இப்போது இல்லை.

புலம்பெயர்ந்த தளத்தில் இருப்பவர்களுள் சுரேஸ் கனகராஜாவும் செல்வா கனகநாயகமும் முக்கியமானவர்கள். தமிழ் இலக்கியங்களிலும் நவீன தமிழ்க் கவிதையுடனும் மிகுந்த தொடர்பாக இருக்கிறார்கள் இவர்கள். எனினும், இவர்களுடைய எழுத்துக்கள் ஆங்கிலத்திலேயே வெளியாகின்றன. சமகால இலக்கிய விமர்சனங்களின் போக்குகள் அங்கு நிகழ்கின்ற கருத்துப்போர் என்பவற்றின் பின்னணியில் தமிழ் இலக்கியத்தின் நிலை குறித்து அவர்களுடைய கவனம் இன்னும் முற்றாகத் திரும்பவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

## ஜனாதிபதி...

என்று கத்தினார்.

இந்தச் சண்டையைத் தீர்த்து வைக்கும் முகமாக ஏனைய மந்திரிமாரை பேசும்படி அங்கிருந்த சிலர் சைகையால் பணித்தும் எல்லோரும்- அலவி மௌலானா உட்பட அமைதி காத்தனர்.

இறுதியில் பிரச்சினைக்குப் பரிகாரமாகச் சமவாய்ப்புச் சட்டமூலம் பற்றி ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், றிச்சர்ட் பத்திரன, ரத்னசிறி விக்ரமநாயக்க, பற்றி வீரக்கோன், ஜோன் அமரசிங்க, அலவி மௌலான ஆகியோர் இடம்பெற்றவராவர்.

சிறுபான்மை மக்களுக்குக் கண்துடைப்புச் செய்யக் கூடிய சின்ன விஷயங்களில் கூட இனத்துவ அடிப்படையில் இயங்கும் இந்த அமைச்சரவை தானா சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போகிறது? இந்தப் பின்னணியில் அரசு முன்னெடுக்கப் போவதாகக் கூறிய பொதி விவகாரம் எத்தகைய 'புலுடா' என்பதை விளங்கிக் கொள்ள எந்தச் சாமான்யனுக்கும் பிரத்தியேக அறிவு தேவையில்லை!

நன்றி - நூலகத்திட்டம்




# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04 - 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.


அக்கரைப்பற்று துப்பாக்கிச்சூடு:

# கேள்வி கேட்ட மக்களுக்கு முஸ்லிம் காங்கிரசின் பதில்!

கடந்த 14-09-99ம் திகதி வெள்ளி மாலை அக்கரைப்பற்று சதொச முன்றலில் இடம் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரசாரக் கூட்டமொன்றின் போது அக்கறைப்பற்றைச் சேர்ந்த ஒன்பது இளைஞர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகாயப்படுத்தப்பட்டனர். சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞர்கள் சிகிச்சை பெற்று வெளியேறிய கையோடு, காங்கிரசின் கூட்டத்தைக் குழப்ப முயன்றனர் என்ற குற்றத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு அக்கரைப்பற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் பிணையில் விடுதலையாகினர்.

பெரும் பரபரப்பையும், அதிருப்தியையும் ஏற்படுத்திய இச்சம்பவத்தைக் கண்டித்து, சம்பவம் இடம் பெற்ற மறுநாளே அக்கரைப்பற்று மக்களால் ஒரு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தகர்கள் கடைகளை மூடியும், மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலும் இத்துயர சம்பவத்திற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அன்றைய தினம் போக்குவரத்து முழு அளவில் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டதோடு அரச அலுவலகங்களும், வங்கிகளும் மூடப்பட்டுக் கிடந்தன.

இச்சம்பவம் தொடர்பாக எழுந்துள்ள கண்டனங்களுக்கும், விமர்சனங்களுக்கும், அதிருப்திகளுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைமைப்பீடமும் முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இது, காங்கிரசின் வளர்ச்சிப் போக்கிற்கு ஆரோக்கியமான ஒரு குறிகாட்டியாக நிச்சயம் இருக்கப் போவதில்லை என்பது அக்கரைப்பற்றெங்கும் பரவலாகப் பேசப்பட்டு வரும் கருத்தாடல்களில் இருந்து புலப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை வேரூன்றி வளரச் செய்த இடங்களில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் ஊர்களில் அக்கரைப்பற்று பிரதானமானது. காத்தான்குடியைத் தொடர்ந்து இங்கும் காங்கிரசின் போக்குப் பற்றிய சந்தேகங்களும், சர்ச்சைகளும் பரவலாக மக்களால் எழுப்பப்பட்டு வருகின்றன. 14-09-99ல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது, முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான மக்களது நிலைப்பாட்டினை மேலும் வலுவடையச் செய்திருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தின் கடந்த கால அரசியல் வரலாற்றினை நோக்கும்போது ஏறத்தாழ முப்பத்து மூவாயிரம் மக்கள் வாழ்கின்ற அக்க்றைப்பற்றுப் பிரதேசமானது அரசியல் அதிகார சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டதாகவும், அபிவிருத்தி நடவடிக்கைகளில் புறக்கணிக்கப்பட்டதாகவும் நீண்ட காலமாய் இருந்து வந்திருக்கிறது. முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்தின் பின்னால், இப்பின்டைவுகளிலிருந்து இப்பிரதேசம் மீட்சி பெறும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே மேலோங்கி இருந்தது. எனவே தான் 89 பொதுத் தேர்தல் முதல் 94ல் அரசையே தீர்மானிக்கும் சக்தியைக் காங்கிரஸ் பெறும் வரை இப்பிரதேச மக்கள் காங்கிரசைப் பெருவாரியாக ஆதரித்து நின்றனர். ஆயினும், இப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்புகளையும், அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பிடத்தக்க எந்தவொரு பாரிய பணியினையும் செய்து தருவதில் அமைச்சர் அஷ்ரஃப் கரிசனை காட்டத் தவறியிருந்தார் என்பது இப்பகுதி இளைஞர்களின் குற்றச்சாட்டு.

அக்கரைப்பற்று பொலிசாரின் பாவனையில் இருக்கும் அக்கரைப்பற்று பொது நூல் நிலையத்திற்குப் பதிலாக ஒரு நூல் நிலையத்தை அமைத்துத் தருவதிலோ, எந்தவித அடிப்படை வசதிகளும் அற்றிருக்கும் அக்கரைப்பற்று வைத்தியசாலையைக் கவனிப்பதிலோ, ...தேச சபை, ...த்தியசாலை என்பனவற்றின் அமைவினால் குறுகிப் போன விளையாட்டு மைதானத்திற்கு மாற்றீடாக ஒரு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருவதிலோ கலவர காலத்தின் போது முற்றாக எரித்து நாசமாக்கப்பட்ட அக்கரைப்பற்றுப் பொதுச் சந்தையை அமைத்துத் தருவதிலோ அமைச்சருக்கு ஆர்வம் இருக்கவில்லை என மக்கள் குறைப்படத் தலைப்பட்டனர். இந்த எண்ணம் படிப்படியாக வலுப் பெறத் தொடங்க இப்பிரதேசத்தில் உள்ள பொதுமக்களும், குறிப்பாக இளைஞர்களும் காங்கிரசின் மீது அதிருப்தியும் ஆத்திரமும் கொள்ளத் தொடங்கினர்.





இந்நிலையிலே தான் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்தவரும், முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தவிசாளருமான சேகு இஸ்ஸதீன் தனது முஸ்லிம் கட்சிக் கூட்டங்களை இப்பிரதேசம் முழுவதும் நடாத்தி முஸ்லிம் காங்கிரசுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கி விட்டிருந்தார். கழியோடைக்குத் தென்புறத்தேயுள்ள பெரும்பாலான பிரதேசங்கள் அமைச்சர் அஷ்ரஃப்பினால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருகிறதென்ற மக்களின் சந்தேகம் இப்பிரசாரக் கூட்டங்களினால் வலியுறுத்தப்பட்டது.

மேலும், முஸ்லிம்களின் அரசியல் தீர்விற்கு அதிகாரத்தில் உள்ள அரசுடன் அரசியல் ஒப்பந்தங்கள் செய்வதற்குப் பதிலாக, மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்படாத தேர்தல் ஒப்பந்தங்களைச் செய்து தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்குமான பதவிகளை உறுதி செய்து வருகிறார் என்றும், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடனும், அமைப்புகளுடனும் நல்லுறவை ஏற்படுத்தி, தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையே புரிந்துணர்வை உண்டு பண்ணும் முயற்சிகளையோ, இரு இனங்களும் பரஸ்பரம் இணைந்து கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளையோ தேடிக் கொள்வதில் அஷ்ரஃப் அக்கறை காட்டவில்லை என்றும் இஸ்ஸதீன் கூட்டங்களில் பேசப்பட்டு வந்தன.

இதனால் எழுச்சியுற்ற இப்பிரதேச இளைஞர்கள் தமது உள்ளக் கிடக்கைகளை பல துண்டுப் பிரசுரங்களின் மூலம் கடந்த ஆறு மாத காலமாக வெளிப்படுத்தி வந்தனர். இவற்றில் அநேகமானவை காங்கிரஸ் மீது கேள்விக் கணைகள் தொடுப்பதாகவும், காங்கிரசின் செயற்பாடுகளை விமர்சிப்பதாகவும், தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன.

மேற்குறித்த உணர்வலைகளினால் கிளறப்பட்டு முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக இப்பிரதேச இளைஞர் சிலர் கொதித்தெழுந்திருந்த இந்த சந்தர்ப்பத்தில் தான் மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்ற கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் காங்கிரஸாரால் திடுதிப்பென மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி கூட்டத்தில் காங்கிரஸ் மீதும் அதன் தலைவர் மீதும் தமக்குள்ள சந்தேகங்களுக்கான தீர்வுகள் கிடைக்குமென்றும் பின்தள்ளப்பட்டிருக்கும் தமது பிரதேச அபிவிருத்திகள் தொடர்பான முற்போக்குத் திட்டங்கள் முன்மொழியப்படும் என்றும், சாத்தியப்பாடான அரசியல் தீர்வு பற்றி பேசப்படும் என்றும் எதிர்பார்த்துப் பெருந்திரளாக மக்கள் கட்சி வேறுபாடின்றிக் கூட்டத்திற்குச் சமூகம் தந்திருந்தனர்.

ஆனால், கூட்டத்தை ஆவலுடன் செவிமடுக்க வந்தோரின் எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாகவே கூட்டத்தில் பேச்சுக்கள் இடம் பெற்றன. இப்பேச்சுக்கள் அனைத்தும் எதிர்க்கட்சிகளைச் சாடுவதாகவும், அக்கட்சிகளைச் சார்ந்தோரை விமர்சிப்பதாகவுமே அமைந்திருந்தன். குறிப்பாக காங்கிரசின் உள்ளூர் தலைவர் ஒருவர் இளைஞர்களைக் காடையர்கள், காவாலிகள் என்று விழித்ததோடு மட்டும் நின்று விடாது, அவர்களது பிறப்பு பற்றியும் அவதூறாகப் பேசினார். தமது எதிர்பார்ப்புகளுக்கு விடை கிடைக்கும் என்ற எண்ணத்தில் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தோரில் பலர் தமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் கூச்சலிடுவதன் மூலம் வெளிப்படுத்தத் தொடங்கினர். மற்றுமொரு குழுவினர், தாம் தெளிவு காண விரும்பிய கேள்விகளடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றினை கூட்டத்தில் விநியோகிக்க முனைந்தனர். இதனைத் தடுக்க முயன்ற பொலிசார் இளைஞர்கள் மீதும், வயோதிபர்கள் மீதும் தமது கைவரிசையினைக் காட்டினர். துண்டுப் பிரசுரங்களைப் பறித்து வீசினர். இதனால் கூச்சல் மேலும் அதிகரித்தது.

இத்தருணத்தில் பேச வந்த முன்னாள் ஐ.தே.க நியமன எம்.பி. எம்.ஐ. உதுமாலெப்பை கூச்சலிட்ட மக்களைப் பார்த்து மேலும் கூச்சலிடும்படி கூறிக் கொண்டிருந்தாரென்று கூறப்படுகிறது. அப்போது, அமைச்சர் அஷ்ரஃப்பும் மேடையில் பிரசன்னமாயிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. கூச்சல் கட்டுங்கடங்காமல் உரத்து ஒலித்துக் கொண்டிருந்த இந்தச் சந்தர்ப்பத்திலேயே பொதுமக்களை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப் பட்டன.

இச்சந்தர்ப்பத்தில் அஷ்ரஃப்பின் மெய்க்காப்பாளர்கள் பொது மக்களைச் சுட்டு விட்டனர் எனச் சிலரும், பொலிசாரால் பொது மக்கள் சுடப்பட்டுள்ளனர் என வேறு சிலரும் கூறிக் கொண்டு அல்லோலகல்லோலப்பட்டு சிதறி ஓடுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த இளைஞர்களைத் தமது தோள்களில் சுமந்து கொண்டு மக்கள் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மக்கள் பெரும் ஆத்திரத்துடனும், அதிருப்தியுடனும் இருந்த இந்த வேளையில் தான் அமைச்சர் அஷ்ரஃப் கூட்டத்தில் எழுந்து உரையாற்றத் தொடங்கினார். அவ்வமயம் மக்களில் பெரும்பாலானோர் கூட்டத்தை விட்டும் கலைந்து சென்றிருந்தனர். அவரின் உரையில், இரண்டு இளைஞர்கள் இறப்பர்த் தோட்-

18 ⇦


தமிழ்நாட்டின் பெண்ணிய செயற்பாட்டாளர்களில் ஒருவரும், சமூகவியல் அறிஞருமான

## தமிழ் நாட்டில் பெண்கள் இயக்கங்கள் அன்றும் இன்றும்

எனும் தலைப்பிலான உரையும் கலந்துரையாடலும் எதிர்வரும் 13 ஒக்டோபர் 1999 அன்று மார்கா நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கும் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும் கீழ்வரும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்க:

பெண்கள் தொடர்பூடகக் குட்டமைப்பு:
இல.12 1/1, அஸ்கொட் அவெனியு , கொழும்பு 05,
தொலைபேசி இலக்கம்: 595224, 597738
மின்னஞ்சல்: womedia@sri.lanka.net


வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் , இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03, அச்சப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 28.09. 1999